காந்தியப்படிப்பு—இராமலிங்கர்
தத்துவத்துறை,
வெளியீடு—1.

12497

# காந்தியடிகளும் கார்ல்மார்க்சும்

பேராசிரியர் மா. பா. குருசாமி, எம். ஏ., டி. ஜி. டி.,
நெறியாளர்,
காந்தியப்படிப்பு - இராமலிங்கர் தத்துவத்துறை,
மதுரைப் பல்கலைக் கழகம்.

மதுரைப் பல்கலைக் கழகம்
மதுரை-625021
1975.

# காந்தியடிகளும்
# கார்ல்மார்க்சும்

காந்தியப்படிப்பு — இராமலிங்கர்
தத்துவத்துறை.
வெளியீடு—1.

# காந்தியடிகளும் கார்ல்மார்க்சும்

பேராசிரியர் மா. பா. குருசாமி, எம். ஏ., டி. ஜி. டி.,
நெறியாளர்,
காந்தியப்படிப்பு-இராமலிங்கர் தத்துவத்துறை,
மதுரைப் பல்கலைக் கழகம்.

மதுரைப் பல்கலைக் கழகம்
மதுரை-625021
1975.

உரிமை ஆசிரியர்க்கு

காந்தியப்படிப்பு-இராமலிங்கர் தத்துவத்துறை,
வெளியீடு-1.

முதற்பதிப்பு : அக்டோபர் 1975.

விற்பனை :

செயலாளர்,
மதுரைப் பல்கலைக் கழக நடுவண்
கூட்டுறவு பண்டகசாலை,
மதுரை-625021.

" Gandhiji and Karl Marx "

By. Prof. M. P. Gurusamy, M. A., D. G. T.,
Director of Gandhian Studies
and Ramalingar Philosophy.

வெளியீடு : மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை-625021.

அச்சீடு : வெற்றிவேல் பிரிண்டர்ஸ், மதுரை-625001.

# துணைவேந்தர் அணிந்துரை

மதுரைப் பல்கலைக் கழக காந்தியப்படிப்பு-இராமலிங்கர் தத்துவத் துறையின் நெறி யாளர் உயர்திரு மா. பா. குருசாமி அவர்கள் எழுதிய இந்த ''காந்தியடிகளும் கார்ல் மார்க்சும்'' என்னும் ஆய்வு நூல் ஒரு சிறந்த படைப்பாகும். நூலின் தலைப்பே பலரின் சிந்தனைகளைத் தூண்டுவதாக இருக்கிறது. கார்ல் மார்க்சும் அண்ணல் காந்தியடிகளும் இருவேறு உலகங்களைச் சார்ந்தவர்களாகக் காணப்பெறினும் அவ்விரு பெரியார்களுக் கிடையே பல தத்துவ ஒற்றுமைகள் இருப் பதை மிகச் சீரிய முறையிலே ஆசிரியர் புலப்படுத்தியிருக்கிறார். காந்தியம் சர்வோ தயத்திற்கு வழிகோலுவது என்றால் மார்க்சியம் பொதுவுடைமைக்கு வழி வகுப்ப தாகக் காணப்படுகிறது. சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களும் பிற்படுத்தப்பட்டவர் களும் முன்னேற அறமும் அன்பும் ஒருங்கே இணைந்த அடிப்படையில் ஏற்றமிகு திட்டங் கள் பலவற்றை அரசியல் செந்நெறியின் மூலமும் பொருளாதார ரீதியிலும் தீட்டித் தந்துள்ள காந்தியடிகளுடைய ஒப் பற்ற தன்மை தெள்ளத்தெளிய இந் நூலில் கூறப்பட்டுள்ளது. கார்ல் மார்க்ஸ் அவர்கள் அண்ணல் காந்தியடிகளைப் போல ஒரு லட்சியவாதியாகத் தனது தத்துவத் திற்கு வரலாற்றுச் சான்றுகளோடு சீர்மை யான ஒரு நிறை உருவத்தைக் கொடுத் திருக்கின்றார் என்பதை மறுக்கமுடியாது. அவர் கண்ட கனவு உலகெங்கும் மனிதச் சமுதாயம் ஒருபொதுவுடைமைச்சமுதாயமாக

மிளிர வேண்டும் என்பதே. ஆனால் அந்தச் சமுதாயத்தை உருவாக்கப் பல சதிகளும் இடர்பாடுகளும் ஏற்படுகின்ற காரணத்தினால் அவைகளைக் களைய புரட்சியும் பாட்டாளிகளின் சர்வாதிகாரமுமே வழிமுறைகளாகும் என்று மார்க்ஸ் கூறுகின்ற அந்தத் தத்துவ நெறி காந்தியத்திற்கு நேர்மாறானது என்பது யாவரும் அறிந்ததே. எப்படியும் அதைக் காணக் கையாளப்படும் முறைகளிலே ரத்தம் சிந்தப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று மார்க்ஸ் கூறுகிறார். ஆனால் அண்ணல் காந்தியடிகளோ அதே வெற்றியை அறநெறி மூலமாகத் தான் பெறவேண்டும், அறம் பிறழ்ந்த வழிமுறைகள் மனித சமுதாயத்தைப் பண்பற்ற சமுதாயமாக நிலைகுலையச் செய்து விடும் என்று திண்ணமாக வலியுறுத்துகின்றார். இன்முறைக்கும் வன்முறைக்கும் இடையே ஏற்படும் போராட்டத்தில் இறுதியில் இன்முறையே ஒரு நாள் வெற்றிக்கொடி நாட்டும். விநோபாபாவே அவர்கள் கூறுவதை எடுத்துக்கூறிய கூற்றோடு ஆசிரியர் தன் ஆய்வு நூலை முடிப்பது நோக்கற்பாலது. அதாவது ''கங்கை மிகவும் பெரிதாகி, பெரிதாகிச் சென்று இறுதியில் கடலில் கலந்து விடுவதைப் போல, ஒரு நாள் சர்வோதயத்தில் மார்க்சியம் கலந்து விடுமென்று நான் நம்புகின்றேன்'', என்று அவர் கூறியுள்ளது ''அன்பின் வழியது உயிர்நிலை'' என்கின்ற திருவள்ளுவக் கோட்பாட்டுக்கு ஒத்ததாக அமைவதோடு மட்டுமல்லாமல் இன்வழி தான் தமிழகம் தொன்றுதொட்டு கடைப்பிடிக்கும் வழியாக நிலைத்துநிற்கும் என்று நான் நம்புகின்றேன். சிறந்ததொரு படைப்பாக அளிக்கும் இந்நூலாசிரியர் திரு. மா. பா. குருசாமி அவர்களுடைய சீரிய முயற்சியினை நான் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

மதுரை,
21. 10. 75.

சை. வே. சிட்டிபாபு



"காந்தியடிகளும் கார்ல்மார்க்சும்" நூலினை எழுதக் கூறி, கையெழுத்துப்
படியையும் ஓரளவு பார்த்துத் திருத்திய பல்கலைக்கழக முன்னாள்
துணைவேந்தர் டாக்டர் மு. வரதராசனாரின் நினைவஞ்சலி
யாக இந்நூலைப் படைக்கின்றோம்.

# முன்னுரை

மதுரைப் பல்கலைக் கழகத்தில் காந்தியப் படிப்பு - இராமலிங்கர் தத்துவத்துறை என்ற தனித்துறை செயல்பட்டு வருகின்றது. இந்தத்துறை கொடைவள்ளல் பொள்ளாச்சி உயர்திரு நா. மகாலிங்கம் அவர்கள் அளித்துள்ள மானியத்தின் மூலம் நிறவப்பெற்றது. இத்துறை ஆய்வுப்பணியை மேற்கொண்டிருப்பதோடு கூட, காந்தியம், வள்ளலார் தத்துவம் பற்றி படிப்பு வட்டக் கூட்டங்களையும் கருத்தரங்குகளையும் நடத்திக்கொண்டிருக்கின்றது.

மதுரைப் பல்கலைக்கழக காந்தியப்படிப்பு - இராமலிங்கர் தத்துவத்துறையின் ஆய்வு நூலாக ''காந்தியடிகளும் கார்ல் மார்க்சும்'' என்ற இந்த நூல் வெளிவருகின்றது. இந் நூலுக்கு நான் முதலில் அளித்த தலைப்பு ''மகாத்மாவும் மார்க்சும்'' என்பதாகும். நூலைப் படித்து இதற்கொரு சிறப்புரை வழங்க வேண்டி பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், தமிழ்ப் பேரறிஞர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களிடம் கையெழுத்துப் படியைக் கொடுத்திருந்தேன். கையெழுத்துப் படியில் அவர்கள் நூலின் தலைப்பை மாற்றி, ''காந்தியடிகளும் கார்ல்மார்க்சும்'' என்று எழுதியுள்ளார்கள். நூலை முழுக்கப் படித்து இதற்கோர் அணிந்துரை கொடுப்பதற்கு முன்னால் அவர்கள் இயற்கையெய்தி விட்டார்கள்.

இந்த ஆய்வு நூலை எழுதத்தூண்டிவழிகாட்டிய டாக்டர் மு. வ. அவர்களின் நினைவஞ்சலியாக இந்நூல் அமைகின்றது.

பத்தொன்பதாம் - இருபதாம் நூற்றுண்டுகளில் உலகை வாழ்விக்கத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட கார்ல் மார்க்சையும் காந்தியடிகளையும் ஒப்பிட்டு அவர்கள் வழங்கிய தத்துவங்களின் இயல்புகளையும் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் விளக்கிக் கூறுவதே இந்நூலின் நோக்கமாகும். இருவரையும் ஒப்பிட்டு ஆங்கிலத்தில் பல நூற்கள் வந்திருக்கின்றன. தமிழில் இவர்கள் இருவரையும் பற்றி ஒப்பீட்டு நோக்கில் எழுதப்பட்ட முதல் நூல் இதுவேயாகும்.

காந்தியப் படிப்பு - இராமலிங்கர் தத்துவத் துறை சார்பில் படிப்பு வட்டக் கூட்டங்களையும், கருத்தரங்குகளையும் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றோம். அவற்றில் படிக்கப்பட்ட கட்டுரைகளையும் காலப்போக்கில் தொகுத்து நூலாக்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

இந்நூலைப் படித்து காந்தியப்படிப்பு-இராமலிங்கர் தத்துவத்துறைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் அணிந்துரை வழங்கியிருக்கின்ற நமது பல்கலைக்கழகத் துணைவேந்தர் உயர்திரு. சை. வே. சிட்டிபாபு எம். ஏ. பி. டி., அவர்களுக்கு மனங்கனிந்த நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

மா. பா. குருசாமி,
நெறியாளர்,
காந்தியப்படிப்பு-இராமலிங்கர் தத்துவத்துறை,
மதுரைப் பல்கலைக்கழகம்

# உள்ளடக்கம்


அணிந்துரை

முன்னுரை

1. காலத்தேவை 1

2. வாழ்ந்த வாழ்க்கையும் வளர்ந்த தத்துவமும் 6

I வாழ்க்கையும் தத்துவமும்

II மார்க்சின் வாழ்க்கை

III மகாத்மாவின் வாழ்க்கை

IV ஒற்றுமைகளும் வேற்றுமைகளும்

3. காந்தியம் அல்லது சர்வோதயம் 28

4. மார்க்சியம் அல்லது பொதுவுடைமைத் தத்துவம் 52

5. காந்தியமும் மார்க்சியமும்-ஓர் ஒப்பீட்டுக் கண்ணோட்டம் 70

I சில வேற்றுமைகள்

II வேறுபாடுகளுக்கு அடிப்படை

III வரலாற்றைப் பற்றிய கண்ணோட்டம்

IV இனப் போராட்டம்

V தனிமனிதனும் சமுதாயமும்

VI நாகரிகமும் பண்பாடும்

VII மாற்ற வழிமுறைகள்

VIII புதிய சமுதாயத்தின் நோக்கம்

IX சமுதாய அமைப்பு

X தொழில் வளர்ச்சி

XI பொருளாதாரத்தை நெறிப்படுத்துதல்

XII உற்பத்தியும் நுகர்வும்

XIII சமயமும் அறமும்

XIV அரசியல் அமைப்பு

6. உலகைக் காக்கும் நெறி 111

மேற்கோள் - துணை நூற்கள் 116

சிறப்புச் சொற்கோவை 120

# 1. காலத் தேவை

"பிரியும் – உறையும் – மறையும் – பொருள்கள்
அழிவ தில்லை; ஒழிவ தில்லை;
மாறுதல் நிகழ்ச்சி தேறுதல் கூடும்
மாறுதல் வழியே வீறும் புதுமை
பழமை புதுமையாய்ப் பழகுதல் உண்மை;
மாற்றம் புரியும் ஆற்றல் எதுவோ?
சிந்தனை செய்க; சிந்தனை செய்க;
'வளர்ச்சி' என்றே உணர்ச்சியில் படுமே"[1]

— திரு. வி. க.

நாம் ஓர் அருமையான கால கட்டத்தில் வாழ்கின்றோம். புத்துலகை அமைக்கின்ற பணி நாம் வாழ்கின்ற காலத்தில் தொடங்கப் பெற்றிருக்கின்றது. இதனை நம்மில் பலர் இனங்காண முடியாதவர்களாக இருக்கின்றனர். ஏற்பட வேண்டிய மாற்றத்தை முதலில் உணர வேண்டும். எண்ணுகின்ற எண்ணம் திண்ணியதாக இருந்தால் எண்ணம் செயல்படக் காணலாம்.

புத்துலகை அமைக்கின்ற பணியைக் காந்தியடிகள் தொடங்கி வைத்தார். நமது நாட்டின் விடுதலைக்கு-மக்கள் இயக்கத்திற்கு—தலைமை தாங்கினார் மகாத்மா. அவர் விடுதலை இயக்கத்தை ஒரு முழுமையான அறப்புரட்சியின் தொடக்கமாக நடத்தினார். வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஊடுருவி நிற்க வேண்டிய உயிரோட்டமாக அறத்தைக் கருதிய அண்ணல் அதனைவிட்டு விலகா

1. வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல், ப. 6.

மல் தனது வாழ்க்கையையும், நாட்டின் போராட்ட இயக்கத்தையும் நடத்திக் காட்டினார்.

வெறும் அரசியல் விடுதலை மகாத்மாவின் குறிக்கோளாக இருக்கவில்லை. அதனைத் தொடர்ந்து வரவேண்டிய மாற்றங்கள், உலகத்திற்கே வழிகாட்டக் கூடிய சத்திய ஒளியில், அகிம்சை வழியில் நமது நாட்டில் வரவேண்டும். அதனைச் செய்து முடிக்கின்ற கடமை-பொறுப்பு-நமது தாயகத்தின் எழுச்சிமிக்க தலைமுறைக்கு உண்டு.

இளந்தலை முறையின் ஒரு பகுதியினரிடம் ஒருவகை மனமயக்கம் காணப்படுகின்றது. அன்பு வழியை விட வன்முறை வழி விரைவில் பயன்தருமோவென்ற மயக்கம் தோன்றுகின்றது. இந்த மயக்கத்திற்கு ஒரு காரணம் அவர்கள் காந்தியடிகளையும் அவரது தத்துவத்தையும் புரிந்து கொள்ளாததேயாகும். மற்றொரு காரணம் மார்க்ஸ் கண்ட தத்துவ அடிப்படையில் வெடித்துக் கிளம்புகின்ற புரட்சிதான் நமது தாயகத்தின் சிக்கல்களைத் தீர்க்குமென்ற தவறான மதிப்பீடு ஆகும்.

உண்மையான—நமக்கேற்ற—மாசற்ற விளைவுகளைத் தரக்கூடிய வழிமுறையை அறிந்துகொள்ள மகாத்மாவையும் மார்க்சையும் ஒப்பிட்டுப் பார்ப்பது இக்காலத்தின் தேவையாக இருக்கின்றது. வியப்பிற்குரியவர்களின் இரண்டு தத்துவங்களையும் அறிந்து, அவற்றின் ஒற்றுமைகளையும், வேற்றுமைகளையும் துல்லியமாக ஆய்வதன் மூலம், நமது நாட்டிற்கும் உலகிற்கும் எது ஏற்புடைய தத்துவம் என்பதைப் புரிந்துக்கொள்ளலாம்.

காந்தியடிகள் தாம் வாழ்ந்த காலத்திலேயே 'உள்ளத்தால் பொய்யா தொழுகி' 'சத்திய சோதனை' செய்ததால் மகாத்மா என்று போற்றப் பெற்றவர். ஆன்மீகத்தை எல்லாத் துறைகளிலும் இணைத்து 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த' அண்ணலோடு கார்ல்மார்க்சை ஒப்பிடுவதை ஆதரிப்பவர்களும், எதிர்ப்பவர்களும் இருக்கின்றனர். இரண்டும் ஒப்பிட முடியாத-ஒப்பிட வேண்டாத தத்துவங்கள் என்று கூறுகின்றவர்களும் உளர்.

காந்தியடிகளை "மகாத்மா" என்றும், கார்ல் மார்க்சை "மாமுனி" (மேதைகளில் மேதை)[1] என்றும் அற முனிவர் வினோபா வர்ணிக்கின்றார். பேரறிஞராக விளங்குகின்ற கார்ல் மார்க்சின் தத்துவத்தையும் காந்தி யத்தையும் மேற்போக்காகப் பார்க்கின்றவர்களுக்கு இரண்டும் ஒன்றுபோல் தோன்றுவதும் உண்டு. இருக் கின்ற வேறுபாடுகளைச் சிறியனவாகக் கருதி ஒதுக்கித் தள்ள எண்ணுபவர்களும் இருக்கின்றனர்.

சிலர் காந்தியத்தையும் (சர்வோதயத்தையும்) பொது வுடைமையையும் கணித முறையில் கீழ்க்கண்டவாறு விளக்க முயன்றிருக்கின்றனர் :-

காந்தியம் —ஆன்மீகம்=பொதுவுடைமை

பொதுவுடைமை—வன்முறை=காந்தியம்

மேற்போக்காகப் பார்த்தால் இந்தச் சமன்பாடுகள் சரியானவை 'போலத்' தோன்றுகின்றன. ஆராய்ந்து பார்த்தால் இரண்டிற்குமிடையில் இன்னும்பல அடிப் படை வேறுபாடுகள் இருப்பதனைக் காணலாம்.

காந்தியடிகளும் கார்ல்மார்க்சும் இந்த உலகில் அல்லற்பட்டு, ஆற்றாது அழுது கண்ணீர் வடிக்கும் ஏழை எளியவர்களை வாழ்விக்கத் தத்துவங்களைத் தந்தவர்கள் என்பதில் கருத்து வேறுபாடில்லை. வாழ்க்கையின் அடித் தளத்தில் எந்திர யுகத்தில் நசுக்கப்பட்டவனைக் காட்சி தரும் மனிதனை இரண்டுபேரும் நோக்குகின்ற முறையும், அவனைக் காக்க, வாழ்விக்கக் கூறிய வழிமுறைகளும் வேறுபடுகின்றன.

கார்ல் மார்க்ஸ் 'உழைப்பாளிகளாக'-இல்லாதவர் களாக இருப்பவர்களை எல்லாம் இணைத்துப் போராடு கின்றவர்களாக மாற்ற ஒரு தத்துவத்தை உருவாக்கினார் சமுதாயத்தில் கடைசி மனிதனாக இருப்பவனைக் கடைத் தேற்றக் காந்தியடிகள் உறுதி பூண்டார். மனித சமு தாயம் முழுமையாக நல்வாழ்வு வாழ வேண்டுமென்ற எண்ணத்தின் மலர்ச்சி சர்வோதயத் தத்துவமாக வடிவம் பெற்றது.

1. Gandhi and Marx (Introduction), p. 15

கார்ல் மார்க்ஸ் உருவாக்கிய பொதுவுடைமைத் தத்துவம் அவரது "சிந்தனையின் விளைவு". அவர் இலண்டன் மியூசியம் நூலகத்தில் ஆய்ந்து, ஆய்ந்து தர்க்க ரீதியாகவும் அறிவியல் சிந்தனையின் உழைப்பாலும் அதை உருவாக்கினார். மார்க்சின் ஆற்றல்மிக்க எழுத்துக்களின் விளைவாகப் 'பொதுவுடைமைச் சமுதாயம்' என்ற நோக்குத் தோன்றியது.

காந்தியடிகளின் தத்துவம் அவர் வாழ்ந்த வாழ்க்கையின், நடத்திய போராட்டங்களின் விளைவாக உருவானது. அவரது எண்ணங்கள் செயலில் முழு உருவம் பெற்றன. சொல்லோவியமாக அவர் தனது தத்துவத்தைத் தீட்டிக் காட்டவில்லை. அவரது சோதனைகளின் முடிவுகள் அவரது தத்துவங்களின் தூண்களாயின. "'காந்தியம்' என்று அப்படி ஒன்றும் இல்லை. எனக்குப் பின்னால் எந்த ஒரு தனிப்பிரிவையும் விட்டுச் செல்ல நான் விரும்பவில்லை. எந்தப் புதிய கொள்கையையோ, கோட்பாட்டையோ உருவாக்கியதாக நான் கூறவில்லை. நித்தியமான சத்தியங்களை நமது அன்றாட வாழ்க்கையிலும் சிக்கல்களிலும் இணைக்க என்னுடைய வழியில் முயன்றதுதான் நான் செய்தது",[2] என்று அவரே கூறிய போதிலும், அவரது வாழ்கின்ற எண்ணங்கள் காலப்போக்கில் உயிரோட்டமுள்ள தத்துவமாக வளர்ந்துவிட்டன.

இன்றைய, எந்திர கதியில் இதயமற்று இயங்கும் அரசியல், பொருளாதார, சமுதாய, சமய அமைப்புக்களின் அசுரப்பிடியிலிருந்து 'மனிதனைக் கட்டிக் காத்தாக வேண்டும். மனிதனும் ஒரு பெரிய எந்திரத்தின் சின்னஞ்சிறு பகுதியாக மாறுகின்ற ஆபத்து ஏற்பட்டு வருகின்றது. முதலாளித்துவம் "பணம்" என்ற மந்திரக் கோலைக் கையில் வைத்துக் கொண்டு மனிதனை ஆட்டிப் படைக்கின்றது. இதனால் முதலாளித்துவத்தை அழிக்க மனிதனை 'மனமற்ற' விலங்காக மாற்றச் சிலர் முயல்கின்றனர். அவர்கள் வளர்க்கின்ற வெறி 'நக்சல்பாரி'யாக நடைபோடுகின்றது.

மனிதன் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை வளர்ந்து - மாறி - வந்திருக்கின்றான். அவனிடம் ஏற்

2. D. G. Tendulkar, Mahatma, Vol. IV, p. 66

பட்டிருக்கின்ற அக, புற மாற்றங்களைச் சரியான முறையில் புரிந்து கொண்டால், இன்றையச் சிக்கல்களுக்கு ஏற்ற வழியைத் தெரிந்து கொள்ளமுடியும்.

மகாத்மாவையும் மார்க்சையும் நமது காலச் சூழ்நிலையில் ஆராய்ந்து பார்ப்பது நல்ல பயனைத்தரும். கார்ல்மார்க்ஸ் (1818-1883) பத்தொன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். மார்க்ஸ் மறைவதற்குப் பதினுன்கு ஆண்டுகளுக்கு முன்பு பிறந்து, பத்தொன்பதாம் நூற்றுண்டில் உருவாகி, இருபதாம் நூற்றுண்டில் (1869-1948) மணம் பரப்பியவர் காந்தியடிகள். இரண்டு பேருக்கும் இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சி ஒரு பொதுவான பின்புலத்தை அமைத்துக் கொடுத்தது. தொழிற்புரட்சியின் விளைவுகளை இரண்டு பேரும் கண்டமுறை வெவ்வேருக இருந்தது.

ஒருவரின் தத்துவத்தைப் புரிந்து கொள்ள அவர் வாழ்ந்த காலச் சூழலை, வாழ்ந்த வாழ்க்கையை, அவரது சிந்தனையில் ஆதிக்கம் செலுத்திய நூற்களை, அவரோடு தொடர்பு கொண்ட மனிதர்களை, அவரது வாழ்க்கையின் நோக்கத்தை அறிந்து கொள்வது தேவையாகும். ஏனென்றுல் இவற்றின் செல்வாக்கை அவர்கள் உருவாக்கிய தத்துவத்தில் காணலாம். ஆகையால், கார்ல் மார்க்ஸ், காந்தியடிகளின் வாழ்க்கை அவர்களுடைய தத்துவப் படைப்பில் எந்த அளவு இடம்பெற்றுள்ளது என்ற நோக்கில் பார்க்க வேண்டும். இருவரிடம் காண்கின்ற அடிப்படை வாழ்க்கை வேறுபாடுகளுக்கும், தத்துவ முரண்பாடுகளுக்கும் தொடர்பு இருப்பதனைக் காணலாம்.

பொதுவுடைமையின் (மார்க்சியத்தின்) அடிப்படைக் கருத்துக்களையும், சர்வோதயத்தின் (காந்தியத்தின்) அடிப்படைக் கருத்துக்களையும், தனித்தனியாக அறிந்து கொண்டு, பின்னர் ஒப்பிடுவது, ஒரு முடிவுக்கு வர உறுதுணையாக இருக்கும்.

நம்மைச் செயலூக்க முள்ளவர்களாக மாற்றுவதற்கு இவ்விரு தத்துவங்களின் ஒப்பீடு பயன்பட வேண்டுமென்பதே இந்த நூலின் தலையாய நோக்கமாகும்.

# 2. வாழ்ந்த வாழ்க்கையும் வளர்ந்த தத்துவமும்

"மலர்தலை உலகம் வளர்ச்சி யுடையது
உலகம் ஒருகுல மாக வளர்ச்சி
மலர்தலைக் காண்க; கண்டு மகிழ்க!"[1]

— திரு. வி. க.

## 1 வாழ்க்கையும் தத்துவமும்

வையத்தை வாழ்விக்க எண்ணி முயல்கின்ற அறிஞர்களும், சான்றோர்களும் தங்களது அறிவாற்றலினாலும் பட்டறிவினாலும் புதிய தத்துவங்களையும்கோட்பாடுகளையும் உருவாக்கித் தருகின்றனர். மேற்போக்காகப் பார்க்கின்றபொழுது இந்தத் தத்துவங்களும் கோட்பாடுகளும் தனித்து நிற்பது போலத் தோன்றுகின்றன. ஆனால் நுணுகி ஆய்ந்தால் அவற்றிற்கும் அவற்றை உருவாக்கியவர்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கும், அவர்கள் வாழ்ந்த காலச் சூழ்நிலைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதனைக் காணலாம். மண் வளம், விதையின் திறன், நீர்ச்செழிப்பு, கவனிப்பு ஆகியவற்றை ஒட்டி விளைச்சல் அமைவதைப் போன்றே, தத்துவம் உருவாவதும் இருக்கின்றது.

காந்தியமும் மார்க்சியமும் இரண்டு தத்துவங்களாக வளர்ந்திருக்கின்றன. காந்தியடிகள் ஒரு தத்துவத்தை

---

1. பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும், ப. 34

உருவாக்க வேண்டுமென்ற 'அறிவுத்தாகத்'தோடு செயல் படவில்லை. தனது வாழ்க்கையையே செய்தியாக்கிய மகாத்மாவின் சொற்களும் செயல்களும் ஒரு வாழ்க்கைத் தத்துவத்தை உருவாக்கின. சிந்தனைவாதியான கார்ல் மார்க்ஸ் உலகை மாற்றியமைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, அறிவாற்றலினால் ஒரு தத்துவத்தை உருவாக்கினார். இரண்டு தத்துவங்களையும் புரிந்துகொள்ள, அவற்றை உருவாக்கும் வகையில் அவர்களது வாழ்க்கை எப்படி அமைந்திருந்ததென்பதைச் சுருக்கமாக அறிந்து கொள்ளலாம்.

## II மார்க்சின் வாழ்க்கை

ஏறத்தாழ கடந்த நூற்றாண்டுக் காலமாக அரசியல் பொருளாதாரத் தத்துவத் துறையில் 'எரிமலை' போன்ற தனது புரட்சிகரமான தத்துவத்தின் மூலம் தனக்கென்றொரு தனி இடத்தைப் பெற்றிருப்பவர் கார்ல் ஹென்ரிக் மார்க்ஸ் ஆவர் (Karl Heinrich Marx). அறிவியல் சமதர்மத்தின் (சோசலிசத்தின்) தந்தையென்று உலகம் போற்றுகின்ற கார்ல் மார்க்சை "பெரிய சிந்தனையாளர்" என்ற பொருளில் "மகாமுனி"[2] என்று விநோபா கூறுகின்றார். இந்தப் பேரறிஞர் தான் கைக்கொண்ட புரட்சிகரமான கருத்துக்களின் காரணமாக வாழ்க்கையெல்லாம் அல்லற்பட்டார். வறுமைத் துன்பத்தின் கொடுமையை முழுமையாக அனுபவித்தவர் கார்ல் மார்க்ஸ்.

சிந்தனைச் சிற்பியான கார்ல் மார்க்ஸ் 1818-ஆம் ஆண்டில் மே திங்கள் 5-ஆம் நாள் ஜெர்மனி நாட்டில் டிரியர் என்னுமிடத்தில் பிறந்தார். இவரது பெற்றோர்கள் யூத சமயக் குருக்கள் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். மார்க்சின் ஆறாவது வயதில் அவரது குடும்பத்தினர் கிறிஸ்தவச் சமயத்திற்கு மாறினர்.

மார்க்சின் பெற்றோர்கள் சமய வாழ்க்கையில் ஈடுபாடு கொண்டவர்கள். நடுத்தரக் குடும்பத்தினர். ஓரளவு வசதியாக வாழ்ந்தவர்கள். மார்க்சிடம் அவரது பெற்றோர்

2. Gandhi and Marx-By K. G. Mashruwala (Introduction -By Vinoba)

களின் தாக்கம் (Impact) மிகக் குறைவாகவே இருந்திருக்கின்றது. ஆதலால் அவர்களது இறைப்பற்று அவரது தத்துவ வளர்ச்சியில் இடம் பெறவில்லை. இதற்குக் காரணம் அவரிடமிருந்த தத்துவ வேட்கையாக இருக்கலாம்.

அவர் தனது சொந்த ஊரில் உள்ள பள்ளிக்கூடத்திலேயே பயின்றார். பின் அவர் பான், பெர்லின், ஜீனு என்ற மூன்று பல்கலைக் கழகங்களில் மேற்படிப்பினைப் பயின்றார். சட்டம், வரலாறு ஆகிய துறைகளைச் சிறப்பாகக் கற்ற அவர் 1841-இல் (அவரது 23ஆம் வயதில்) தத்துவத்தில் டாக்டர் பட்டம் பெற்றார்.

பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்தபொழுதே மார்க்சுக்குப் பொருளாதாரத்துறையில் தனி ஈடுபாடு தோன்றியது. அவர் காலத்தில் இருந்த பொருளாதார சமுதாய - அரசியல் அமைப்பில் மனநிறைவுகொள்ளாத மார்க்ஸ், அதனைப் புரட்சிகரமாக மாற்றியமைக்கவேண்டுமென்று மாணவப் பருவத்திலேயே கருதினார். ஆதலால் தீவிர போக்குள்ள இளைஞர்களோடு நெருங்கிப் பழகினார். அப்பொழுது ஜெர்மானிய அறிவாளிகளில் முற்போக்கானவராக விளங்கிய ஹெகலின் (Hegel) தத்துவத்தில் ஈடுபாடு கொண்டவர்களோடு அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. ஆனால் ஹெகலின் தத்துவத்தையும் அப்படியே அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மார்க்ஸ் டாக்டர் பட்டம் பெற்றவுடன் ஜெர்மானியப் பல்கலைக் கழகங்களில் ஆசிரியர் வேலைபெற முயன்றார். ஆனால் அவருடைய புரட்சிகரமான கருத்துக்களை அறிந்திருந்த பல்கலைக் கழகங்கள் அவருக்கு வேலை கொடுக்கவில்லை. அவருக்கு மேல்மட்டத்தில் இருப்பவர்களிடம் வெறுப்பு ஏற்பட இதுவும் ஒரு காரணமாகும். அவரது சிந்தனையில் மேலும் தீவிரப் போக்குத் தோன்ற இது வழிவகுத்தது.

அவருக்குப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் வேலை கிடைத்திருந்தால் உலகம் ஒரு புரட்சியாளரை இழந்திருக்குமென்று கூறுபவர்கள் உண்டு. டாக்டர் நியூமன், "இந்நிலையில், கார்ல்மார்க்ஸ் ஜெர்மானியப் பல்கலைக்

கழகமொன்றில் மரபு வழியில் வெற்றிகரமான ஆசிரியராகச் சொற்பொழிவுகள் நிகழ்த்திக்கொண்டிருந்தால் ரஷ்யப் புரட்சி ஏற்பட்டிருக்குமாவென்று கேட்கத் தோன்றுகின்றது,'' என்கின்றார். இந்தக் கூற்றில் ஓரளவு உண்மை இருக்கின்றது. பல்கலைக் கழக ஆசிரியர் வேலை கிடைக்காததால் மார்க்சின் வாழ்க்கையே ஒரு போராட்டமாகியது. ஒரு மனிதனை வாழ விடாமல் ஆட்டிப்படைக்கின்ற முதலாளித்துவத்தின் மீது எல்லையில்லாத வெறுப்புத்தோன்றி வளர்ந்ததில் வியப்பில்லை என்பது தெரிகின்றது.

வாழ்வதற்காக வேலை தேடி ஏமாற்றமடைந்திருந்த மார்க்சுக்கு ''ரேனிஷ் டைம்ஸ்'' (Rhenish Times) என்ற தொழிலாளர்களுக்காக நடைபெற்ற செய்தித் தாளில் 1842-இல் ஆசிரியர் வேலை கிடைத்தது. தொழிலாளர்கள் தங்களது உரிமைகளைப் போராடிப்பெற வேண்டிய இன்றியமையாமையை வலியுறுத்தி மார்க்ஸ் கட்டுரைகள் தீட்டினார். 'இனப்போர்' மூட்டிடும் அவரது எழுத்தைக் கண்டு அஞ்சிய அரசு அந்தச் செய்தித்தாளைத் தடை செய்தது.

இந்தச் சூழ்நிலையில் 1843-இல் செல்வக் குடும்பத்தில் பிறந்த ஜூலியா ஜென்னி (Julia Jenny) என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். அவரது இன்ப துன்பங்களில் எல்லாம் தக்க வாழ்க்கைத் துணையாக ஜென்னி திகழ்ந்தார்.

திருமணமாகி ஐந்து மாதத்தில் வேலை தேடி பிரான்ச் நாட்டின் தலைநகரான பாரிசுக்குச் செல்ல வேண்டிய இக்கட்டான நிலை மார்க்சுக்கு ஏற்பட்டது. அங்கும் அவருக்கு ஒரு தீவிர இடதுசாரிப் பத்திரிகையில்தான் துணையாசிரியர் வேலை கிடைத்தது.

பாரிஸ் வாழ்க்கை மார்க்சுக்கு பிரெஞ்சு நாட்டின் சமதர்மக் கருத்துக்களை அறிந்துகொள்ள வாய்ப்பளித்தது. புரட்சிக் கருத்துக் கொண்டவர்களோடு பழகியதும், முற்போக்காகச் சிந்தித்ததும், எழுதியதும் அவரை மிகவும் அறிவுக் கூர்மையுடையவராக மாற்றின. பாரிஸ் வாழ்க்கையில் குறுப்பிடத்தக்க நிகழ்ச்சி ஒன்று, அவருக்கு

பிரடரிக் ஏஞ்சல்ஸோடு (Frederick Engels) ஏற்பட்ட நட்பாகும். 1844-இல் ஆகஸ்டு மாதத்தில் ஏஞ்சல்ஸோடு மார்க்ஸ் பழகத் தொடங்கினர். அது வாழ்க்கை இறுதி வரை ஒரு நெருக்கமான கூட்டாக உருவெடுத்தது.

உலக வரலாற்றிலேயே மார்க்ஸ்-ஏஞ்சல்ஸ் நட்பு தனியிடம் பெறுகின்றது. ஏஞ்சல்ஸ் இங்கிலாந்தில் தொழிலதிபராக விளங்கியவர். அவர் மார்க்சின் அன்பு நண்பராகவும், அறிவுக் கூட்டாளியாகவும், இணையாசிரியராகவும். வாழ்க்கைக் காவலராகவும் திகழ்ந்தார்.

ஏஞ்சல்ஸைப் பற்றிச் சிறிது அறிந்து கொள்வதும் மார்க்சையும் அவரது கோட்பாட்டையும் புரிந்துகொள்ளத் துணை செய்யும். ஏஞ்சல்ஸ் மார்க்சை விட இரண்டு வயது இளையவர். அவரும் புரட்சிகரமான சிந்தனைப் போக்குடையவர். மார்க்சைப் போலத் தன்னிகரற்ற அறிஞராக இல்லாவிட்டாலும், தக்க கேள்வி ஞானம் கொண்டவர். இராணுவப் பயிற்சி பெற்றவர். தனது போக்கில் எதையும் கற்றுத் தேர்ந்து, அதனைப் பற்றித் தெளிவாகச் சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர். அவரது தந்தை ஒரு பருத்தி வணிகர். ஓரளவு திரண்ட சொத்தைத் தன் தொழில் மூலம் தேடிக்கொண்டவர். பின்னால் ஆண்டிற்கு 350 பவுன் வீதம் ஏஞ்சல்ஸ் கொடுத்ததை வைத்துக் கொண்டுதான் மார்க்ஸ் இலண்டனில் வாழ்ந்து, உலக வரலாற்றையே மாற்றத் தக்க தத்துவத்தை உருவாக்கினரென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பாரிசிலும் மார்க்சை அரசு விட்டு வைக்கவில்லை. ஜெர்மானிய அரசு மார்க்சை பிரான்சை விட்டு நாடுகடத்தும்படித் தூண்டியது. அதன்படி 1845 இல் 27-ஆம் வயதில் பிரெஞ்சு அரசு அவரை நாட்டை விட்டு வெளியேற்றியது. பிறந்த நாட்டிலும் விரும்பிய வேலை கிடைக்காமல், பார்த்த வேலையும் பறிபோய், பிழைக்க வந்த நாட்டிலிருந்தும் தனது தாயக அரசின் தூண்டுதலால் விரட்டப்படுகின்ற ஓர் இளைஞனின் உள்ளத்தில் எத்தகை வெஞ்சினமும் வெறுப்பும் உருவாகியிருக்குமென்பதை நம்மால் உணர முடிகிறது.

நாடு கடத்தப்பட்ட கார்ல் மார்க்ஸ் பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸ்ஸல்ஸுக்குச் சென்ருர். அங்கு

ஏஞ்சல்சும் வந்து சேர்ந்தார். 1845 முதல் 1848 வரை மார்க்சும், ஏஞ்சல்சும் இணைந்து படிப்பதிலும், ஆய்வதிலும், எழுதுவதிலும் ஈடுபட்டனர். 1847-இல் உலகத் தொழிலாளர் சங்கம் என்ற ஓர் அமைப்பின் மூலம் இலண்டனில் முதல் பொதுவுடைமை மகாநாட்டை நடத்தினர். அதற்காக மார்க்சும் ஏஞ்சல்சும் கூட்டாகத் தயாரித்த "பொதுவுடைமை அறிக்கை" (The Communist Manifesto) மார்க்சின் தத்துவத்திற்கு அடிப்படையை அமைத்தது. இன்றும் உலகம் முழுவதும் படிக்கப்பட்டும், போற்றப்பட்டும், குறை கூறப்பட்டும், திறனாய்வு செய்யப்பட்டும் வருகின்ற அந்தப் 'பொதுவுடைமை அறிக்கை'யை எழுதிய பொழுது மார்க்சுக்கு 29 வயதுதான் ஆகியிருந்ததென்பதை மறக்க முடியாது

1848-இல் ஜெர்மனியில் புரட்சி நடைபெற்றபொழுது அது பெரிய தொழிலாளர் புரட்சியாக வளர்ந்து வெற்றி பெறுமென்று மார்க்சும், ஏஞ்சல்சும் நம்பி அதில் பங்குபெற ஜெர்மனிக்குச் சென்றனர். தக்க அமைப்பும், ஏற்ற பயிற்சியுமின்றி, உணர்ச்சியின் அடிப்படையில் வெடித்துக் கிளம்பிய ஜெர்மானியப் புரட்சி தோல்வி கண்டது. ஆதலால் புரட்சித் தோழர்கள் இருவரும் இங்கிலாந்திற்குச் சென்றனர்.

1848 முதல் தனது வாழ்க்கையின் இறுதியான 1883ஆம் ஆண்டு மார்ச்சு 14 வரை (தனது 30 வயது முதல் 65 வது வரை) முப்பத்தைந்து ஆண்டுகள் மார்க்ஸ் இலண்டனிலேயே வாழ்ந்திருக்கின்றார். இந்தக்காலத்தில் ஒரே ஒரு முறைதான் 1861-இல் இலண்டனைவிட்டு வெளியே சென்று வந்தார்.

இலண்டனிலிருந்த 35 ஆண்டுகளும் படிப்பதிலும் ஆராய்வதிலும், எழுதுவதிலும் கழிந்தன. லண்டன் மியூசிய நூலகத்தை மார்க்சைப் போன்று பயன்படுத்தியவர்கள் வேறு யாருமில்லை என்று கூறலாம். இந்தக் காலத்தில் மார்க்ஸ் நூல் நிலையம் திறக்கும் நேரத்தில் முதல் மனிதராக நுழைந்து, நூலகத்தில் - கடலில் மூச்சடக்கி மூழ்கி முத்தெடுப்பவர்களைப்போல - கிடைக்கின்ற நூற்களை நுணுகி ஆராய்ந்து கருத்து முத்துக்களைச்

சேகரித்துக்கொண்டு-நூலகத்தை மூடுகின்ற நேரத்தில் இறுதி மனிதராக வெளிவருவாராம்.

மார்க்ஸ் உலகையே இலண்டன் மியூசிய நூலகத்தின் மூலம் கண்டு, கற்றுரென்று கூறலாம். இலண்டனிலிருந்து கொண்டு உலக ஏடுகளுக்குப் பலவற்றைப் பற்றியும் ஆய்வுக் கட்டுரைகள் எழுதினர். அவருக்கு அழியாப் புகழைத் தேடிக்கொடுத்த நூற்களெல்லாம் இங்குதான் படைக்கப்பட்டன.

மார்க்ஸ் தனது குடும்ப வாழ்விற்கு அவரது நண்பர் ஏஞ்சல்ஸ் ஆண்டிற்கு 350 பவுன் வீதம் கொடுத்ததையே நம்பியிருந்தார். அவரது வாழ்வு வளமாக அமைய வில்லை. வறுமையில் அவர் எந்த அளவிற்கு வாடினரென் பதற்கு அவர் தமது நண்பர் ஏஞ்சல்சுக்கு எழுதிய ஒரு கடிதம் சான்ருக இருக்கின்றது. மனைவியும் குழந்தை களும் நோய்வாய்ப்பட்ட நிலையில் தனது வாழ்க்கையில் எத்தகைய பொருளாதார நெருக்கடி இருந்ததென்பதைக் கடிதத்தில் குறிப்பிடுகின்ருர். ''என்னல் மருத்துவரை அழைக்க முடியவில்லை. ஏனென்ருல் அவருக்குக்கொடுக்க என்னிடம் பணம் இல்லை. கடந்த எட்டு, பத்து நாட் களாக நாங்கள் ரொட்டியையும், உருளைக் கிழங்கையும் தான் சாப்பிட்டுக்கொண்டு வாழ்கின்ருேம். ஆனல் இப் பொழுது அது கூடக் கிடைக்குமாவென்பது ஐயமாக இருக்கின்றது......நான் தாணு (Dana) விற்கு எதுவும் எழுதவில்லை. ஏனென்ருல் செய்தித்தாட்கள் வாங்கக்கூட என்னிடம் பணம் இல்லை......கடந்த வாரத்தில் நான் தொழிலாளர்களிடமிருந்து சில ஷில்லிங்களும், பென்னி-யும்கூட கடன் வாங்கியிருக்கின்றேன். இது மிகவும் கொடுமையான நிலை. ஆனல் இது தவிர்க்க முடியாத தேவையாகிவிட்டது. இல்லாவிட்டால் நாங்கள் பட்டினி கிடந்திருப்போம்,''[1] என்று மார்க்ஸ் எழுதியிருப்பதி லிருந்து வாட்டும் வறுமையில் எவ்வளவு அவர் வாடி வதங்கியிருப்பாரென்பது தெரிகின்றது. இத்தகைய உலக வறுமைக்கு முதலாளித்துவமே காரணமென்ற அசைக்க முடியாத முடிவுக்கு அவர் வந்ததால் அதனை அழிப்பதற்கு

1. Quoted by P. C. Newman. "The Development of Economic Thought", p.123

அவர் போர்க்கொடி உயர்த்தியதில் வியப்பில்லை. அல்லவா !

கார்ல் மார்க்சின் எழுத்துக்களில் கனல் தெரித்தது. பொங்கிவரும் வெள்ளத்தின் வேகத்தையும், சுழன்றடிக்கும் புயலின் ஆற்றலையும் தனது தத்துவத்தில் குழைத்துக் கொடுத்த அவர், வெறும் புரட்சிவாதியாக மட்டுமிருக்க வில்லை. அவரைப்பற்றி, "அவர் அடிப்படையில் ஒரு மாணவர்; பிரௌதானைப் (Proudhon) போல அன்பான தந்தை; சோர்வின்றி சுற்றிவரும் பயணி; மிகச்சிறந்த அறிவுப் பண்பாட்டாளர்,"[2] என்று திறனாய்வாளர்கள் கூறுகின்றனர்.

மார்க்சைப் பற்றி, "மார்க்ஸ் சாதாரண மேடைப் பிரசங்கியல்ல. ஆழ்ந்து பரந்த கல்விஞானம் படைத்தவர். ஆங்கில நாட்டில் முதலாளித்துவத்தின் தீய போக்கைக் கண்ணால் கண்டவர். இவர் ஒரு புரட்சித் தலைவர்; சிறந்த தத்துவஞானி,"[3] என்று பேராசிரியர் கே. எஸ். சேரனாச்சலம் குறிப்பிடுகின்றார்.

மார்க்சின் பணிபற்றி, "மார்க்ஸின் பெரும்பணி மனித வாழ்வின் சகல துறைகளிலும் பரவி நின்றது. அரசியல், பொருளாதார, சமூகமாகிய எத்துறையை எடுத்துக்கொண்டாலும். மார்க்ஸ் நுழைந்து, ஆராய்ச்சி செய்யாத, விமர்சனம் கூறாத, முடிவுகள் காட்டாத ஒரு துறைகூட இல்லை என்று சொல்லிவிடலாம். மார்க்ஸீயம் மார்க்ஸின் கொள்கைகள், சோஷலிஸத்தை விஞ்ஞானமாக்கியது. மனித வாழ்வின் எல்லாத் துறைகளிலும் சகல நடவடிக்கைகளிலும் அதை பிரயோகிக்க, கையாள முடியும் என்று செய்துவிட்டது,"[4] என்று ப. ஜீவானந்தம் குறிப்பிடுவது இங்கு நினைவுபடுத்தத் தக்கதாகும்.

மார்க்சின் படைப்புக்களைப் பற்றி அறிந்துகொள்வதும் தேவையாகும். மார்க்சின் முதல் நூல் 1843-இல்

---

2 Charles Gide and Charles Rist, "A History of Ecnoomic Doctrines", p. 452.

3. பொருளாதாரச் சிந்தனை வரலாறு, ப. 225.

4. சோஷலிஸ்ட் தத்துவங்கள் (முதல் பாகம்), ப. 12

வெளிவந்தது. தனித்தும் கூட்டாகவும் அவர் பல நூற்களை எழுதியிருக்கின்றார். 1847-இல் வெளிவந்த ''தத்துவத்தின் வறுமை'' (The Poverty of Philosophy), 1848-இல் வெளி வந்த ஏஞ்சல்ஸோடு சேர்ந்து எழுதிய ''பொதுவுடைமை அறிக்கை'' (The Communist Manifesto), அவது காலத்தில் (1867) வெளிவந்த முதல் பாகத்தையும், பின் வெளி வந்த இரண்டு, மூன்று, நான்காம் பாகங்களையும்கொண்ட அவரது படைப்புக்களில் மணி மகுடமாகத் திகழும் ''மூலதனம்'' (Das Capital) ஆகியவை குறிப்பிடத் தக்கவைகளாகும். இவற்றில் ''பொதுவுடைமை அறிக்கை''யும் ''மூலதனமும்'' அவரது தத்துவத்தை உள்ளடக்கியவைகளாகத் திகழ்கின்றன.

பொதுவுடைமை அறிக்கை ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் எழுதப்பட்டது. மார்க்ஸ் பிரஸ்ஸல்ஸில் இருந்தபொழுது ''ஜெர்மானிய உழைப்பாளிகள் சங்கம் (German Working Men's Association) என்று ஒன்றை அமைத்தார். ஏஞ்சல்ஸ் இதைப் போன்ற ஓர் அமைப்பைப் பாரிசில் தொடங்கினார். இவற்றில் உறுப்பினர்கள் மிகக் குறைவாகவே இருந்தனர். இவர்கள் பாட்டாளி இன உணர்வோடு அறிவியல் முறையில் முதலாளித்துவ சீர் கேடுகளை ஆராய முயன்றனர். இத்தகைய சங்கங்களை எல்லாம் இணைத்து ''பொதுவுடைமைத் தொடர்புக்குழு'' Communist Correspondence Committee) என்ற ஒன்றை மார்க்ஸ் உருவாக்கினார். பின்னல் அதன் பெயரை 'பொதுவுடைமைக்கட்டளைக்கூட்டிணைவுக்கழகம்' (The Communist League) என்று மாற்றிக்கொண்டனர். உலகத் தொழிலாளர்களை ஒருங்கிணைக்கத் தோன்றிய இந்தக் கழகத்தின் முதல் கூட்டத்தை 1847 நவம்பரில் இலண்டனில் கூட்டினர். இந்தக் கூட்டத்தின் வேண்டுதலின்படி இந்த இயக்கத்தின் கோட்பாடுகளின் விளக்க அறிக்கையை எழுதும் பொறுப்பை மார்க்சிடம் ஒப்படைத்-தனர். ஏஞ்சல்சின் சில கருத்துக்களின் உதவியோடு பெரும்பாலும் மார்க்சின் படைப்பாகப் ''பொதுவுடைமை அறிக்கை'' தயாரிக்கப்பட்டு மார்க்ஸ்-ஏஞ்சல்ஸ் கூட்டுப் பெயரில் 1848-இல் வெளியிடப் பெற்றது.

பொதுவுடைமையினருக்கு இன்றும் மறைநூலாகப் பயன்படும் ''பொதுவுடைமை அறிக்கை'' நான்கு பகுதி-

களைக் கொண்டது. ''பாட்டாளிகள் அவர்களது கைவிலங்கைத் தவிர இழக்கப் போவது ஒன்றுமில்லை. அவர்கள் வெற்றிகொள்ள ஓர் உலகம் இருக்கின்றது. எல்லா நாடுகளின் பாட்டாளிகளே இணையுங்கள்'', என்று முடியும் இந்த அறிக்கை மார்க்சின் பின்னால் உருவாக்கப் பெற்ற தத்துவத்தின் கருப்பொருளை உள்ளடக்கமாகக் கொண்டது. இதனைப் பற்றி, ''முதல் யாதாஸ்து' மார்கஸும் ஏஞ்சல்சும் முதன் முதல் கூட்டாக எழுதிய, 'கம்யூனிஸ்ட் அறிக்கை' உலகப் பாட்டாளி மக்களை எரிமலைபோல் குமுறியெழும்படித் தூண்டி சாம்ராஜ்யங்களைப் பொடி சூர்ணமாக்கிய நூல் அது. அந்த உலகச் சிறப்புடைய நூலில், மார்க்ஸ் முதலாளித்துவத்தின் பிறப்பு, வளர்ச்சி, பாட்டாளி மக்களோடு நடத்திய மோதல்கள், முதலியவற்றை நெஞ்சையள்ளும் விதத்தில், ஆவேசக் கனல் பறக்கும் முறையில் அருமையாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்'',[5] என்று ப. ஜீவானந்தம் கூறுகின்றார்.

கார்ல் மார்க்சின் தலையாய நூலான 'மூலதனத்தின்' முதல் பாகம் 1867-இல் வெளிவந்தது. அதனுடைய இரண்டாம் மூன்றும் பாகங்களை முறையே 1885, 1894ஆம் ஆண்டுகளில் ஏஞ்சல்ஸ் வெளியிட்டார். எஞ்சியிருந்தவற்றைத் தொகுத்து 1904-இல் ஜெர்மானிய சமதர்மக் கட்சிப் பத்திரிகையின் ஆசிரியர் கவுட்ஸ்கி ''எச்ச மதிப்புக் கொள்கை' (Theory of Surplus Value) என்ற தலைப்பில் வெளியிட்டார். மார்க்ஸ் 40 ஆண்டுகள் அல்லும் பகலும், படித்தும் சிந்தித்தும் ஆய்ந்ததன் பயனாகக் கிடைத்த 'மூலதனம்' அவரது அறிவாற்றலைக் காட்டுகின்றது. தர்க்க அடிப்படையில் எண்ணற்ற மேற்கோள்களைக் காட்டித் தான் எடுத்துக் கொண்ட கருத்தை நிலைநாட்டியிருக்கும் முறை அதனைக் கற்பவர்களை வியப்படையச் செய்யும். 'மூலதனத்தைப்' படித்துப் புரிந்து கொள்வது இமயமலையில் ஏறுவதைப் போன்றதாகும்.

மார்க்சின் தனி வாழ்க்கையில் பட்ட பாடுகளின் எதிர் ஒலியை அவரது தத்துவத்தில் காணமுடிகின்றது. ''அரசியல் காரணத்தால் நாடு கடத்தப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட வெறுப்புணர்ச்சியோடு வறுமை, துன்பம், பொறுமை,

5. சோஷலிஸ்ட் தத்துவங்கள் (முதற் பாகம்), ப. 36.

சந்தேகம்ஆகியவையும் சேர்ந்து மார்க்ஸின் எண்ணத்தைக் கலக்கமடையச் செய்தன. எனவே அவரது நூல்கள் குழப்பம் நிறைந்த மனநிலையைப் பிரதிபலிப்பதில் ஆச்சரியமில்லை. வெறுப்பும் வெறியுணர்ச்சியும் கொண்ட மார்க்ஸ் அஹிம்சா வழியை வெளிப்படையாகக் கண்டித்தவர்,''[6] என்று ஓராசிரியர் கூறுகின்றார். இது முழு உண்மையில்லை என்றாலும், இதில் ஓரளவு உண்மை இருக்கின்றது. முதலாளித்துவத்தைக் கடுமையாக எதிர்த்து, அதனை அழிக்க வழிவகுக்கும் தீவிரத்தை அவரது வாழ்க்கைச் சூழ்நிலையே அமைத்துக் கொடுத்தது.

மார்க்ஸ் வாழ்ந்த காலத்தில் தொழிற் புரட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. இங்கிலாந்தில் புதிய தொழில்களின் வளர்ச்சியால் முதலாளிகள் - தொழிலாளிகள் என்ற இரண்டு முரண்பட்ட-போரிடும் இனங்கள் தலை தூக்கின. மார்க்ஸ் முதலாளித்துவத்தின் வளர்ச்சியையும் சீர்கேட்டையும் நேரில் கண்டார். ஜெர்மனியில் முதலாளித்துவ அரசின் போக்குகளைக் கவனித்த மார்க்ஸ், பிரெஞ்சு நாட்டில் சமதர்மக் கோட்பாடுகளின் தீவிர ஈடுபாடு கொண்ட மனநிலையில் இங்கிலாந்தில் ஏற்பட்டுக் கொண்டிருந்த பொருளாதார மாற்றத்தைக் கவனித்தார். தொழிற்புரட்சி சமுதாயத்தில் இருப்பவர்கள் - இல்லாதவர்கள் என்ற இரண்டு பெரும் பிரிவுகளை உருவாக்கி விட்டதாகக் கருதினார். அவரது நண்பர் ஏஞ்சல்சின் மூலம் இங்கிலாந்தில் ஏற்பட்டு வந்த தொழில் மாற்றங்களை அவரால் ஆய்ந்து அறிய முடிந்தது. எதிர்காலத்தில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியும், முதிர்ச்சியும், தளர்ச்சியும், அழிவும் எப்படி அமையுமென்பதை அவர் தமது தத்துவத்தில் விளக்கமாக ஆய்ந்து கூறுவதற்கு அவர் வாழ்ந்த காலச் சூழல் ஒரு பின்புலத்தை அமைத்துக் கொடுத்தது.

''மார்க்ஸ் ஒரு முறை அவருடைய தத்துவம் ஜெர்மானிய தத்துவம், பிரெஞ்சு அரசியல், ஆங்கிலேயப் பொருளாதாரம் ஆகியவற்றின் கூட்டிணைப்பு என்று குறிப்பிட்டார்,''[7] என்கின்றார் ஓர் ஆய்வாளர். மார்க்ஸ்

6. அ. குழந்தை, ''பொருளாதாரச் சிந்தனை வரலாறு'', ப. 335.

7. A. J. P. Jaylor's Introduction to The Manufests, Pengusin Books, 1967, p. 12.

ஜெர்மனி, பிரெஞ்சு, இங்கிலாந்து ஆகிய மூன்று நாடுகளிலும் வாழ்ந்ததாலும், நேரடியாகப் பலவற்றைக் காணும் வாய்ப்பைப் பெற்றதாலும், இந்த நாடுகளின் பொருளாதார, சமுதாய, அரசியல், நடைமுறைகளும் தத்துவ வளர்ச்சியும் அவரது சிந்தனையில் பெரும்பங்கு கொண்டிருப்பதை நம்மால் உணர முடிகின்றது.

## III *மகாத்மாவின் வாழ்க்கை*

மனிதகுலத்தின் மனச் சான்ருக விளங்கிய காந்தியடிகளின் தனிவாழ்க்கையும், பொதுவாழ்க்கையும் தனி வகையில் அமைந்தன. பாரதநாட்டின் பழம்பெரும் பண்பாட்டில் காலூன்றி நின்று சத்திய சோதனைகள் செய்த அவர் உலகை உய்விக்கத்தக்க கருத்துக்களை உருவாக்கிக் கொடுத்தார்.

இன்றைய நடைமுறைகளையும் மக்களின் வாழ்க்கைப் போக்குக்களையும் அளவுகோலாகக் கொண்டு பார்த்தால், அண்ணலின் வாழ்க்கை வியப்பிற்குரிய விந்தையான வாழ்க்கையாக இருக்கலாம். இதனுல்தான் அறிவியல் மேதை ஐன்ஸ்டின், ''வருங்காலத் தலைமுறையினர் இப்படிப்பட்ட ஒருவர் சதையோடும் குருதியோடும் இந்த மண்ணில் நடந்து திரிந்தார் என்பதை நம்பாமல் போகலாம்'', என்று கூறுகின்ருர்.

காந்தியடிகளின் கருத்துக்களை முழுமையாக ஏற்றுக் கொள்ளாதவர்கள் கூட, அவரது ஆற்றல்மிக்க வாழ்க்கையின் சிறப்பை அறிந்திருக்கின்றனர். பொதுவுடைமைத் தலைவரான எஸ். ஏ. டாங்கே, ''இங்கே ஒரு மகத்தான வாழ்க்கை இருந்திருக்கின்றது. ஒரு பெரிய தலைவர்; வரலாற்றின் நாயகன் வாழ்ந்திருக்கின்ருர். அவர் மக்களை வழிநடத்தினுர். அவர்களை ஓரமைப்புக்குள் கொண்டு வந்தார். அவர்களை நெறிப்படுத்தினுர். அவர்களை அன்னிய ஆட்சியாளர்களுக்கு எதிராகவும், அவர்களின் இந்தியக் கூட்டாளிகளான அரசர்களை எதிர்த்தும் நடைபெற்ற போரில் அணிவகுக்கச் செய்தார். இங்கே 1919-முதல் 1948-இல் ஒரு பைத்தியத்தால் கொலை செய்யப்பட்டு மாள்கின்ற வரை வரலாற்றை உருவாக்கிய

மனிதர் இருந்திருக்கின்றார்,"[8] என்று கூறுவதைச் சுட்டிக் காட்டலாம்.

காந்தியடிகளின் வாழ்க்கை சாதாரணமாகத் தொடங்கி, படிப்படியாக வளர்ச்சியும், மலர்ச்சியும் பெற்று, அகத்தில் ஒளிபெருக்கிய ஆன்மீக ஆற்றலின் விளைவாக உலகம் போற்றும் உயர்ந்த வாழ்க்கையாக மாறியதை அவரது வரலாறு காட்டுகின்றது.

"பிறருக்கு வந்த துக்கம் எனக்கு வந்தது. அதனைப் போக்குவதும் எனது கடனே என்று எண்ணிப் பணிசெய்தவர். ஆகவேதான் பிறரைப் போல் அல்ப ஆத்மாவாக - சிறு ஆத்மாவாக - இருந்துவிடாமல் அவர் மகா ஆத்மாவாக விளங்கினார். அவர் உள்ளத்தில் உலகம் இருந்தது. உலகத்தார் உள்ளத்திலெல்லாம் அவர் இருந்தார்; இருக்கின்றார்; இருப்பார்,"[9] என்று க. அருணசலம் கூறுகின்றார். உள்ளத்தால் பொய்யாதொழுகி உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் வாழ்கின்ற காந்தியடிகள் நடத்திய தூய வாழ்க்கைக்கும் அவர் உருவாக்கிய கோட்பாடுகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இரண்டும் ஒன்றையொன்று சார்ந்து வளர்ந்தன.

காந்தியடிகள் 1869-ஆம் ஆண்டில் அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள் குஜராத்தில் ஒரு திவானின் மகனுகப் பிறந்தார். 1948-ஆம் ஆண்டு ஜனவரி 30-இல் இறைவனின் திருநாமத்தைக் கூறிக்கொண்டு மண்ணுலக வாழ்வில் இருந்து விடுதலை பெற்றார். இந்த எழுபத்தொன்பது ஆண்டுகள் அவர் வாழ்ந்த வாழ்க்கையை நான்கு பகுதிகளாகப் பிரித்துப் பார்க்கலாம்.

அவருடைய இளமைக்காலம் (1869-1888) இந்தியாவில் கழிந்தது. அவருடைய தந்தைக்குச் சமயங்களிலிருந்த ஈடுபாடும், அவரது அன்னையிடம் இயல்பாகக் காணப்பட்ட சமயப் பழக்க வழக்கங்களும், ஆழ்ந்த இறைப் பற்றும் அவரிடம் ஒரு வலுவான சமய அடிப்படையை

8. S. A. Dange, "Mahatma Gandhi and History", p. 4-5.

9. காந்தி மகாத்மா ஆனார், எப்படி?, ப. 2.

அமைத்தது. ஒரு வைஷ்ணவ நடுத்தரக் குடும்பத்தில் வாழ்க்கை வசதிகளோடு வாழ்ந்த அவர், சராசரி மாணவராகவே இருந்தார். ஆனால் நல்லவற்றை ஏற்று வாழ்க்கையில் பின்பற்றுவதில் வல்லவராக இருந்தார். வேலைக்காரி கற்றுக்கொடுத்த இராம நாம நம்பிக்கையையும், ஹரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்து உருவாக்கிக் கொண்ட 'உண்மையே பேசுதல்' என்று உறுதிப் பாட்டையும் இறுதிவரைக் கைவிடாமல் வாழ்ந்த பெருமைமிக்க வாழ்க்கைக்கு, இளமை வாழ்க்கை அரண் அமைத்துக் கொடுத்தது.

சாதாரணமாகச் சிறுவயதில் யாரும் செய்யக்கூடிய சில தவறுகளை அவரும் செய்தார். ஆனால் அவை தவறென்று அறிந்தபொழுது, அவற்றிற்காக உள்ளமுருகியதும், தந்தையிடம் மன்னிப்புக் கேட்டதும், மறுபடியும் அவற்றைச் செய்யாமலிருந்ததும் அவரைத் தனித்துவம் வாய்ந்தவரென இனம் காட்டுகின்றன. சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றில் தூய்மை வேண்டுமென்ற தெளிவை இளமையிலேயே பெற்றதால், அவரது தனிவாழ்க்கை உலகிற்கு வழிகாட்டிடும் செய்தியாகும். பெருமை பெற்றதைப் பின்னால் காண்கின்றோம்.

மோகனதாஸ் கரம்சந்த் காந்திக்கு உலகத் துன்பம் தெரியாததல்ல. இளமையிலேயே திருமணம் செய்துவைத்தார்கள். தந்தை இறந்த பிறகு அண்ணனின் ஆதரவில் குடும்ப வாழ்க்கை நடந்தது. வெளிநாட்டுக்குப் படிக்கச் செல்ல கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை இருந்தது. வாழ்க்கைப் போராட்டங்கள் அவரைப் புரட்டி எடுத்த போதிலும் அசைக்க முடியாத இறை நம்பிக்கை இருந்ததால் அவருடைய உள்ளத்தில் வெறுப்பின் விதைகள் விழவோ, முளைக்கவோ வாய்ப்பில்லை.

"இந்திய சமூகம் அழிக்க முடியாதது. அழிவின்றியே அது நிற்கின்றது. ஆத்ம தத்துவம் அதனுடைய முதுகெலும்பாக இருக்கும் வரையில், மக்கள் தங்களது தெய்வீகத்தன்மையைக் கைவிடாத வரையிலும், வருங்காலத்திலும் அழிவின்றியே அது நிற்கக்கூடும்,"[10] என்று சுவாமி விவேகானந்தர் கூறுவதற்கு விளக்கம்போல அண்ணல்

10. "எனது குருநாதர்", ப. 25-26.

பிறந்து வளர்ந்த குடும்பத்தின் வாழ்க்கை அமைந் திருந்தது.

அண்ணலின் வாழ்க்கையின் இரண்டாம் நிலையாக அவர் இங்கிலாந்தில் சட்டம் பயின்ற (1888-1891) காலம் அமைகின்றது. இதனை இவரது உண்மையான "கல்விக் காலம்" என்று கூறலாம். இங்கிலாந்தில் அவர் வெறும் சட்டம் மட்டும் பயிலவில்லை. மெய்யறிவைப் பெறுவதன் தொடக்கமாக அது அமைந்தது. மூளையையும் இதயத்தை யும் பண்படுத்தத் தக்கவற்றை அவர் தேடி, இனம் கண்டு கற்றார். இளமையில் துளசிதாசரின் இராமாயணத்தை யும், பாகவதத்தையும், ஹரிச்சந்திரன், சிரவணன் கதை களையும் படித்திருந்த காந்தியடிகள், இங்கிலாந்தில் இந்து சமயத்தைப் பற்றியும், கிருஸ்தவம் போன்ற பிற சமயங்களைப் பற்றியும் அறிந்துகொள்ளத் தொடங்கினார். எட்வின் அர்னால்டு எழுதிய "விண்ணவர் பாட்டு" (The Song Celestial), "ஆசியாவின் ஜோதி" என்ற இரண்டு நூற்களும் அவரது உள்ளத்தை ஈர்த்தன. புத்தரின் கோட்பாடுகளையும், அவரது தத்துவ மேம்பாட் டையும்உணர இவை துணைசெய்தன. மேடம் பிளாவட்ஸ்கி-யையும், அன்னிபெசன்ட் அம்மையாரையும் சந்தித்த தும், பிளாவட்ஸ்கியின் 'பிரம்மஞானத்தின் திறவுகோல்' என்ற நூலைப் படித்ததும் அவரிடம் இந்து சமயத்தின் ஆழத்தைக்காண வேண்டுமென்ற வேட்கையைவளர்த்தது. கிறித்தவ நண்பர்களின் தொடர்பினால் பழைய, புதிய ஏற்பாடுகளைப் படிக்கும் வாய்ப்பைப் பெற்றார். புதிய ஏற்பாட்டில் ஏசுவின் மலைச்சொற்பொழிவு போன்ற பகுதிகள் அவரது இதயத்தைக் கொள்ளை கொண்டன. கார்லைல் எழுதிய "வீரர்களும் வீர வணக்கமும்" (Heroes and Hero Worship) என்ற நூலில் முகம்மதைப் பற்றியும் இஸ்லாம் மதத்தைப் பற்றியும் கற்றார்

இங்கிலாந்தில் படித்த காலத்தில் அவருக்கு அரசியலில் ஈடுபாடு ஏற்படவில்லை. தனது வாழ்க்கையை நெறிப் படுத்திக்கொண்டு சத்திய வழியில் நடப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்திருக்கின்றார். அவரை எதிர்நோக்கிய தனிமனிதச் சோதனைகளை இறைநம்பிக்கை யின் துணையால் வெற்றி கண்டிருக்கின்றார்.

வழக்குரைஞருக்குப் படித்து, தேர்வில் வெற்றிபெற்று இந்தியாவிற்குத் திரும்பிய பிறகுதான் காந்தியடிகளுக்குத் தான் கற்ற கல்வி நிறைவற்றதென்று தெரிந்தது. நடைமுறைப் பயிற்சியின்மையால் பேச்சாற்றலை வளர்த்துக் கொள்ளாததால் அவரால் திறமையான வழக்குரைஞராகச் செயல்பட முடியவில்லை. எடுத்துக்கொண்ட முதல் வழக்கே அவருக்கு அதிர்ச்சியை அளித்தது. ஏதாவது தொழில் செய்ய வேண்டுமென்ற குடும்பச் சூழ்நிலையில் ஆசிரியர் வேலைக்கு முயன்றார். அதற்குரிய கல்வித் தகுதியில்லையென்று அவருக்கு அந்த வேலையைத்தர மறுத்து விட்டனர். பின்னர் இந்திய சமுதாயத்திற்கே ஆசிரியராகத் திகழ்ந்த காந்தியடிகள், பள்ளி ஆசிரியராகக் கூடத் தகுதியற்றவர் எனத் தள்ளப்பட்டு, மொழி பெயர்ப்பாளராகத் தென்னாப்பிரிக்காவிற்குச் சென்றார்.

காந்தியடிகளின் வாழ்வின் மூன்றாவது காலகட்டமாகத் தென்னாப்பிரிக்கா வாழ்வு (1893-1914) அமைந்தது. இதனைச் சோதனைக் காலம் என்றும் வளர்ச்சிக் காலம் என்றும் கூறலாம். தென்னாப்பிரிக்காவில் ஏறத்தாழ 21 ஆண்டுகள் வாழ்ந்தார். இந்தக் காலத்தில் இருமுறை (முதல்தடவை 1896-இல்; இரண்டாம் தடவை 1901-இல்) இந்தியாவிற்கும், இரு முறை (1906-ஆம் ஆண்டிலும், 1909-ஆம் ஆண்டிலும்) இங்கிலாந்திற்கும் சென்றுவந்தார். மற்றைய காலத்தைத் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டார்.

சாதாரண ஒரு வழக்கின் மொழிபெயர்ப்பாளராகச் சென்ற காந்தியடிகள், அங்கேயே வழக்குரைஞர் பணியை மேற்கொண்டார். கூலிகளாக, கேவலமாக நடத்தப்பட்ட இந்தியர்களின் தலைவராகப் பொறுப்பேற்று அங்கிருந்த இனப்பாகுபாட்டுச் சட்டங்களை எதிர்த்துப் போராடினார். பின்னர் இந்தியாவின் மகத்தான விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்துவதற்கு வேண்டிய தகுதிகளையும் திறமைகளையும் காந்தியடிகள் தென்னாப்பிரிக்கப் போராட்டங்களின் மூலமே பெற்றுக் கொண்டார்.

தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் நடத்திய வாழ்க்கையை ஊன்றிக் கவனித்தால் அங்கு அவர் ஒரு

சமுதாய விஞ்ஞானியைப் போல வாழ்ந்தது விளங்கும். தனிமனித வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும், சமுதாய வாழ்க்கையிலும் பல சோதனைகளை மேற்கொண்டார். சத்தியத்தைத் தேடும் முயற்சியாகத் தனது வாழ்க்கையைக் கருதிய அவர், ஓரடி முன்னால் வைத்தாலும் போதுமென்ற இதயத் துணிவோடு தனது வழியில் முன்னேறினார்.

''எண்ணத்தாலும் பேச்சாலும் செயலாலும் அறத்தைப் போற்றி வாழ வேண்டுமானால் மனம், மொழி, மெய் என்பவற்றைத் தன் ஆட்சியின் கீழ் வைத்திருக்கும் ஆற்றல் வேண்டும். அவ்வாறு மனம் முதலியவை அடங்கி ஒத்துழைக்கும் வாழ்வே சிறந்த வாழ்வு,''[11] என்று டாக்டர் மு. வரதராசனார் கூறுகின்றார். காந்தியடிகள் இத்தகைய சிறந்த தனி வாழ்க்கையைத் தென்னாப்பிரிக்காவில் அமைத்துக்கொண்டார். அங்கு அவர் நடத்திய வாழ்க்கையும், அறப் போராட்டங்களும், டால்ஸ்டாய் பண்ணை, போனிக்ஸ் குடியிருப்புப் போன்ற அமைப்புகளும் அவரை பொருளில் பற்றற்றவராகவும், அகிம்சை வழியில் ஊருக்கு உழைக்கின்ற யோகியாகவும் மாற்றின.

தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் பிற சமய நூற்களைப்படித்ததோடு கூட, டால்ஸ்டாயின் ''கடவுளின் அரசு உன்னுள்ளே இருக்கின்றது'' (The kingdom of God is within you), ''நற்செய்தியின் சுருக்கம்'' (The Gospel in Brief) ''நாம் இனி என்ன செய்ய வேண்டும்?'' (What then We must do?) என்ற நூற்களையும், சுவாமி விவேகானந்தரின் ''இராஜ யோகம்'' பதஞ்சலியின் ''யோக சூத்திரங்கள்'' ஆகிய நூற்களையும் ஊன்றிப் படித்தார். ''பகவத் கீதை''யை ஆழ்ந்து, கற்று, அதனை வையத்துள் தான் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் நூலாகக் கொண்டார். இங்குதான் அவர், அவருடைய வாழ்க்கைத் தத்துவத்தில் 'மந்திர சக்தி' போல ஆதிக்கம் செலுத்திய ரஷ்கினின் ''கடையனுக்கும் கடைத் தேற்றம்'' (Unto This Last) என்ற நூலைப் படித்து அதனுடைய உயிரோட்டக் கருத்துக்களைப் பின்பற்றத் தொடங்கினார்.

---

11. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், ப. 337.

மற்றவர்கள் நூற்களைப் படிப்பதற்கும், காந்தியடிகள் நூற்களைப் படித்ததற்கும் வேறுபாடு உண்டு. இதனை ஓர் ஆசிரியர், "மற்றவர்கள் எவற்றை மனமகிழ்ச்சிக்காகப் படித்தார்களோ, அவற்றை அவர் பின்பற்றுவதற்காகக் கற்றார்";[12] என்று கூறுகின்றார்.

தென்னாப்பிரிக்காவில் இருந்த காலத்தில் இரண்டாவது தடவையாக இங்கிலாந்திற்குச் சென்று திரும்புகின்ற பொழுது அவரது கொள்கை விளக்கமாக 'ஹிந்த் ஸ்வராஜ் அல்லது இந்திய சுயராஜ்யம்,' என்ற நூலை எழுதினார். இந்தியர்களின் நிலையை விளக்கப் பத்திரிகை நடத்தினார்.

மொத்தத்தில் சாதாரண மோகனதாஸ் கரம்சந்த் காந்தியாகத் தென்னாப்பிரிக்காவிற்குச் சென்றவர், பற்றற்ற பிரம்மச்சாரி (1906) யாகவும், உறுதிமிக்க சத்தியாக்கிரகப் போராட்டத் தலைவராகவும், எண்ணியதை எண்ணியபடி எழுதுகின்ற சிறந்த எழுத்தாளராகவும், சோதனைகள் செய்வதில் வேட்கையுள்ள சமுதாய விஞ்ஞானியாகவும் வளர்ச்சி பெற்று 1915-இல் இந்தியாவிற்குத் திரும்பினார். இதனை, "அவருடைய வாழ்க்கை பெருமாற்றத்திற்கு உள்ளானது. புறமானவைகளில் மட்டுமல்ல, அவருடைய வாழ்க்கை முறையிலும், புதிய மதிப்புக்களைப் பெறுவதிலும் மாறுதல்கள் ஏற்பட்டன", என்று நந்தா கூறுகின்றார். பின்னால் காந்தியடிகள் இந்தியாவில் மேற்கொண்ட பணிகளுக்கெல்லாம் வேண்டிய கடுமையான பயிற்சி அவருக்குத் தென்னாப்பிரிக்காவில் கிடைத்தது.

காந்தி மகாத்மாவாக மாறிய அவருடைய வாழ்க்கையின் நான்காவது கால கட்டத்தை (1915-1948) இந்தியா கண்டது. இக்காலத்தை அவருடைய "வெற்றிக்காலம்" அல்லது "சாதனைக் காலம்" என்று கூறலாம். தனது தனி வாழ்க்கையையும், பொது வாழ்க்கையையும் ஒன்றுக்கிக் கொண்ட காந்தியடிகள், இக்காலத்தில் இந்தியாவின் விடுதலை இயக்கத்திற்குத் தலைமை ஏற்றார். அவர் மேற்கொண்ட பணிகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, ஒத்துழையாமை இயக்கம் (1920-21), உப்புச்

12. B. R. Nanda, 'Mahatma Gandhi' - A Biography.

சத்தியாக்கிரகம் (1930-31), தனி நபர் சத்தியாக்கிரகம் (1940-41), வெள்ளையனே வெளியேறு இயக்கம் (1942) போன்ற அரசியற் போராட்டப் பணிகள். இரண்டாம் வகை புதிய பாரதத்தை உருவாக்க அவர் மேற்கொண்ட சுதேசி இயக்கம், தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, ஆதாரக் கல்வி, கிராமக் கைத்தொழில் வளர்ச்சி போன்ற ஆக்கப் பணிகள்.

இக்காலத்தில் அண்ணலின் பாதங்கள் இந்தியா முழுவதும் சுற்றி வந்தன. அவர் வாய் ஓயாமல் பேசிக் கொண்டிருந்தது. கைசோர்வடையாமல் எழுதிக்கொண்டிருந்தது. அவரது ஆன்மீக அடிப்படையில் அரசியல், பொருளாதார, சமுதாயக் கொள்கைகள் நடைமுறை அனுபவங்களை ஒட்டி உருவாக்கப் பெற்றன.

மொத்தத்தில் காந்தியடிகளின் வாழ்க்கை நமது அளவுகோலின்படி வியப்பிற்குரியதாகவே இருந்தது. இதனைப் பகுத்தறிவுவாதியான பண்டித ஜவஹர்லால் நேரு, "வற்றாத ஆன்மிகக் கடலிலிருந்து வருவதுபோன்று காந்தியடிகளின் ஆற்றல் வெளிவந்ததைக் கண்டபோது, இந்தியப் புராணக் கதைகள் எனது நினைவுக்கு வந்ததுண்டு. உறுதியாக அவர் உலகின் சாதாரண மக்கள் இனத்தைச் சேர்ந்தவரல்லர்; வேறு அபூர்வ வகையைச் சேர்ந்தவராவார். பல முறைகளில் காந்தி-யடிகளின் கண்களின் மூலம் இறைவனே நம்மைப் பார்த்தான்,"[13] என்று கூறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

காந்தியடிகளின் கொள்கைகளை அவரது வாழ்க்கையின் பின்புலத்தில் மட்டுமே சரியாகப் புரிந்துகொள்ள முடியும். மேற்போக்காகப் பார்த்தால் சிலவற்றில் முரண்பாடு இருப்பதுபோலத் தோன்றலாம். ஆழ்ந்து பார்த்தால்தான் மலர்களை இணைத்துக்கொண்டிருக்கும் நாரைப் போல அவரது கொள்கைகளை இணைத்துக்கொண்டிருக்கும் சத்தியம், அகிம்சை என்னும் நுண்ணிழைகளைக் காண முடியும். இந்த உண்மையை, "காந்தியடிகள் பல்வேறு ஆற்றல்கள் அமைந்த ஒரு தனி மனிதர். புறத்தேதெரிந்த அவர் வாழ்வின் எளிமைக்கும் அகிம்சையின்பால் அவருக்

13. "அச்சம் தவிர்த்த அண்ணல்", ப. 10.

கிருந்த மனம் ஒருமித்த ஈடுபாட்டிற்கும் பின்னால் எண்ணற்ற பல எண்ண விரிவுகளும், ஒழுக்க நெறிகளும், பற்றுக்களும், ஆர்வங்களும் மறைந்துகிடந்தன. ஒரே சமயத்தில் ஞானியாக இருந்துகொண்டே புரட்சியாளராகவும், அரசியல்வாதியாக விளங்கிக்கொண்டே சமுதாயச் சிற்பியாகவும், பொருளாதாரம் பேசிக்கொண்டே சமய நெறிச் செல்வராகவும், நம்பிக்கையை வழிபட்டுக் கொண்டே பகுத்தறிவுவாதியாகவும், இந்துவாக இருந்து கொண்டே எல்லா மதங்களின் உண்மைகளை ஏற்பவராகவும், தேசிய முனிவராகத் திகழ்ந்த வண்ணமே அனைத்துலகத் தேசியத்தை விரும்புபவராகவும், செயல் வீரராக மிளிர்ந்தபோதே கனவுலகில் வாழ்பவராகவும் அவர் காட்சியளித்தார்,''[14] என்று ஜி. இராமச்சந்திரன் விளக்கிக் கூறுகின்றார்.

காந்தியடிகள் அவர் நடத்திய இதழ்களில்[15] நிறைய எழுதி இருக்கின்றார். எண்ணற்ற கடிதங்கள் வரைந்திருக்கின்றார். அவருடைய பேச்சுக்களை எல்லாம் உடனிருந்தவர்கள் எழுதி அச்சிட்டிருக்கின்றனர். இவை தவிர ''இந்திய சுயராஜ்யம்,'' ''சத்தியசோதனை'' ''சர்வோதயம்'' போன்ற சில நூற்களையும் எழுதியிருக்கின்றார். அவருடைய எழுத்துக்களையும் பேச்சுக்களையும் தொகுத்துப் பல நூற்களாகப் பல தலைப்புக்களில் வெளியிட்டிருக்கின்றனர்.

காந்தியடிகளின் படைப்புக்களில் அவரது வாழ்க்கை வரலாறாக அமைந்த ''சத்திய சோதனை'' முதன்மையானது. அவரது அகத்தைக் காட்டும் கண்ணாடியாக அது அமைந்திருக்கின்றது. அவரது கோட்பாடுகளின் கருக்களைக் கொண்ட நூல் ''இந்திய சுயராஜ்யம்''. இதனைக் கார்ல் மார்க்ஸின் ''பொதுவுடைமை அறிக்கை'' யோடு ஒப்பிடுகின்றனர் சில திறனாய்வாளர்கள்.

''இந்திய சுயராஜ்யம்'' நூலை 1909-இல் தென் ஆப்பிரிக்காவிலிருந்து இங்கிலாந்திற்குச் சென்ற காந்தியடிகள், அங்கு இந்தியர்களிடம் 'பயங்கரப் பலாத்கார நோக்கம்' பரவுவதைக்கண்டு, அவர்களது ஐயங்களுக்கு

14. காந்தியடிகள் பல கோணங்களில், ப. 118.

15. Indian Opinion, young India, Harijan.

விடையளிக்கும் முறையில் இங்கிலாந்திலிருந்து தென் ஆப்பிரிக்காவிற்குத் திரும்புகின்ற பொழுது கப்பலில் எழுதினர். கையெழுத்தில் 271 பக்கங்கள் வந்த இந் நூலைப் பத்து நாட்களில் குஜராத்தி மொழியில் எழுதி யிருக்கின்றார். இந்நூலைப்பற்றி அவரே, ''இந்திய சுய-ராஜ்யம்' வெறுப்பிற்குப் பதிலாக அன்பு நெறியைக் கற்றுத் தருகின்றது. வன்முறைக்குப் பதில் தன்னலத் தியாகத்தை அளிக்கின்றது. மிருக சக்திக்கு எதிராக ஆன்ம சக்தியை உண்டாக்குகிறது,'' என்று கூறுவதி லிருந்து நூலின் நோக்கத்தையும், அவரது தத்துவ நோக்கத்தையும் அறிந்து கொள்ளலாம்.

காந்தியடிகள் ஒரு தனித்தத்துவத்தை உலகிற்கு அளிக்க வேண்டுமென்ற உள்நோக்கத்தோடு எழுதவோ' பேசவோ முயலவில்லை. ஆனால் அவரது கருத்துக்களும், அவரது செயல் திட்டங்களும், காலப்போக்கில் உலகிற்கு வழி காட்டுகின்ற ஒரு தத்துவமாக உருவெடுத்திருக் கின்றது.

## IV. சில ஒற்றுமைகளும் வேற்றுமைகளும்

மகாத்மாவின் வாழ்க்கை வரலாற்றையும், மார்க்ஸின் வாழ்க்கை வரலாற்றையும் படிக்கின்றவர்கள், சில வியப்பிற்குரிய ஒற்றுமைகளையும், அடிப்படை வேறுபாடு களையும் கவனிப்பார்கள்.

இரண்டு பேரும் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர் கள். இருவருக்கும் அமைந்த இளமை வாழ்க்கை வசதி யுடையதாக இருந்திருக்கின்றது. இருவரின் பெற்றோர் களும் சமயத்தில் ஈடுபாடும் நம்பிக்கையும் கொண்டவர்கள் ஆனால் காந்தியடிகளிடம் பிரதிபலித்த பெற்றோர்களின் சமயப்பற்று, குடும்பச் சூழ்நிலையின் செல்வாக்கு கார்ல் மார்க்ஸிடம் தோன்றவில்லை.

காந்தியடிகளுக்கு இளமை முதலே ஆன்மீகத்தாக்கம் மிகுதியாக இருந்திருக்கின்றது. ஆனால் கார்ல் மார்க்ஸோ அறிவு வேட்கை மிக்கவராகவே வாழ்ந்திருக்கின்றார்.

இரண்டு பேரும் கற்ற பாடங்கள் வேறு. காந்தியடிகள் சட்டம் பயின்றவர். மார்க்ஸ் தத்துவம் கற்றவர். ஒரு நிலையில் இரண்டு பேருமே ஆசிரியப் பணியை மேற்கொள்ள முயன்றனர். ஆனால் இரண்டு பேருக்கும் ஆசிரியப் பணி கிடைக்கவில்லை. இதனால் வேலை தேடி வெளிநாடு செல்ல வேண்டிய இன்றியமையாமை இரண்டு பேருக்கும் ஏற்பட்டிருக்கின்றது.

மகாத்மாவும் மார்க்சும் ஒருவகையில் உலகம் சுற்றும் வாய்ப்பைப் பெற்றவர்கள். இந்தியாவில் பிறந்த காந்தியடிகள் இங்கிலாந்தில் படித்தார்; தென்னாப்பிரிக்காவில் தொழில் செய்தார். ஜெர்மனியில் பிறந்த மார்க்ஸ், வேலை தேடி பிரான்சுக்கும், அங்கிருந்து நாடு கடத்தப்பட்டுப் பெல்ஜியத்திற்கும், பின் இங்கிலாந்திற்கும் சென்றார்.

இரண்டுபேரும் ஏழை எளியவர்களுக்காகப் போராடுவதைத் தங்களது வாழ்க்கை நோக்கமாகக்கொண்டவர்கள். இதற்காகக் காந்தியடிகள் வாழ்நாளெல்லாம் செயல்திட்டங்கள் வகுத்துக்கொண்டு போரிட்டார். மார்க்ஸ் முதலில் போராட்டத்தில் ஈடுபட்டு, பின் புரட்சி எழுத்தாளராகக் காலத்தைக் கழித்தார்.

மகாத்மா ஆங்கிலேயப் பேரரசினை எதிர்த்துப் போரிட்டார். மார்க்ஸ் முதலாளித்துவத்தை எதிர்த்திடும் போருக்கு வழிவகுத்தார். ஆனால் முன்னவர் அணுகிய முறைக்கும், வகுத்துக்கொண்ட வழிமுறைக்கும் பின்னவர் பின்பற்றிய நெறிக்கும் இடையே மிகுந்த வேறுபாடு உண்டு.

காந்தியடிகள் கர்மயோகி. அவர் தனது வாழ்க்கையையும் சமுதாயத்தையுமே ஆய்வுக்களமாகக்கொண்டார். தன் வாழ்வில் பெற்ற பட்டறிவினைக் கருத்தாக மாற்றிக் கொடுத்தார். கார்ல்மார்க்ஸ் ஒரு சிந்தனையாளர். நூலகத்தைத் தனது ஆய்வுக்களமாகக்கொண்டார். கற்றவற்றைக்கொண்டு தத்துவம் படைத்தார்.

இரண்டு பேருடைய வாழ்க்கை வேறுபாட்டைப் போன்றே, அவர்களுடைய தத்துவங்களும் வேறுபடுகின்றன. அவற்றையும் ஆய்ந்து பார்க்கலாம். ●

# 3. காந்தியம்
# அல்லது
# சர்வோதயம்

"தன்னுயிர் போலே தனக்கழி வெண்ணும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்
மன்னுயி ரெல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்
இன்னமெய்ஞ் ஞானத் துணிவினை மற்றுங்கு
இழிபடு போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனில்
பிணைத்திடத் துணிந்தனை, பெருமான்!

பெருங்கொலை வழியாம் போர்வழி இகழ்ந்தாய்;
அதனிலுந் திறன் பெரி துடைத்தாம்
அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி யென்றுநீ அறிந்தாய்;
நெருங்கிய பயன்சேர் 'ஒத்துழை யாமை'
நெறியினால் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத்தொழில் மறந்து
வையகம் வாழ்கநல் லறத்தே!"[1]

— மகாகவி பாரதியார்

காந்தியடிகள் ஒரு தத்துவ ஞானியாகவோ, எண்ணற்ற நூற்களைக் கற்ற அறிஞராகவோ வாழ

---

1. மகாகவி பாரதியார் கவிதைகள் - சக்திவெளியீடு, ப. 72.

முயன்றவரோ, வாழ்ந்தவரோ அல்ல. தனக்கென்று வகுத்துக் கொண்ட நெறிகளின்படி வாழ்ந்த ஒரு சிறந்த செயல் வீரராகத் திகழ்ந்தார். அவரது வாழ்க்கை,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்,"[2]

என்ற வள்ளுவரின் வாய்மை மொழிக்கு இலக்கியமாக அமைந்தது. அவரது பேச்சையும், எழுத்தையும் விடச் செயல்கள் ஆற்றல் மிக்கவைகளாக இருந்தன. திட்டமிட்டு ஒரு தத்துவத்தை அவர் உருவாக்கவில்லை. ஆனால் அவர் வாழ்ந்த வாழ்க்கையும், வழங்கிய கருத்துக்களும் ஓர் உயர்ந்த வாழ்க்கைத் தத்துவத்தை உருவாக்கின.

காந்தியடிகளின் வாழ்க்கை சாதாரண நிலையிருந்து படிப்படியாக வளர்ந்து மலர்ச்சி பெற்றது. 1893-இல் அவர் தென்னாப்பிரிக்காவிற்குச் சென்றார். உறுதிபடைத்த உள்ளம்கொண்ட அவரால் தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைத் தாங்க முடியவில்லை. 1894 ஆம் ஆண்டு ஆகஸ்டு 22-இல் நேட்டால் இந்தியக் காங்கிரஸ் தோன்றியது முதல் அவரது பொதுவாழ்க்கை தீவிரமடைந்தது. அவரது மண்ணுலக வாழ்வின் இறுதிவரை அவரின் பொதுவாழ்க்கையின் ஆழமும் பரப்பும் விரிந்து பெருக, தனது தனி வாழ்க்கைக்கும் பொது வாழ்க்கைக்கும் வேறுபாடில்லாமல் இரண்டையும் ஒன்றாக-ஒரு திறந்த நூலாக- மாற்றிக் கொண்டதை உலகம் கண்டு வியந்தது. அவரது ஒருங்கிணைந்த வாழ்க்கையிலிருந்து மனித வாழ்க்கையின் எல்லாத்துறைகளையும் பிரிக்காமல், தொட்டுத் தழுவி இணைக்கின்ற, வாழ்க்கையை முழுமையை நோக்கிச் செலுத்துகின்ற ஒரு தத்துவம் பிறந்தது. அவர் விரும்பாவிட்டாலும், அடக்கமாக அதனைத் தத்துவமில்லையென்று கூறியபோதிலும், இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய உலகை உய்விக்கின்ற ஒப்பற்ற தத்துவமாக அமைந்த அதனைக் "காந்தியம்" அல்லது "சர்வோதயம்" என்ற பெயரால் இன்று குறிப்பிடுகின்றோம். காந்தியம் என்பது அண்ணலின் பேச்சு, எழுத்து, செயல் ஆகியவற்றின் சாரமாக, ஏறத்தாழ ஐம்பதாண்டுக் காலத்தில் உருவான

2. திருக்குறள், 50.

இப்பொழுதும் வினோபா போன்ற அவரது அடிச்சுவடுகளில் நடப்பவர்களால் வளர்க்கப்பட்ட கருத்துக்களின் முறைப்படுத்தப் பெற்ற தொகுப்பாக அமைகின்றது.

காந்தியத்தின் இயல்புகளை அறிந்துகொள்வது அதனை முழுமையாகப் புரிந்துகொள்ளத் துணை செய்யும். காந்தியடிகள் வாழ்க்கையை அரசியல், பொருளியல், சமுதாயம், சமயம் என்று பகுத்துப் பார்த்தவரல்ல. வாழ்க்கையை முழுமையாகக் கண்டதால் எல்லாத்துறைகளைப் பற்றியும் மனித வாழ்க்கையை மையமாகக்கொண்டு கருத்துகளைக் கூறுகின்றார். அவர் எப்பொழுதும் அறிவுலகம் போற்றும் வகையில் ஓர் ஆய்வுரையை (Thesis) வரைய முயலவில்லை. மனிதவாழ்க்கையில் எதிர்ப்படுகின்ற சிக்கல்களைத் தீர்க்க அற வழியில் முயன்றார். அகிம்சை, சத்தியம் என்ற வரையறைக்குள் நின்றுகொண்டு தனது ஆக்கச் செயல்களை மேற்கொண்டும், போராட்டங்களை நடத்தியும் வாழ்ந்தார். இந்த அற நோக்கே அவரது தத்துவத்தின் அச்சாணியாகியது.

அவர் ஓர் ஆன்மீகச் செல்வர். சமயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், சமயம் என்ற குறுகிய வட்டத்திற்குள் அவர் தன்னை முடக்கிக்கொள்ளவில்லை. அவரது சமயக் கோட்பாடு ஆன்மநேய ஒருமைப்பாடாக அமைந்தது. "சமய வாழ்வின் முழுத்தன்மை ஒருவனுக்குச் சாது நிலை கூட்டும். மாக்கள் நிலையினின்றும் மக்கள் நிலை எய்துவது சாதுநிலை எய்துவதாகும்......மகாத்மா காந்தி ஒரு பெருஞ் சாது என்பது எனது கருத்து. காந்தியடிகள் மக்களிடை வாழ்ந்தனர்; பேசினர்; தொண்டு செய்தனர். அவர் மனைவி மக்களைத் துறந்தாரில்லை; காவியுடுத்தினாரில்லை; தாடிவளர்த்தாரில்லை; ஆனால் அவர் சினத்தை வென்றனர்; காமனைக் காய்ந்தனர். அவர் உள்ளம் அலையற்ற கடல்போல் அமைதியாயிருந்ததை அவரது முகம் அறிவித்தது. அடிகள் ஓயாது, கைம்மாறு கருதாது, பிறர்க்கு உழைத்து வந்தனர். இந்நிலை சாதுவினுடையது,"[3] என்கின்றார் திரு. வி. க. காந்தியடிகள் சமயத்தின் சாரமாகக்கொண்ட தொண்டு வாழ்க்கையை அவரது தத்துவத்தில் காணமுடிகின்றது. கீதையின் உயிர்மூச்சாகவும், புத்தர், ஏசு, முகமது நபி போன்றோரின்

3. "மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்", பு, 465.

உள்ளொளி பெருக்கிய கருத்தாகவும் "அன்பு" இருப்பதனைக் கண்டு, அதனை அண்ணல் வழிகாட்டும் ஒளிவிளக்காகக்கொண்டார். அண்ணலின் அன்பு நெறி நின்ற சமய உள்ளத்தை விளக்குவதாக,

''எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
தம்உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர்அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம்எனநான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ,''[4]

என்ற வள்ளலாரின் திருவருட்பாப் பாடல் அமைகின்றது. காந்தியடிகளின் மனமும் இந்நிலையில் நின்றதால், இதன் செல்வாக்கை அவரது கோட்பாடுகளில் காணமுடிகின்றது.

காந்தியடிகள் மரபு வழியில் நிற்பதுபோலத் தோன்றுகின்றார். அவருக்கு முன்னும், அவர் காலத்திலும் வாழ்ந்த பலரை வழிகாட்டிகளாகக்கொண்டார். அவருக்கு முன்னால் பலர் பயன்படுத்திய சொற்களைக் கையாண்டு கருத்துக்களைக் கூறினார். மக்கள் புரிந்துகொள்கின்ற மொழி நடையில் பேசவும் எழுதவும் செய்தார். ஆனால் அவர் கூறியவை பழையனவாக இல்லை. பழஞ்சொல்லுக்குப் புதுப் பொருள் கொடுத்தார். புரட்சியாளராக விளங்கினார். இதனைக் "காந்தியடிகளின் கருத்துக்கள் எத்தகைய வெளி உருவும் பெற்றிருந்தபோதிலும், எப்படிச் சொல்லப் பட்டிருந்தபோதிலும் புதுமையானவைகளாகவும்; புரட்சிகரமானவைகளாகவும் இருக்கின்றன,"[5] என்று கிருபாளனி கூறுகின்றார்.

காந்தியடிகள் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குகின்ற ஆக்கப்பணியில் ஈடுபட்டார். அதற்காகப் புதிய மதிப்பீடுகளை ஏற்றுக்கொள்ள அவர் தயங்கவில்லை. "நாம் முன்னேற வேண்டுமென்றால் வரலாற்றைத் திருப்பக்

4. "திருவருட்பா"-ஊரன் அடிகள் பதிப்பு-பாடல் 5297
5. J. B. Kripalani, "Gandhi: His life and Thought", p. 308.

கூடாது. ஆனல் புதிய வரலாற்றைப் படைக்க வேண்டும்,''[6] என்ற தெளிவோடு செயல்பட்டார். அவரது தத்துவம் புதிய வரலாற்றைப் படைக்க வழிவகுப்பதாக இருக்கின்றதை நாம் காண்கின்ருேம்.

காந்தியத்தின் அடிப்படையாக அண்ணலின் சமயக் கருத்துக்கள் அமைகின்றன. காந்தியடிகளுக்கு எல்லாம் வல்ல இறைவனிடம் உறுதியான நம்பிக்கை இருந்தது. இறைவனின் சட்டதிட்டங்களின் படி இவ்வுலகில் எல்லாம் நடைபெறுவதாக எண்ணிஞர். '' அவனின்றி ஓரணுவும் அசையாது,'' என்று நமது நாட்டில் சாதாரண மக்களும் நம்புவதைப்போல அவரும் நம்பிஞர். ஆனல் அது வெறும் மூடத்தனமான, கண்மூடிப் பழக்கங்கள்கொண்ட பக்தியாக அவரிடம் வெளிப்படவில்லை. அவரது அறிவுசார்ந்த கொள்கையாக மலர்ச்சி பெற்றது. கடவுளைப் பற்றி அவர், '' என்னைச் சுற்றியுள்ள ஒவ்வொன்றும் எப்பொழுதும் மாறிக்கொண்டும், அழிந்துகொண்டும் இருப்பதனைத் தெளிவற்ற முறையில் நான் காண்கின்றேன். எனினும், இவ்வளவு மாறுதலுக்கு இடையிலும், மாறுதலற்ற ஓர் உயிராற்றலையும் நான் தெளிவின்றிக் காண்கின்றேன். இந்த சக்தி எல்லாவற்றையும் ஒன்ருக இணைக்கின்றது; ஆக்குகின்றது; அழிக்கின்றது; மறுபடியும் உருவாக்குகின்றது. உயிர்ப்பிக்கும் அந்த சக்தி அல்லது தத்துவமே கடவுள் ஆகும். புலன்களின் மூலம் மாத்திரம் நான் காணும் எதுவும் நிலைக்க முடியாது அல்லது நிலைக்காது. கடவுள் ஒருவர்தான் நித்தியமாக நிலைத்திருப்பவர்,,[7] என்று விளக்குகின்ருர்.

இறையை 'அருள் சக்தி' 'உயிர்,' 'உண்மை', 'ஒளி', 'அன்பு மயம்' என்றெல்லாம் கூறிய காந்தியடிகள் முதலில் '' கடவுள் சத்தியமாக இருக்கின்ருர்,'' என்று கூறிஞர். பின்னல் கடவுளை இனம் காண்பதிலும், விளக்குவதிலும், நம்புவதிலும் இருக்கின்ற வேறுபாடுகளையும், கடவுளை மறுப்பவர்களையும் கண்டபோது, அனைவரும் சத்தியத்தை ஏற்பதனைக் கண்டு தெளிந்து, '' சத்தியமே

6. Young India, May 6, 1926.

7. Young India, 11-10-1928.

கடவுள்.'' என்றார். ஆதலால்தான் சத்தியத்தைத் தேடுவதைத் தனது வாழ்க்கை நோக்கமாகக் கருதியதால் தனி வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் 'சத்திய சோதனை'யை மேற்கொண்டார். சத்தியத்தை அடைவதைக் குறிக்கோளாகவும் அகிம்சையை அதனை அடையப் பின்பற்றும் வழிமுறையாகவும் கருதுகின்றார்.

காந்தியடிகள் வழிபாடின்றி எதனையும் செய்யாதவர். இறைவனை உள்ளுணர்வின் மூலம் உணர்ந்ததாகக் கூறுகின்றார். ''மனச்சான்றின் குரலாக'' இறைவனின்குரலைக் கேட்கின்ற அளவிற்கு மனப்பக்குவத்தைச் சமயவாழ்க்கைப் பயிற்சியே அளிக்குமென்று கருதுகின்றார். உள்ளத்தில் இறைவன் உள்ளானென்பதும், உள்ளத் தூய்மையே உயரிய ஆன்மீக வாழ்க்கைக்கு ஆதாரமென்பதும் பழம் பெரும் பாரதத்தின் நம்பிக்கைகளாகும். ''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்,'' என்ற வள்ளுவர் வாக்கையும், அதற்கு விளக்கமாக ''தூய்மை இல்லையானால், காதல் வாழ்க்கையால் மனம் பண்படுவதும் இல்லை; பொது வாழ்க்கையில் மனம் பயன்படுவதும் இல்லை; மனம் ஒரு கண்ணாடி; மாசு படியப்படியக் கண்ணாடி தானும் விளங்குவதில்லை; மற்றப் பொருளையும் விளக்குவதில்லை. மனமும் அத்தகையதே. தூய்மை அற்ற மனம் தானும் பண்படுவதில்லை; பிறர்க்கும் பயன்படுவதில்லை. தூய்மையே மனத்தின் ஆற்றல். தூய்மை மிக மிக, ஆற்றலும் பெருகும். தூய்மையுள்ள மனமே முழுதும் பண்படும்; முழு வாழ்வு வாழும்'',[8] என்று டாக்டர் மு. வரதராசனார் கூறுவதையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

காந்தியடிகளின் தத்துவம் சமயச் சார்புடையது. அவருடைய உள்ளத்தில் குடும்பச் சூழலாலும், நட்பாலும், பெரியோர் தொடர்பாலும், படித்த நூற்களின் செல்வாக்காலும் பதிந்திருந்த அறக்கருத்துக்களின் சாரத்தை அவரது தத்துவத்தின் ஊடுசரடாகக் காணமுடிகின்றது. இதனை அவரே, ''டால்ஸ்டாய், புத்தர் இவர்களுடைய கொள்கைகளின் அரைகுறையான கலப்படமே 'எனது தத்துவம்' என்பதை நான் நம்பவில்லை. நான் எது சத்தியம் என்று கருதுகின்றேனோ அதைத் தவிர, எனது

8. ''திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்'' ப. 278 - 279.

தத்துவம் என்பது என்ன வென்றே எனக்குத் தெரியாது. அந்த சத்தியமே என்னைத் தாங்கி வருகின்றது. டால்ஸ்டா யிடமிருந்தும் புத்தபிரானிடமிருந்தும் நான் எவ்வளவோ தெரிந்துகொண்டுள்ளேன். இருந்தாலும், கீதையின் போதனைகளின் உண்மையான பொருளை 'எனது தத்துவம் பிரதிபலிக்கிறது என்பதே எனது எண்ணமாகும்......எனது உறுதியான கொள்கை கலப்பற்ற சத்தியமாக இருக்கு மாயின், அந்த உயிரோட்டத்திற்கு மூலகாரணம் எது வென்பது முக்கியமல்ல''[9], என்று கூறுகின்றார்.

மனித இனத்திற்குத் தொண்டு செய்வதை (கர்ம யோகம்) உண்மையான சமயப்பணியாக எண்ணுகின்றார். காந்தியடிகள் சமயத்தை வழிபாட்டு அறையின் நான்கு சுவர்களுக்குள் அடக்கவில்லை. சமயங்கள் கூறும் அறநெறிகளையே வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் பின்பற்ற வேண்டுமென்று வலியுறுத்துகின்றார். இதனை அவர், ''உண்மையில் நம்முடைய நடவடிக்கைகள் ஒவ் வொன்றிலும் ஊடுருவியிருக்க வேண்டும். இங்கே சமயம் என்பதற்கு சமயவெறி என்று பொருளில்லை. உலகத்தின் ஒழுங்கான தார்மிகக் கட்டுப்பாட்டில் நம்பிக்கை என்பதே அதன் அர்த்தமாகும்,''[10] என்று விளக்கியிருக்கின்றார்.

காந்தியடிகள் பருப்பொருளை (Matter) விடக் கண்ணுக்குப் புலனாகாத ஆன்மாவின் ஆற்றலை (Spirit) மிகுதியும் நம்புகின்றார். இந்த நம்பிக்கையே, அறத்தை மறம் சூழ்ந்து மூடுவதுபோலத் தோன்றினாலும், இறுதி யில் அறமே வெல்லுமென்ற எண்ணத்தோடு செயல்பட ஆற்றலை வழங்கியது. அவரது சமயப்பற்று, மனிதனிட மிருக்கின்ற நல்ல இயல்பை முதன்மையாகக் கருதச் செய்தது. இதனால் 'எந்த மனிதனையும் மாற்ற முடியும்', என்ற கருத்து அவருடைய தத்துவத்தில் இடம் பெற்றது. ''மனித இயல்பு உறுதியாக எப்பொழுதும் நெகிழ்வற்றி ருக்குமென்ற கோட்பாட்டை அகிம்சையின் ஆற்றலில் எனக்கிருக்கும் நம்பிக்கை மறுக்கின்றது'', [11] என்று அவர் கூறியிருப்பது சுட்டிக்காட்ட வேண்டியதாகும். மனிதாபி

9. Young India, 12 - 2 - 1925.

10. Harijan, 10 - 2- 1940

11. "In search of the Supreme", Vol. I p. 69.

மானம் அவரது தத்துவத்தில் இயங்கும் சக்தியாக இருக்கின்றது.

சர்வோதய தத்துவத்தில் அரசியலின் நிலையை நாம் விளக்கலாம். பொதுவாக அரசியல் என்றால் மக்களை ஆளுகின்ற கலையென்று கூறினார்கள். நடைமுறையில் அதிகாரத்தைக் கைப்பற்ற எந்த வழிமுறையையும் பின்பற்றலாமென்ற எண்ணம் வளர்ந்தது. காந்தியடிகள் கொள்கையற்ற அரசியலை ஆங்கிலேயர்கள் பின்பற்றியதால் உலகிற்கு நேர்ந்த தீங்கை நேரடியாக உணர்ந்திருந்தார். வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் ஊடுருவி, அவற்றைத் தனக்குள் அடிக்கிவைத்திருக்கும் அரசியலைப் புறக்கணித்துவிட்டு வாழ முடியாதென்ற தெளிவே அவரை அரசியலில் நேரடியாகப் பங்குபெறச் செய்தது.

காந்தியடிகள், ''மேல்நாட்டினரின் தந்திரங்களையும் முறைகளையும் நாம் பின்பற்றினால், இந்த நாட்டின் அரசியல் வாழ்க்கை முற்றிலும் ஊழல்மயமாகிவிடும் என்பது எனது கருத்தாகும். நேர்மை, நியாயம், தருமம் முதலியவற்றை மிகவும் கண்டிப்பாக அனுசரித்தால்தான், இந்த நாட்டின் உண்மையான நலன்கள் வளர்ச்சி அடைய முடியும் என்பதே எனது நம்பிக்கை'',[12] என்று கூறுகின்றார் காந்தியடிகளுக்கு முன்னால் அரசியலில் ஈடுபடுகின்றவர்கள் பின்பற்றவேண்டிய அறநெறிகளை யாரும் வகுத்துக் கொடுக்கவில்லை. ஆனால் அண்ணலோ 1. சத்தியம் 2. அகிம்சை 3. பிரம்மச்சரியம் 4. திருடாமை 5. உடைமையின்மை 6. உடல் உழைப்பு 7. நாவடக்கம் 8. அஞ்சாமை 9. சமய ஒற்றுமை 10. சுதேசி 11. தீண்டாமை ஒழிப்பு ஆகிய பதினொரு அறநெறிச்சாரங்களை விரதங்களாக்கி அனைவரும் பின்பற்ற வேண்டுமென்று வலியுறுத்துகின்றார்.

முடியாட்சி போன்ற அமைப்புக்கள் சிறுபான்மையினரின் நலனைக் கட்டிக்காக்கப் பெரும்பாலானவர்களின் நலனைப் புறக்கணித்தது. மக்களாட்சி முறையில் பெரும்பாலானவர்களின் நலனுக்காகச் சிறுபான்மையினரைப்

12. 'மகாத்மா காந்தி நூல்கள்', (தொகுப்பு 10), ப. 438.

பற்றிக் கவலைப்படாத போக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. காந்தியடிகளின் அரசியலில் அனைவரின் நலனையும் கட்டிக் காப்பது கொள்கையாயிற்று.

காந்தியடிகள் அரசியல்-நடவடிக்கைகளும் சமயங்கள் கூறுகின்ற அறநெறிகளின்படியே அமையவேண்டுமென்று கருதினார். "சமயத்தினின்று பிரிந்திருக்கும் அரசியலுக்கு அர்த்தம் எதுவுமில்லை....... அரசியல் நமது வாழ்க்கையின் ஒரு பகுதி. நாம் நமது தேசிய நிறுவனங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். நமது இளமையிலிருந்தே நாட்டைப் பற்றிய அறிவோடு வளர வேண்டும்....... ஆனால் நாம் சமய நம்பிக்கை என்ற மாசற்ற ஒளியை, நிலையான ஒளியையும் விரும்புகின்றோம்",[13] என்று கூறியிருக்கின்றார்.

காந்தியடிகள் அரசுக்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டுமென்று கருதினாலும் கூட, நாட்டுப்பற்றின் காரணமாகவோ, அரசுக்கு நன்றியுடன் வாழ்வதென்ற பெயராலோ மனச்சான்றுக்கு மாறுபட்டுச் செயல்படுவதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அரசின் சட்டமே மறத்திற்குச் சார்பாக இருந்தால் அதனை எதிர்த்துப் போரிடுவதை அறச் செயலாக அவர் கருதினார். "நாம் இறைவனிடம் உறுதியான நம்பிக்கை கொண்டு அவனுக்கு அஞ்சி வாழ்ந்தால், மாமன்னருக்கோ, வைசிராய்களுக்கோ, துப்பறிபவர்களுக்கோ, ஜார்ஜ் மன்னருக்கோ யாருக்கும் அஞ்ச வேண்டியதில்லை",[14] என்று அறவுரை கூறியது குறிப்பிடத்தக்கது.

காந்தியடிகள் நாம் அடைய விரும்புகின்ற நோக்கமும், அதற்காகப் பின்பற்றுகின்ற வழிமுறைகளும் தூய்மையானதாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றார். பெரும்பாலும் அரசியலறிஞர்கள் உயர்ந்த இலட்சியங்களை மட்டுமே வலியுறுத்துகின்றனர். வழிமுறைகளைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. காந்தியடிகள்தான் முதன் முதலாக குறிக்கோள்களுக்குக் கொடுத்த அதே முக்கியத்துவத்தை வழிமுறைகளுக்கும் கொடுத்தார்.

---

13. M. K. Gandhi's speech at Madras (1916), "Speeches and Writings" (3rd Edition), p. 162.
14. "To The Students" (Hindu University Speech), p. 43-44.

அரசியலில் எல்லா நிலைகளிலும் மக்களின் நலம் பேணப்பட வேண்டுமானால் வழிமுறைகளில் முழுக்கவனம் செலுத்துவது தேவையென்று காந்தியம் வலியுறுத்து கின்றது. மகாத்மாவைப் பொறுத்தவரை, வழிமுறை களும் நோக்கங்களும் சமமானவைகளே. அவரது செயல் திட்டங்களில் குறிக்கோளைவிட வழிமுறைகளுக்கே முதன்மையான இடமளித்தார். அவர் ''வழிமுறைகளை விதைக்கும், நோக்கை மரத்திற்கும் ஒப்பிடலாம். விதைக்கும் மரத்திற்குமுள்ள நெருங்கிய தொடர்பே வழி முறைக்கும் நோக்கத்திற்கும் உண்டு'', என்கின்றார். ''விதையொன்று போடச் சுரையொன்று முளைக்குமா?'' ''தினை விதைத்தவன் தினையறுப்பான்; வினை விதைத் தவன் வினையறுப்பான்'', என்னும் பட்டறிவின் பழமொழி களும் இந்த உண்மையை உணர்த்துகின்றன.

காந்தியடிகள், அரசியலில் அகிம்சையை உள்ளடக்கிய சத்தியாக்கிரக வழிமுறையை உலகம் வியக்கின்ற வகை யில் பின்பற்றினர். அரசு நடைமுறையில் மிகுதியான அளவு வன்முறையைப் பயன்படுத்துகின்றது. வன்முறை யின் உருவமாக இருந்த ஆங்கில அரசை, ஆன்மீக ஆற்ற லான அகிம்சையைப் பயன்படுத்தி எதிர்த்தார். அவர் அரசியலில் காலடி எடுத்துவைத்த காலத்திலிருந்தே அன்பு நெறியான அகிம்சையை விடாப்பிடியாகப் பின் பற்றி வந்தார். அவரது ''இந்திய சுயராஜ்யம்'' என்னும் நூல் அகிம்சையை விரிவாக விளக்குவதைக்காண்கின்றோம். ''துன்பத்தைத் தானே ஏற்றுக்கொண்டு அதன் மூலம் உரிமைகளைப் பெறும் முறையே சாத்விக எதிர்ப்பு. ஆயுதங் களைக்கொண்டு எதிர்ப்பதற்கு இது நேர்மாறானது.''[15] என்றும், ''சாத்விக எதிர்ப்பு, அதாவது ஆன்ம பலம் இணையில்லாதது; ஆயுத பலத்தைவிட அது உயர்ந்தது. அப்படியிருக்க அதைப் பலவீனர்களின் ஆயுதம் என்று எப்படிக் கருதமுடியும்? சாத்விக எதிர்ப்பின ருக்கு உள்ள தீரத்தைச் சரீர பலத்தை நம்புகிறவர்கள் அறியார்'',[16] என்றும், ''சாத்விக எதிர்ப்பு எல்லாப் பக்கங்களிலும் கூர்மை உடையதோர் வாள்; எப்படி வேண்டுமானாலும் அதைப் பயன்படுத்தலாம். பயன்

15. இந்திய சுயராஜ்யம், ப. 129.

16. இந்திய சுயராஜ்யம், ப. 132.

படுத்ததுபவரை அது வாழ்த்துகிறது; யார்மீது அது பிரயோகிக்கப்படுகிறதோ அவரையும் அதுவாழ்த்தும். ஒரு சொட்டு இரத்தத்தையும் சிந்தாமல் எவ்வளவோ பெரிய பலன்களை உண்டாக்கும். அது துருப்பிடித்துவிடுவதே இல்லை; அதைத் திருடிவிடவும் முடியாது'',[17] என்றும் விளக்கியிருக்கின்றார்.

காந்தியடிகள் நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டார். ஒரு சுதந்திர நாட்டில் எப்படிப்பட்ட அரசு அமைய வேண்டுமென்பதை இந்தியாவை எடுத்துக்காட்டாகக் கொண்டு கூறியிருக்கின்றார். எல்லோரும் இணைந்து, எவ்வித வேறுபாடுமின்றி, அகக்கட்டுப்பாட்டோடு வாழ்கின்ற முழுமையான தன்னாட்சியுள்ள அரசையே அவர் இலட்சிய அரசாகக் கருதினார். நல்ல அரசு மக்களைக் குறைவான அளவிலேயே கட்டுப்படுத்துமென்பதே அவரது கருத்தாகும். தனது உள்ளத்திலிருந்த அரசு பற்றிய கருத்தை பலவகையாக விளக்கியிருக்கின்றார். அதன் இயல்புகள் குறித்து, ''பிறருடைய ஆட்சியிலிருந்து நாம் முழு விடுதலை பெறவேண்டும்; முழுப் பொருளாதாரச் சுதந்திரம் பெறவேண்டும் என்பதுதான் சுயராஜ்யத்தைப் பற்றி நான் கொண்டுள்ள கருத்து. ஆகவே; ஒருபுறம் உங்களுக்கு அரசியல் சுதந்திரம் இருக்கும். மற்றொரு புறம் பொருளாதாரச் சுதந்திரம் இருக்கும். இதைத் தவிர, மற்றும் இரு பக்கங்களும் இதில் உண்டு, இவைகளில் ஒரு புறம் தார்மீக, சமூக அம்சமாகும். அதற்கு இணையான மற்றொரு புறம் தர்மம், அதாவது மதம் என்பதன் உயர்ந்த நிலை. இதில் இந்து மதம், இஸ்லாம், கிறிஸ்துவ மதம் முதலிய எல்லாம் சேர்ந்திருக்கின்றன. ஆனால் அவற்றைக்காட்டிலும் இது உயர்ந்தது....அதை நாம் சுயராஜ்யத்தின் சதுரவடிவம் என்று அழைக்கலாம். இவைகளில் எந்தக்கோணம் சரியாக இல்லாவிட்டாலும் இது சதுரமாக இருக்க முடியாது'',[18] என்கின்றார்.

காந்தியடிகள் இந்தியாவைக் கிராம இந்தியாவாகவே கண்டார். கிராமப் பண்பாடு எல்லாவற்றையும் விட உயர்ந்ததென்பதை உணர்ந்ததால் பரவல் முறையில்

17. இந்திய சுயராஜ்யம், ப. 133 - 134.

18. Harijan, 2-1-1937.

கிராமத்தை அடிப்படை அலகாகக் கொண்டே அரசை உருவாக்க விரும்பினார். இன்றையப் பாராளுமன்றக் குவிதல் அரசியல் அமைப்பு முறையை—அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

போட்டியையும் பொருமையையும் வளர்த்து மக்களைப் போரிடுகின்ற உட்குழுக்களாகப் பிரிக்கின்ற கட்சியரசியலுக்கு மாருக, தன்னம்பிக்கையோடு மற்றவர்களுக்கு உதவி வாழ்கின்ற சிறிய கிராம சமுதாய அமைப்பையும், பஞ்சாயத்தையும் கொண்ட மக்களாட்சி முறையையே ஏற்படுத்துவது மகாத்மாவின் நோக்கமாக இருந்தது. ''காந்தியடிகள் நீண்டகாலம் தேடியதன் பயனாகக் கிடைத்தது கிராம சுயராஜ்யம். இந்தியாவில் உள்ள கோடிக்கணக்கான மக்களுடன் இதயபூர்வமாக ஒன்றிப்போன காந்தியடிகள், இந்தியாவின் நோய்களைத் தீர்ப்பதற்கு — ஏன், உலகின் நோய்களையே தீர்ப்பதற்கு —ஒரு தவருத மருந்தாக இந்த சஞ்சீவியைக் கூறினார்,''[19] என்று ஓரறிஞர் குறிப்பிடுவதை இங்குச்சுட்டிக்காட்டலாம்.

காந்தியடிகள், ''தனி மனித நலம் பொதுநலனில் அடங்கியிருக்கின்றது,'' என்று நம்பியதால், தனி மனிதனும் சமுதாயமும் எத்தகைய மோதலுமின்றி இணைந்து வாழ முடியுமென்று கருதுகின்ருர். தனி மனிதனின் ஆன்மீக விடுதலைக்கு ஆதாரமாக அவனுடைய முழுவளர்ச்சிக்கு வாய்ப்புக்களை வழங்குவதாக அரசு இருக்க வேண்டுமென்று விரும்புகின்ருர். அரசு எந்திரமாகித் தனி மனிதர்களை நசுக்குவதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. தனிமனிதர்கள் கடமை உணர்வோடு செயல்படுகின்ற பொழுது அரசின் இயல்பும் மாற வழி ஏற்படும்.

அண்ணல் தாம் கனவு கண்ட அரசை இந்திய மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக ''கிராம ராஜ்யம்,'' என்று குறிப்பிட்டார். அதனை ஓர் ஓவியமாகக் கீழ்க்கண்ட சொற்களில் தீட்டிக் காட்டியிருக்கின்ருர்

19 மகாத்மா காந்தி நூல்கள் - 15 ஆம் தொகுதி - எச். எம். வியாஸ் எழுதிய முகவுரை, ப. 19.

"கிராம ராஜ்யத்தைச் சமய ரீதியாக விவரிப்பதாயின் அதைக் கடவுளின் சாம்ராஜ்யம் என்று கூறலாம். அரசியல் ரீதியாக விவரிப்பதாயின், அதுதான் அப்பழுக்கற்ற பரிபூரணமான ஜனநாயகமாகும். அத்தகைய ஜனநாயகத்தில் உடைமை, உடைமையின்மை, நிறம், இனம், மதம், ஆண், பெண் என்ற வேற்றுமை அடியோடு மறைந்துவிடும். அதில் நிலமும் அரசாங்கமும் மக்களுக்குச் சொந்தமாக இருக்கும்; உடனடியாகவும், அதிகச்செலவின்றி மலிவாகவும், குற்றம் குறையற்ற நீதி கிடைக்கும். எனவே அந்த ஜனநாயகத்தில் அவரவர் கடவுளைத் தொழ சுதந்திரம் இருப்பதுடன், பேச்சு சுதந்திரமும் பத்திரிகை சுதந்திரமும் இருக்கும். இவையெல்லாம் இருப்பதற்கு மக்கள் தங்களுக்குத் தாங்களே விதித்துக் கொண்டுள்ள தார்மிகக் கட்டுப்பாடு என்ற சட்டத்தின் ஆதிக்கமே காரணமாக இருக்கும். அத்தகைய ஒரு நாடு சத்தியத்தையும் அகிம்சையையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்; சுபிட்சமான, ஆனந்தமான, சுயதேவைப் பூர்த்தியுள்ள கிராமங்களும், கிராம சமுதாயங்களும் அடங்கியதாக இருக்க வேண்டும்". [20]

மகாத்மாவின் தத்துவத்தில் ஒரு சிறந்த சமுதாயம் எப்படி அமைய வேண்டுமென்பதற்கான கருத்துக்களும் மிகுதியாக உள்ளன. சர்வோதய சமுதாயம் பற்றிய கருத்துக்களைத் தொகுத்துக் காணலாம்.

காந்தியடிகள் சமுதாயத் தொண்டை தனது வாழ்நாளெல்லாம் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். அவரது அரசியல் பணிகள் தொடங்குவதற்கு முன்பே சமுதாயப் பணிகள் தொடங்கின. இந்திய அரசியலின் போக்கினால், அவர் அரசியலிலிருந்து ஒதுங்கியிருந்த போதெல்லாம் அவரது முழுக்கவனமும் சமுதாய ஆக்கப் பணியில் சென்றது. நாடு விடுதலை பெற்றபிறகு, அவரது இறுதி மூச்சுவரை தம் வாழ்நாளை சமூகப்பணியிலேயே செலவிட்டார். இவற்றிலிருந்து ஓர் உயர்ந்த சமுதாயத்தை உருவாக்குவதில் அவர் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்தாரென்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

---

20 "மகாத்மா காந்தி நூல்கள்" (தொகுப்பு 15), ப. 347.

அண்ணலின் சமுதாயப் பணிகளின் நோக்கத்தை, "மனிதன் தனியாக வாழ்வதில்லை. சமூகத்தின் ஒரு பாகமாக வளருகிறான். மற்றவர்கள் அவனை நடத்தும் போக்கு அவனைப் பாதிக்கிறது. மக்களுடைய மதிப்பும் அவமானமும் மனிதர்களிடையே இன்ப துன்பத்தை உண்டாக்கி, அவர்களுடைய வளரச்சியைப் பாதிக்கின்றன. எனவே, சமூக சமத்துவம் ஒவ்வொரு குழந்தையின் உண்மையான வளர்ச்சிக்கும் அடிப்படையாக இருக்கிறது. சாதியின் பெயரிலும், தீண்டாமையின் பெயரிலும் எவ்வளவோ கொடுமைகள் சென்ற ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கோடிக்கணக்கான மக்களுக்கு இழைக்கப் பட்டிருக்கின்றன. இதுவே இந்தியாவின் சாபமாக இருந்து வந்திருக்கிறது. இந்தக் கொடுமையைத் தவிர்த்து இந்திய சமூகத்தைப் புனிதப்படுத்துவதே காந்தி அடிகளின் முக்கியமான பணிகளில் ஒன்றாக இருந்தது,"[21] என்று தி. சு. அவினாசிலிங்கம் கூறுகின்றார்.

காந்தியடிகள் பாரத சமுதாயத்தின் மரபுகளையும் பண்பாடுகளையும் நன்கு உணர்ந்திருந்தார். அவை எந்த அளவிற்கு மனித நலனிற்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கின்றனவென்பதையும், அவற்றில் எவையெல்லாம் என்ன முறைகளில் மனித நலனுக்கு எதிராக அமைந்திருக்கின்றனவென்பதையும் பட்டறிவின் மூலமாகப் புரிந்து கொண்டிருந்தார். காலப்போக்கில் சமுதாய வாழ்வில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களைப் பற்றிய தெளிவும் பெற்றிருந்தார். இந்தப் பின்புலத்தில் அவரது சமுதாயப் புத்தாக்கப் பணிகள் செயல் திட்டங்களாக உருப் பெற்றன.

காந்தியம் சமுதாய சமத்துவத்தை வலியுறுத்துகின்றது. சாதி, சமயம், மொழி, ஆண்-பெண்-என்று எந்த வகையிலும் மக்களைப் பிரிப்பதையோ, அவர்களுக்குள் ஏற்றத்தாழ்வு கற்பிப்பதையோ சர்வோதயம் ஏற்றுக்கொள்ளவில்லை. எல்லோரும் இறைவனின் மக்கள் என்ற முறையில் அனைவரும் சமமென்பதே காந்தியத் தத்துவம். இதனை மகாகவி பாரதியார்,

21. மகாத்மா காந்தி நூல்கள் (தொகுப்பு 7) பதிப்புரை, ப. V-VI

''எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்தியா மக்கள்.
எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்,''

என்று உயிர்த்துடிப்போடு கூறுகின்றார்.

இந்தியாவில் சமுதாயத்தில் பல உட்பிரிவுகளையும், ஏற்றத்தாழ்வுகளையும் சமயத்தின் பெயரால் உருவாக்கினார்கள். இந்த ஏற்றத்தாழ்வைக் கட்டிக்காக்க இந்து சமய மறை நூற்களிலிருந்து ஆதாரங்கள் காட்டினார்கள். சமுதாய ஏற்றத்தாழ்வின் புற்று நோயாகத் தீண்டாமை நமது மண்ணில் ஆழமாக வேரூன்றியிருந்தது. அதனை அகற்றுவதன் மூலம் மனிதனுக்கு மனிதன் அடிமையாக வாழ்கின்ற இழிநிலையைப் போக்க இயலுமென்று காந்தி அடிகள் கருதுகின்றார்.

காந்தியடிகள், ''உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற எண்ணம், தருமம், ஒழுக்கம் ஒரே இவற்றின் அடிப்படையான விதிகளுக்கு முற்றிலும் முரணாகும்.........நாம் எல்லோரும் ஒரே கடவுளின் குழந்தைகளாக இருந்தால், நமக்குள் எப்படி உயர்வு தாழ்வு இருக்கமுடியும்?''[22] என்றும், ''பிறவியில் எல்லா மனிதர்களும் சமமே என்பதில் நான் பரிபூரண நம்பிக்கையுள்ளவன்; எல்லோரும்- இந்தியாவிலோ, இங்கிலாந்திலோ அல்லது அமெரிக்காவிலோ, எங்கே பிறந்தவர்களாயினும் சரி, எந்தச் சூழ்நிலையில் பிறந்தவராயினும் சரி - மற்றெவரையும் போல் ஒரே ஆன்மாவை உடையவர்கள்தான். எல்லா மனிதர்களும் சமம் என்ற இயல்பில் எனக்கு நம்பிக்கை இருப்பதாலேயே, நம்மை ஆள்வோரில் பலர் மமதையுடன் மேற்கொண்டுள்ள மேலாதிக்கக் கொள்கையை, உயர்வு மனப்பான்மையை எதிர்த்துப் பேராடுகிறேன்''[23] என்றும் அவர் தனது சமுதாயச் சமத்துவக் கொள்கையை விளக்கி இருக்கின்றார்.

காந்தியடிகள் தனது தனிவாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் தீண்டாமையை எதிர்த்துப்

22. "Harijan" - 28-9-1934.
23. "Young India" - 28-9-1927.

போராடினார். தாழ்த்தப்பட்டவர்களை நுழைய விடாத ஆலயங்களுக்குள் தாம் நுழைவதில்லை என்று உறுதி பூண்டு, எல்லா ஆலயங்களிலும் எல்லோரும் சென்று வழிபட இயக்கமே நடத்தினார். அவர்கள் வாழ்க்கையில் முன்னேற, தேவையான ஆக்கப்பணிகளை மேற்கொள்ள ஹரிஜனசேவா சங்கத்தை உருவாக்கினார். இந்தச் சங்க அமைப்பும், இதன் பணிகளும் அவர் சமநிலைச் சமுதாயத்தை உருவாக்க எத்தகைய வழிமுறையைப் பின்பற்றினாரென்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

இந்தியாவில் எல்லா சமயத்தினரும் வாழ்கின்றனர். உலக நிலையை இது சிறிய அளவில் கொண்டிருக்கின்றது. சமயம் சமுதாய வாழ்வில் குறுக்கிடாதவரை மனிதர்கள் இணைந்து வாழ்கின்றனர். ஆனால் குறுகிய சமயவெறியை தந்நல நோக்கத்தோடு தூண்டிவிடுகின்றவர்கள் சமுதாய ஒற்றுமையைச் சீர்குலைக்கின்றனர். காந்தியடிகள் காலத்தில் இந்து—முஸ்லீம் சண்டைகளைச் சிலர் வளர்த்தனர். இந்த வேற்றுமையை வளர்த்து அரசியல் ஆதாயம் பெற முயன்றவர்கள் இருந்தனர். இதனால்தான் காந்தியடிகள் இந்துக்களுக்கும் முகமதியர்களுக்குமிடையில் பிரிக்க முடியாத இதய ஒற்றுமை வேண்டுமென்று வலியுறுத்தினார். சமயச் சகிப்புத்தன்மையோடு, ஒருவர் நம்பிக்கையை மற்றவர் மதித்து, எல்லாச் சமயங்களைச் சேர்ந்தவர்களும் சமமானவர்களாக இணைந்து வாழ வேண்டுமென்பதே சர்வோதயக் கோட்பாடாகும்.

சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், வாய்ப்புக்களை இழந்தவர்களுக்காகவும் போராடுவதைத் தனது வாழ்க்கை அறமாகக் கொண்டிருந்ததால், காந்தியடிகள் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் திட்டமிட்டுச் செயல் பட்டார். வாழ்க்கையின் துணை நலமாக இருக்கின்ற பெண்களை விலங்குகளைப் போன்று நடத்துவதையும், வீட்டுக்குள்ளே பூட்டி வைப்பதையும் வன்மையாகக் கண்டித்தார். பெண்கள் தங்களது உள்ளார்ந்த ஆற்றலைப் புரிந்து கொண்டு செயல்பட வேண்டுமென்பதை வலியுறுத்தினார்.

குழந்தைப் பருவத் திருமணம், வரதட்சிணைக் கொடுமை, பெண்களுக்குச் சொத்துரிமையற்ற நிலை,

கல்வியறிவின்மை, விதவைகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள், பெண்களைப் பொருட் பெண்டிராக்கிய சீர்க்கேடு-ஆகியவற்றை காந்தியடிகள் எதிர்த்தார். பெண்களுக்கு வாழ்க்கைக்குப் பயன்படக் கூடிய கல்வி கிடைக்கவும், அவர்கள் குடும்ப நிர்வாகத்தில் வல்லவர்களாகத் திகழவும், துணைத் தொழில்களைக் கற்றுக் கொள்ளவும், தங்களது ஆற்றலை உணர்ந்தவர்களாகச் செயல்படவும் வேண்டிய கருத்துக்களைக் கூறினார். கலப்புத் திருமணம், விதவைத் திருமணம் போன்றவற்றை ஆதரித்தார். சமுதாயத்தில் பெண்கள் அச்சமற்று வாழவேண்டுமென்பது அவரது விருப்பம். கஸ்தூரிபாய் நிறுவனம் பெண்களின் முன்னேற்றத்திற்காக எப்படியெல்லாம் செயற்பட வேண்டுமென்பதை வழிவகுத்துக் கொடுத்தார்.

நல்ல சமுதாயம் அமைய சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு பிரிவினரும் தங்களது கடமைகளை உணர்ந்தவர்களாக, இணைந்து செயல்படவேண்டுமென்பதே காந்தியமாகும். காந்தியடிகள் சமுதாயத்தின் உறுப்புக்களாக மாணவர்கள், தொழிலாளர்கள், வணிகர்கள், உழவர்கள் வழக்குரைஞர்கள், மருத்துவர்கள் ஆகிய அனைவரும் எப்படியெல்லாம் செயல்பட வேண்டுமென்பதை வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் விரிவாகவும் விளக்கமாகவும் கூறியிருக்கின்றார்.

சமுதாயத்தின் புற அமைப்பில் கவனம் செலுத்துவதைப்போன்றே அதன் அகத்தை—ஆன்மாவை - கட்டிக் காப்பதிலும் சர்வோதயம் தனிக்கவனம் செலுத்துகின்றது. மது, போதைப் பொருட்கள் சூதாட்டம் போன்றவற்றை ஒழிப்பதற்காகப் போராட்டம் நடத்தினார். அரசின் ஆதரவோடும் பாதுகாப்போடும் மது, போதைப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பதையும், சூதாட்டங்கள் (குதிரைப்பந்தயம் போன்றவை) நடப்பதையும் அண்ணல் வன்மையாகக் கண்டித்தார். அரசு வருவாய் கருதி இத்தகைய சமுதாய நோய்களை வளர்ப்பதைச் சமுதாயத் தற்கொலைக்கு ஒப்பிடலாம். நல்ல சமுதாயம் அகப் பண்புகளை வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

காந்தியத்தின் சமுதாய ஆக்கப்பணிகளின் மையமாக-உயிர்போன்று-அமைவது அண்ணலின் கல்விக் கொள்கை.

யாகும். வெறும் எண்ணையும், எழுத்தையும் கற்றுக்கொள்வதை மட்டும் காந்தியடிகள் கல்வி என்று கருதவில்லை. மனிதனை முழுமையுடையவனாக வளர்ச்சிபெறச் செய்து அவனைப் பயனுள்ள குடிமகனாக மாற்றுகின்ற வாழ்க்கைக் கல்விமுறையை உருவாக்குவதில் காந்தியடிகள் கவனம் செலுத்தினார். அவரது முயற்சியின் விளைவாக உருவானது தான் ஆதாரக் கல்வித்திட்டம்.

காந்தியடிகள் மேலை நாட்டுக் கல்விமுறையை ஏற்றுக் கொள்ளவில்லை. நடைமுறையிலுள்ள ஆரம்பக் கல்வியையும், மேற்படிப்பையும் பற்றி, "அவை நம்மை மனிதர்களாக ஆக்கவில்லை, நாம் நம் கடமையைச் செய்வதற்கு அவை உதவியாக இல்லை,"[24] என்று கூறுவது குறிப்பிடத் தக்கதாகும். குழந்தைகளிடம் உள்ளடங்கிக் கிடக்கும் ஆற்றல்களை மலர்விக்கின்ற கல்வி இலவசமாக அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்றும், தாய்மொழி மூலமாகவும், கைத்தொழிலை மையமாகக் கொண்டும், தன்னிறைவை நோக்கமாக முன்னிறுத்தியும், கூட்டுறவுச் சமுதாயத்தை உருவாக்க மாணவர்களுக்கு அகிம்சை முறையில் பயிற்சி அளித்து அவர்களைச் சமுதாயத்தின் நல்ல குடிமக்களாக்குவதாக இருக்கவேண்டுமென்றும் காந்தியடிகள் கூறுகின்றார். கல்வி என்பது "வாழ்க்கைக்காக, வாழ்க்கை மூலம், வாழ்க்கை முழுவதும் கிடைக்கவேண்டிய ஒன்று", என்று கருதியதால், உயர்நிலைக்கல்வியும், சமுதாயக் கல்வியும் எப்படி அமையவேண்டுமென்பதை விளக்கியிருக்கின்றார்.

சர்வோதயம் இன்றைய புற "நாகரிகத்தை" ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தியச் சமுதாயத்தின் சீர்குலைவிற்கு மேலை நாட்டுக் கல்வி, தொழில் வளர்ச்சி ஆகியவற்றின் விளைவாக உருவாகி "நோயாக" வளர்ந்திருக்கும் போலி நாகரிகம்தான் முதன்மையான காரணமென்பது மகாத்மாவின் கருத்தாகும். மேலை நாட்டு நாகரிகம் மக்கள் மனத்தில் மோக முட்செடிகளையும், ஆடம்பர வாழ்க்கையில் வேட்கையையும் வளர்த்து மனிதர்களை அடிமைகளாக்குகின்றதென்றும், ஒழுக்கத்தையும் அறக்கருத்துக்

24. "இந்திய சுயராஜ்யம்", ப. 142.

களையும் புறக்கணிக்கச் செய்து மக்களை விலங்கு நிலைக்குத் தாழ்த்தவும் அரைப் பைத்தியங்களாக அலையவும் செய்கின்றதென்றும் கூறி, அதனை ''சைத்தான் நாகரிகம்'' என்று சாடுகின்றார்.

காந்தியம் நயத்தக்க நாகரீகத்தை உருவாக்க வேண்டுமென்று கருதுகின்றது. காந்தியடிகள் உண்மையான நாகரீகத்தை, ''மனிதனுக்கு கடமையின் மார்க்கத்தைக் காட்டும் ஒழுக்க முறையே நாகரீகம். கடமையைச் செய்வதும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதும் ஒன்றுக்கொன்று பொருத்தமானவை,''[25] என்று விளக்குகின்றார்.

காந்தியப் பொருளாதாரம் மேலை நாட்டுப் பொருளாதாரத்திலிருந்து அடிப்படையில் மாறுபடுகின்றது. மேலை நாட்டுப் பொருளியலறிஞர்கள் அறத்தைப் புறக்கணித்து விட்டுப் பொருளியல் கோட்பாடுகளை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டதால், அவற்றில் சில மனித நலனுக்கு முரண்பட்டவைகளாகவும், சமுதாய வளர்ச்சிக்குத் தடைக்கற்களாகவும் மாறிவிட்டன. காந்தியடிகள் அறம் சார்ந்த பொருளியல் கருத்துக்களை உலகிற்கு வழங்கியிருக்கின்றார்.

காந்தியடிகள் முதலாளித்துவ அமைப்பு முறையை ஏற்றுக் கொள்ளவில்லை. மேற்கத்தியப் பொருளாதார அமைப்பு முறையிலுள்ள பணப்பொருளாதாரம், பேரளவுத் தொழில்களின் எந்திர ஆதிக்கம், குவிதல் முறை, தேவைப் பெருக்கம், ஆடம்பரப் போக்கு, போட்டி வாணிபமுறை, வருவாய்ப் பகுப்பு முறையால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றில் நிறைகளைவிடக் குறைகளே மிகுதியாக இருப்பதனைக் காந்தியடிகள் உணர்ந்திருந்தார். 1909-ஆம் ஆண்டில் ''இந்திய சுயராஜ்யம்'' நூலை எழுதிய பொழுதே இந்தியாவின் வறுமைக்கு இங்கிலாந்து பின்பற்றிய பொருளாதாரக் கொள்கைகளும், இந்தியாவில் ஆங்கில அரசு உருவாக்கிய பொருளாதார அமைப்பு முறையும்தான் காரணமென்று கருதினார்.

சத்தியம், அகிம்சை என்ற அடித்தளத்தின் மீது கட்டப் பெறுகின்ற சர்வோதயப் பொருளாதாரம் கூட்டுறவு

25. ''இந்திய சுயராஜ்யம்'', ப. 99.

வாழ்க்கை முறையைக் கொண்ட வலுவான கிராமப் பொருளாதாரத்தை உருவாக்குவதாக இருக்கும். வறுமை யற்ற வாழ்க்கை எல்லா மக்களுக்கும் கிடைக்க, எளிய வாழ்க்கையை (Simple life) உயர்ந்த வாழ்க்கையாக மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

இப்பொழுது பொருட்களின் பெருக்கத்தில் மிகுதியாக வசதிப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் பயன் படுத்துகின்ற 'வாழ்க்கைத் தரத்தை' (Standard of living) உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு பொருளா தார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். ஆனால் காந்திய முறையில் 'வாழ்வியல் தரத்தை'க் (Standard o Life) குறிக்கோளாக வைத்து பொருள் உற்பத்தி, பகிர்வு ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டுமென்பது வலியுறுத் தப் பெறுகின்றது. வாழ்வதற்குப் பொருள் தேவை, பொருளுக்காகவே வாழவேண்டுமென்று முயல்கின்ற பொழுது பல கேடுகள் விளைகின்றன. "ஒவ்வொருவரும் தனக்குத் தேவையானவை மட்டும் வைத்துக்கொண்டால், ஒருவரும் வறுமையில் வாடவேண்டியதில்லை. எல்லோரும் மனநிறைவோடு வாழலாம்"[26] என்று காந்தியடிகள் கூறு கின்றார்.

காந்தியம் சிறிய கிராம சமுதாயத்தின் தன்னிறை வுக்கு வழி வகுக்குகின்ற பரவல் முறைப் பொருளாதார அமைப்பினை உருவாக்க முயல்கின்றது. வேளாண்மை, கதர், கிராமக் கைத்தொழில்களின் மூலம் சமுதாய மக்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் உற்பத்திசெய்யத் திட்டமிட்டு முயல்வார்கள்.

காந்தியடிகள் எந்திரத்தின் எதிரியில்லை; எல்லா வற்றையும் எந்திரமயமாக்குவதைத்தான் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. மனிதனை அடிமையாக்கி, சுரண்டலுக்கு வாய்ப்பளிக்கின்ற எந்திரமயமான பெருந்தொழில் போக்கையே அவர் சாடினார். தனது நிலையை, "மனிதன்தான் பிரதானம். எந்திரம், மனிதனின் கை கால்களை முடக்கிவிடக் கூடாது,"[27] என்று விளக்கியிருக் கின்றார்.

26. "From Yeravda Mandir", p. 37.
27. Young India, 13-11-1924.

சர்வோதயத்தின் தலையாய பொருளியல் கோட்பாடு எல்லோரும் தங்களது வாழ்க்கைக்காக உழைக்க வேண்டுமென்பதே. ''உழைத்து வாழ்கின்ற வாழ்க்கையே உயர்ந்த வாழ்க்கை'' என்ற கருத்து ரஷ்கினின் ''கடையனுக்கும் கடைத்தேற்றம்'' நூலைப் படித்ததால் வலுப்பெற்றதென்று மகாத்மா கூறுகின்றார். இதனை அவர் எல்லோரையும் சமநிலைக்குக் கொண்டு வர ஒரு கருவியாகக் கூறுகின்றார்.

காந்தியத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுக்கு இடமில்லை. எல்லோரும் சமத்துவமாக வாழவேண்டுமென்பதே அண்ணலின் விழைவு. இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளைப் போக்கக் கொலைவழியை சரியானதாகக் கருதவில்லை. அன்பு வழி மனமாற்றத்தின் மூலம் பொருளாதாரப் புரட்சியைச் செயல்படுத்த இயலுமென்று காந்தியடிகள் நம்புகின்றார். அவரது ''அறக்காவலர் கோட்பாடு'' (Trusteeship Theory) இந்த நம்பிக்கையில் உருவான தத்துவமாகும்.

காந்தியடிகள் உற்பத்திச் சாதனங்கள் தனியாரிடம் இருக்கின்ற நிலையை மாற்ற விரும்புகின்றார். தனியார் முதலாத்துவத்திற்குப் பதிலாக அரசு முதலாளித்துவத்தைக் கொண்டுவருகின்ற அரசுடைமை போன்ற நடவடிக்கைக்குப் பதிலாக, கூட்டுறவு முறையையும், சமுதாய உடைமை முறையையும் காந்தியம் விரும்புகின்றது.

காந்தியடிகள் சமதர்ம முறையை ஏற்றுக்கொள்கின்றார். அவர் பல வேளைகளில் தன்னை ஒரு சமதர்மவாதி என்று கூறிக்கொண்டார். அவர் கூறுகின்ற சமதர்மம் மனிதாபிமான அடிப்படையில் அமைகின்ற அறஞ்சார்ந்த சமதர்மமாகும். அவர், ''சமதர்மம் (Socialism) ஓர் அழகிய சொல். நான் அறிந்தவரைச் சமதர்மத்தில், சமுதாய உறுப்பினர்களில் உயர்ந்தவர்களோ, தாழ்ந்தவர்களோ இல்லை; அனைவரும் சமமானவர்களே. மனித உடம்பில், தலை எல்லாவற்றிற்கும் மேலாக இருப்பதால் உயர்ந்ததாகிவிடாது. அல்லது காலின் பாதங்கள்

தரையைத் தொட்டுக் கொண்டிருப்பதால் தாழ்ந்ததாகி விடாது. மனித உடம்பிலுள்ள உறுப்புக்கள் எல்லாம் சம மானவைகளாக இருப்பதைப் போலவே, சமுதாயத்தி லுள்ள உறுப்பினர்கள் எல்லாம் சமமானவர்களாக இருக் கின்றனர். இதுதான் சமதர்மம்......... சமதர்மம் முதல் மனிதன் மனம் மாறியவுடன் தொடங்குகின்றது. அப்படி ஒருவரைக் கண்டபிறகு பூஜ்யத்தைச் சேர்த்துக்கொண்டே போகலாம். ஒன்றையடுத்து வருகின்ற ஒவ்வொரு சைபரும் மதிப்பை பத்துமடங்கு கூட்டுகின்றது. ஆனால் தொடக்கமே சைபரானால் மதிப்புக் கூடுவதில்லை. வெறும் சைபர்கள் மதிப்பை ஏற்படுத்துவதில்லை. ஒருவரும் மாறுவிட்டால் சமதர்மம் தோன்றுவதில்லை......சமதர்மம் பளிங்கு போன்று தூய்மையானது. ஆகையால் அதனை அடையப் பளிங்கு போன்ற தூய்மையான வழிமுறைகள் தேவை. தூய்மையற்ற வழிமுறைகள் தூய்மையற்ற விளைவையே ஏற்படுத்தும்......ஆகையால் உண்மையான, அகிம்சை யான, உள்ளத் தூய்மையுள்ள சமதர்மவாதிகளால்தான் இந்தியாவிலும், உலகத்திலும் சமதர்மத்தை நிறுவ முடியும்'',[28] என்று கூறியிருப்பதிலிருந்து காந்தியத் தத்துவம் எத்தகைய சமதர்மத்தை அமைக்க விழைகின்ற தென்பதை அறிந்து கொள்ளலாம்.

காந்தியம் ஓர் ஒருங்கிணைந்த தத்துவம் என்பதனை அண்ணலின் செயல்திட்டமான நிர்மாணத் திட்டத் திலிருந்து தெரிந்து கொள்ளலாம். மகாத்மாவின் நிர்மாணத் திட்டம் சமுதாயத்தின் எல்லாத்துறைகளிலும் புத்தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பதினெட்டுப் பணிகளைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. அவை 1. சமுதாய ஒற்றுமை; 2. தீண்டாமை ஒழிப்பு; 3. மதுவிலக்கு; 4. கதர்; 5. கிராமத்தொழில்கள்; 6. தனிமனிதத்துப்புரவு; 7. ஆதாரக் கல்வி; 8. சமுதாயக் கல்வி; 9. பொதுச் சுகாதாரம்; 10. மாதர் முன்னேற்றம்; 11. தாய்மொழி வளர்ச்சி; 12. நாட்டுப் பொது மொழி வளர்ச்சி; 13. பொருளாதாரச் சமத்துவம்; 14. விவசாயிகள்; 15. தொழிலாளர்கள்; 16. ஆதிவாசிகள்; 17. குஷ்டநிவா ரணம்; 18. மாணவர்கள் முன்னேற்றம் என்பனவாகும்.

---

28. "Mahatma Gandhi: The Last Phase", Pyarelal, II pp. 140-141

காந்தியடிகள் இப்பணிகளை அரசின் உதவியின்றிப் பொது நலத் தொண்டர்கள் மக்களின் திட்டமாக, மக்களுக்காக, மக்களைக்கொண்டே செய்ய வேண்டுமென்று வலியுறுத்தியதை மறந்து விடக் கூடாது.

சர்வோதயம் ஒரு வளர்கின்ற தத்துவம். அண்ணலின் காலத்திலேயே அவரைப் பின்பற்றியவர்கள் அவர் கூறிய கருத்துக்களுக்குச் செயல் வடிவமும் நிறைவடிவமும் கொடுக்க முயன்றனர். இந்த முயற்சி அண்ணலுக்குப் பின்னுலும் தொடர்ந்து நடைபெறுகின்றது.

அரசியலில் காந்தியடிகள் தனது வாரிசாக பண்டித ஜவஹர்லால் நேரு விளங்குவாரென்று கூறினர். நேரு உள்நாட்டில் அண்ணலின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சமுதாய வளர்ச்சித் திட்டம், பஞ்சாயத்து ஆட்சி, கதர் கிராமத் தொழில் வளர்ச்சிப்பணி ஆகியவற்றை மேற்கொண்டதையும், உலக அரசியலில் பஞ்சசீலக் கொள்கையை உருவாக்கியதையும் கூறலாம். அவருக்கு உதவியாகப் பாபு ராஜேந்திரபிரசாத் போன்ற பழம் பெரும் தலைவர்கள் துணை நின்றனர்.

அண்ணலின் பொருளாதாரக் கருத்துக்களைத் தொகுத்தும், விளக்கம் கொடுத்தும், புதியன சேர்த்தும் பொலிவுபெறச்செய்த பெருமை டாக்டர் ஜே.சி. குமரப்பா, ஸ்ரீமன் நாராயண் போன்றவர்களைச் சேரும்.

சமுதாயக் கொள்கைகளில் ஆதாரக் கல்விக்கு விரிவான கோட்பாட்டை ஜாகிர் ஹுசைன், அரியநாயகம் போன்றவர்கள் உருவாக்கித் தந்திருக்கின்றனர்.

சர்வோதயக் கருத்தை வளர்த்து, ஆன்மீக அடிப்படையில் அதற்குப் புதிய கோணங்களைச் சேர்த்து, அதனை ஓர் வாழ்கின்ற, வளர்கின்ற, உலகத்திற்கு வழிகாட்டுகின்ற தத்துவமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற பெருமை வினோபா பாவேயைச் சேரும். அவர் பூமிதானம், கிராமதானம், சாந்திசேனை போன்ற செயல்திட்டங்களையும், அவைசார்ந்த தத்துவ விளக்கங்களையும் வழங்கியிருக்கின்றார். அண்ணலின் ஆன்மீகச் சீடரான வினோபாபாவேயின் முதன்மைத் தளபதியாக ஜெயப்பிரகாஷ் நாராயணன்

திகழ்கின்றார். கட்சிகளற்ற மக்களாட்சியை நிறுவுவது பற்றி அவரது கோட்பாடு அரசியலில் புதிய தத்துவமாகக் கருதப் பெறுகின்றது.

''எல்லா வகைகளிலும் புதுத்திருப்பமும் புதுப் பொருளும் காட்டிப் பாரத நாட்டு மக்களுக்குத் தென்பும் தெளிவும் ஊட்டினார் காந்தியடிகள். பாரத நாட்டுக்கு மட்டுமின்றி மனித குலத்துக்கும் மாண்பார்ந்த நன்னெறி வகுத்தவர் அவர்'',[29] என்று ம. ரா. போ. குருசாமி கூறுகின்றார். இந்த உண்மையை டாய்ன்பி போன்ற உலக வரலாற்று ஆசிரியர்களும், சூமேச்சர் போன்ற பொருளியல் நிபுணர்களும் எடுத்துக் கூறி வந்திருக் கின்றனர்.

காந்தியத்தின் ஒவ்வொரு துறைபற்றியும்ஆழமாகவும் விரிவாகவும் ஆராய்ச்சி நடத்த மிகுதியாக வாய்ப்புக்கள் உள்ளன. நமது நாட்டறிஞர்கள் இன்னும் முழுமையாகக் காந்தியத்த்துவத்தில் கவனம் செலுத்தவில்லை. காந்தி யத்தைத் தக்க முறையில் உலகிற்கு எடுத்துக் கூற வேண்டிய பொறுப்பு இன்றைய இந்தியத் தலைமுறைக்கு இருக்கின்றது.

29. ''அரசியலில் புதுநெறி'', ப. 15-16.

# 4. மார்க்சியம்

## அல்லது

## பொதுவுடைமைத் தத்துவம்

''புலைமைசெறி ஆதிக்க வகுப்பா ரெல்லாம்
பொதுஉடைமைப் புரட்சியினால் நடுங்கி வீழ்வார்
அலக்கழியத் தொழிலா ளரைப் பிணைக்கும்
அடிமையெனும் சங்கிலிகள் அறுந்து போகும்
பலவிதமாய் நலந்தருமோர் புதிய லோகம்
பாட்டாளி மக்களவர் பாங்காய்ச் சேரும்
உலகத்தில் எத்தேசத்தும் வாழ் கின்ற
உழைப்பாளித் தோழர்களே ஒன்று சேர்வீர்''[1]

— ப. ஜீவானந்தம்

கார்ல் மார்க்ஸின் தத்துவம் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் (1843-1883) அவரது அயராத உழைப்பின் விளைவாக உருவானது. அவர் சமுதாயத்தின் வளர்ச்சியை வரலாற்றுக் கண் கொண்டு கண்டார். சமுதாய இயலறிவின் துணையோடு சமுதாயம் எப்படி இனங்களாகப் பிரிந்திருக்கின்றதென்ற கண்ணோட்டத்தில் தனது கோட்பாடுகளை உருவாக்கினார். அவர் பகுத்தாய்கின்ற பொருளியறிஞராக இருந்ததால் சமுதாய வளர்ச்சியில் பொருளாதாரக் காரணிகளை இனங்கண்டு, அவைதான் மிகவும் முக்கியமானவைகளாக, எல்லாவற்றையும் தீர்மானிக்கின்றவைகளாக இருக்கின்றனவென்று நம்பித் தனது ஆய்வினைத் தொடர்ந்தார். தான் வாழ்ந்த காலத்

1. சோஷலிஸ்ட் தத்துவங்கள், ப. 51.

திலேயே சிறந்த ஆசிரியராக மாறித் தன்னைச் சூழ்ந்து கொண்ட இளைஞர்களுக்கும் மற்றவர்களுக்கும் தனது கருத்துக்களை விளக்கிக்கூறினார்.

மார்க்ஸ் அவருக்கு முன்னால் தோன்றிய தத்துவஞானிகள், பொருளியலறிஞர்கள் கூறிய கருத்துக்களை நன்றாக அறிந்திருந்தார். அவற்றில் முரண்பாடுகள் இருப்பதாகவும், அவற்றைச் சரியான முறையில் கூறவேண்டுமென்றும் கருதினார். ரிக்கார்டோ போன்றவர்கள் கூறிய கருத்துக்களில் தனக்குச்சாதகமாக அமையக்கூடியவற்றைஎடுத்துக் கொண்டார். கடந்த காலத்தைத் தனது அடிப்படையான கருத்துக்களின் அளவுகோலின்படி விளக்கி, நிகழ் காலத்தைப் பகுத்தாய்ந்து, எதிர்காலம் இப்படித்தான் இருக்குமென்று கூறுகின்ற வகையில் தனது தத்துவத்தை உருவாக்கியிருக்கின்றார்.

மார்க்சின் தத்துவத்திற்கு ஒரு நோக்கமுண்டு. வாழ்க்கை முறையை மாற்றுவதற்கும், வளர்ச்சியைக் காண்பதற்கும் நாம் உள்ளுணர்வோடு முயல வேண்டுமென்று கருதுகின்றது. தானே மாற்றமும் வளர்ச்சியும் ஏற்படுமென்ற கருத்தியல் தத்துவத்தை ஏற்றுக் கொள்ள வில்லை. "தத்துவ ஞானிகள் பலவகைகளில் உலகத்தை விளக்குகின்றார்கள். வேண்டியதோ அதனை மாற்றுவ தாகும்," [2] என்று மார்க்சும், ஏஞ்சல்சும் கூறுகின்றனர். தொழிலாளர் இனத்தைப் போரிடும் புரட்சிகரமான இனமாக மாற்றுவதற்காக மார்க்ஸ் தனது சிந்தனையாற்றலைப் பயன்படுத்தினார்.

மார்க்சுக்கு முன்பும் 'சமதர்மம்' பேசிய அறிஞர்கள் இருந்தனர். அவர்களை இரண்டு வகையினராகப் பிரிக்கலாம். ஒரு வகையினர் நடைமுறைக்குத் தொடர்பின்றி, கற்பனையை அடிப்படையாகக் கொண்டு இலட்சியங்களைக் கோபுரங்களாக்கிச் சமதர்மம் பேசினார்கள். விண்ணில் பறந்த இவர்களின் கால்கள் மண்ணில் வேரூன்றவில்லை. இரண்டாம் வகையினர் ஒரு பலாத்காரப் புரட்சியின் மூலமாக எல்லாவற்றையும் மாற்றிவிட்டுப் புதிய உலகைக் காண விரும்பினர். ஆனால் இரண்டு பிரிவினரும்

2. Marx and Engels, "The German Ideology", p. 647.

கார்ல் மார்க்ஸ் உருவாக்கியதைப் போல் சமதர்மத்தை விளக்க ஒரு தத்துவத்தைப் படைக்கவில்லை.

கார்ல் மார்க்ஸின் தத்துவத்திற்கும் அணுகு முறைக்கும் வழிகாட்டியாக அமைந்தது ஜார்ஜ் வில்லியம் பிரடரிக் ஹெகலின் (George William Frederich Hegel) தத்துவமாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஜெர்மானிய இளைஞர்கள் போற்றிய தத்துவமாக ''ஹெகலியம்'' திகழ்ந்தது. கார்ல் மார்க்சும் இளமையில் ஹெகலின் தத்துவத்தில் மனத்தைப் பறிகொடுத்திருந்தார். ஆனால், பின்னால் ''ஹெகலின் தத்துவம் தலைகீழாக நிற்பதாகவும், அதனைக் கால்களில் நிற்கச் செய்ய வேண்டுமென்றும்,'' கருதினார்.

ஜெர்மானிய தத்துவத்தில் ஒரு பெரிய மாற்றத்தைக் ஹெகல் ஏற்படுத்தினார். பதினெட்டாம் நூற்றாண்டு வரை, ஹெகலுக்கு முந்திய ஜெர்மானியத் தத்துவ ஞானிகள் எல்லாம் உலகமும் மனிதசமுதாயமும் எந்த மாற்றத்திற்கும் உள்ளாகாமல் இருக்குமென்று நம்பினர். ஆனால் முதன் முதலாக ஹெகல் எல்லாவற்றிற்கும் வளர்ச்சி இருப்பதைப் போல மனித சமுதாயமும் கருத்தியலடிப்படையில் வளருமென்பதை விளக்கினார்.

ஹெகலின் வாதாஞ்சார் கருத்தியல் கோட்பாடு (Dialectical Idealism) எப்படி கருத்தின் அடிப்படையில் வளர்ச்சி நடைபெறுகின்றதென்பதை விளக்குகின்றது. முதலில் ஒரு கருத்து (அல்லது வாதம்) (Thesis) இருக்கின்றது. பின்னால் அக்கருத்துக்கு முரண்பட்ட கருத்து (அல்லது எதிர்வாதம்) (Antithesis) தோன்றுகின்றது. கருத்தும் முரண்பட்ட கருத்தும் (வாதமும் எதிர்வாதமும்) மோதுவதன் விளைவாக ஒரு புதிய கருத்து (அல்லது புதிய வாதம்) இணைக்கருத்தாகத்(Synthesis)தோன்றுகின்றது. முதல் நிலையிலிருந்து இது ஒரு வளர்ச்சி நிலையாகும். இணைக்கருத்தாகத் தோன்றியது அடுத்த நிலையில் கருத்தாக, அதற்கு ஓர் எதிர்கருத்துத் தோன்ற, இரண்டும் மோத, இணைக்கருத்துப் பிறக்கும். இப்படியே வளர்ச்சி வட்டம் தொடர்ந்து மேலேறிச் செல்லும். இந்த ஹெகலின் கருத்தை 'கருத்து முதல் வாதம்' என்றும் கூறுவதுண்டு.

மனித சிந்தனையை ஒட்டி (கருத்துக்களின் வளர்ச்சியைச் சார்ந்து) சமுதாயவளர்ச்சி நடைபெறுகின்றதென்ற கருத்தை மறுத்த கார்ல் மார்க்ஸ், எல்லாவற்றிற்கும் அடிப்படையாக அகக் கருத்தல்ல புறமானபொருளே (Material) இருக்கின்றதென்ற முறையில் அவரது வாதஞ்சார் பொருளியல் கோட்பாட்டை (Dialectical Materialism) உருவாக்கினர். இதனைப் பொருள் முதல் வாதம் என்றும் கூறலாம்.

மார்க்ஸ் தனது முறையை, "எனதுவாதஞ்சார் முறை (Dialectical Method) ஹெகலியத்திலிருந்து மாறுபட்டது மட்டுமல்ல, அதற்கு நேர் முரணுனதாகும். ஹெகலுக்கு, மனித மூளையின் வாழ்வு வளர்ச்சி, அதாவது சிந்தனை வளர்ச்சி அதனை அவர் "கருத்து" என்ற பெயரால் தனியான ஒரு பொருளாகவும் மாற்றுகின்ருர்- உண்மை, உலகின் படைப்பாளியாகின்றது. அவருக்கு உண்மை உலகம், கருத்து உருவத்தின் வெளிப்படையான புறத்தோற்றம் தான். அதற்கு மாருக, எனக்கோ, கருத்து என்பது பருப்பொருள் உலகம் மனித மூளையில் எப்படிப் பிரதிபலிக்கின்றது என்பதுதான். பருப்பொருள்தான் (Material) சிந்தனையின் உருவங்களாக மாற்றப்படுகின்றது",[3] என்று விளக்குகின்ருர். பொருளை அடிப்படையாகக் கொண்டு சமுதாயம் எப்படி வளர்ச்சி பெற்றிருக்கின்றதென்பதைத் தத்துவமாக உருவாக்கியிருக்கின்ருர்.

மார்க்ஸ் தனது தத்துவத்தின் அடிப்படையில் வரலாற்றிற்கு ஒரு விரிவானவிளக்கம் கூறுகின்ருர். இதனை வரலாற்றின் பொருளாதார விளக்கம் (Materialistic Interpretation of History) என்கின்ரேம். மற்றைய வரலாற்று ஆசிரியர்கள் வரலாற்றை நோக்கியதற்கும், மார்க்ஸ் வரலாற்றை ஆய்ந்ததற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. மற்றவர்கள் வரலாற்றை ஆட்சிகளாகவும், போர்களாகவும், அரசியல் மாற்றங்களாகவும் பார்த்தனர். ஆனல் மார்க்சோ பொருளாதார உற்பத்தி முறையிலும், உற்பத்தி உறவுகளிலும் ஏற்படுகின்ற மாற்றங்களே சமூக

3. K. Marx "Capital" - Vol. I p. 19.

அமைப்பிலும், அரசியல் துறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துவதாகக்கருதுகின்றார். ஆதலால் பொருளாதார அமைப்பே எல்லாவற்றிற்கும்ஆதாரமாக, அடிப்படையாக அமைகின்றதென்று நம்புகின்றார்.

மார்க்ஸின் வரலாற்றுக் கண்ணோட்டத்தை, "ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பில் உள்ள அரசியல் கட்டுக் கோப்புக்களையோ, அல்லது அந்த அமைப்பில் வாழும் மக்களின் சிந்தனைப் போக்கையும், கொள்கைகளையுமோ வைத்து அந்த சமூக அமைப்பைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாது. இவையனைத்தும் சமூகத்தின்மேல் எழுப்பப்பட்ட கட்டுக் கோப்புக்களேயாகும். மனிதன் எவ்வாறு உற்பத்தி செய்கிறான், அவன் எத்தகைய கருவிகளை உற்பத்தி முறையில் உபயோகப்படுத்துகிறான், உற்பத்தியான பண்டங்கள் எவ்வாறு வினியோகிக்கப் படுகின்றன, இவையனைத்தும் யாருக்குச் சொந்தமாக இருந்தன, மனிதர்களுக்கிடையேயுள்ள பொருளாதார உறவு எவ்வாறிருந்தது—என்பன போன்ற பிரச்சினைகளை அலசி ஆராய்வதன் மூலந்தான் ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பைப் பற்றிச் சரிவரப் புரிந்துகொள்ள முடியும்",[4] என்று விவரிக்கின்றனர்.

மனித சமுதாயம் அமைந்த காலத்திலிருந்து இன்று வரை உற்பத்தி முறையிலும், அதனையொட்டிச் சமுதாய அமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. இந்த மாற்றங்களை பொருள் முதல் வாதத்தை ஒட்டி, ஓர் அமைப்போடு முரண்படுகின்ற மற்றொரு அமைப்பு மோதுவதால் புதிய அமைப்பு உருவாகின்றதென்ற அடிப்படையில் ஆய்ந்து மார்க்ஸ் ஐந்து வகையான அமைப்புக்களைக் கூறுகின்றார்.

முதலாவதாகஇருந்த நிலைக்கு மார்க்ஸ் பழமைப் பொதுவுடமை என்று பெயரிடுகின்றார். வரலாற்றுக்கு முந்திய ஆதிகாலத்தில், மனிதன் காடுகளில் விலங்கோடு விலங்காகச் சுற்றித்திரிந்து வேட்டையாடியும், மீன் பிடித்தும் வாழ்ந்தான். கலை, பண்பாடு, குடும்ப உறவுகள் வளராத அக்காலத்தில் தேவையை ஒட்டி மனிதர்கள்

4. அரசியல் பாடங்கள், (கம்யூனிஸ்ட் கட்சி வெளியீடு) ப. 5.

குழுக்களாகச் சேர்ந்து வாழ்ந்தார்கள். இவர்கள் பயன் படுத்திய உற்பத்திக் கருவிகளான கரடு முரடான வேட்டைக் கருவிகள் போன்றவை சமுதாயத்திற்குச் சொந்தமாக இருந்தன. சொத்துரிமை தோன்றாத அக் காலத்தில் எல்லாமும் எல்லாருக்கும் சொந்தமாக இருக்க, ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையானதை மட்டும் எடுத்துக் கொண்டு, சுரண்டலின்றி சமத்துவமாக வாழ்ந்த நிலையையே 'பண்டைக் காலப் பொதுவுடைமை அமைப்பு' என்கின்றார் கார்ல் மார்க்ஸ்.

அறிவாற்றல் மிக்க மனிதன் தனது பட்டறிவின் துணையால் புதிய புதிய கருவிகளை உருவாக்கினான். உலோகங்களைக் கண்டுபிடித்த பிறகு உழுபடைகளைச் செய்யக்கற்றுக்கொண்ட மனிதன் வேளாண்மையில் கவனம் செலுத்தினான். உற்பத்தி முறை மாற்றம் வேலைப் பகுப்பைப் புகுத்தியது. உற்பத்திப் பெருக்கம் சொத் துடைமைக்கு வழிவகுத்தது. சொத்துடைமை மோகம் பழைய பொதுவுடைமை அமைப்பைத் தளர்ச்சியடையச் செய்தது. தனியுடைமை வளர்ச்சியில் சுரண்டல் இயல் பாகியது. உற்பத்திக் கருவிகளில் மனிதர்களும் சேர்க்கப் பட்டதால் மனிதனை மனிதன் அடிமையாக்கி வாழ்ந்த அடிமைச் சமுதாயம் உருவானது. இது சமுதாய வளர்ச்சி யின் இரண்டாம் நிலையாகும்,

அடிமைச் சமுதாயத்தில் உற்பத்திப் பெருக்கமும், வாணிப வளர்ச்சியும் ஏற்பட்டன. அரசியல், சமுதாய, சமயக் கட்டுக்கோப்புக்களை உருவாக்கிக் கொண்டனர். நகரங்கள் ஏற்பட்டன. சுரண்டலின் அளவும் கூடிவந்தது. காலப்போக்கில் அடிமைகள் விடுவிக்கப்பட்டனர். ஆனால் பெரு நில்க்கிழார்களின் கையில் உற்பத்திக் கருவிகள் இருந்தன. நிலம் முதன்மையான உற்பத்திக் கருவியாக மாறியது. இதனால் மூன்றாவது நிலையாக வேளாண்மை உற்பத்தி முறையை முதன்மையாகக்கொண்ட நிலப் பிரபுத்துவ சமுதாய அமைப்பு வளர்ச்சி பெற்றது.

பெருநில்க்கிழார்கள் நிலத்தைக் குத்தகைக்குக் கொடுத்து வாரம் பெற்றனர். உழைக்காமல் வாழ்ந்த இந்த இனம் உழைத்தவர்களைச் சுரண்டியது. இந்நிலையில்

நிலப்பிரபுக்களே அரசியல் செல்வாக்குப் பெற்றவர்களாக வும், மறைமுகமாக ஆளுகின்றவர்களாகவும் இருந்தனர். நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பின் உற்பத்தி முறையில் மாற்றத்தைச் சிறுதொழில்களின் வளர்ச்சியும், அதனைச் சார்ந்த வாணிப வளர்ச்சியும் கொண்டுவந்தன. படிப் படியாக ஏற்பட்டு வந்த உற்பத்தி முறை மாற்றம் தொழிற் புரட்சியின் விளைவாகப் பெரிதும் மாற, நிலத்திற் கிருந்த இடத்தை மூலதனம் கைப்பற்றிக்கொண்டது. சுரண்டலின் அளவு பெருகியது. இந்நிலையில் சமுதாய வளர்ச்சியின் நான்காவது கட்டமாக முதலாளித்துவ சமுதாய அமைப்பு உருவாகியது.

மார்க்சின் கருத்துப்படி, முதலாளித்துவத்தில் முதலாளிகள்—தொழிலாளிகள் (இருப்பவர்கள்-இல்லாத வர்கள்) என்னும் இரண்டு போரிடும் இனங்களுக்கு இடை யிலுள்ள தூரம் மிகுகின்றது. முதலாளிகள் எல்லா வகையான அமைப்பு முறைகளையும் சட்ட திட்டங்களையும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு சுரண்டிக் குவிப்பார்கள். முதலாளித்துவ வளர்ச்சியில் வாணிப முதலாளித்துவம், தொழில் முதலாளித்துவம், முற்றுரிமை (ஏகபோக) முதலாளித்துவம் என்ற மூன்று பருவங்களைக் காணலாம். ஆனால் முதாலாளித்துவத்தின் அகத்தில் அதனை அழிக்கின்ற நச்சு விதைகளும் இருக் கின்றன. அவற்றை முதலாளித்துவத்திலுள்ள முரண் பாடுகள் வளர்க்கின்றன. முதலாளித்துவ முரண்பாடு களாக அங்காடியைக் கைப்பற்றும் போட்டிகள், வாணிபச் சுழற்சி, பொருளாதாரத்துறைகளின் வளர்ச்சியில் தோன் றும் ஏற்றத்தாழ்வுகள், பிற நாடுகளைப் பொருள் விற்பனைக் காக அடிமைப்படுத்துதல் போன்றவை ஏற்படுகின்றன. எல்லாம் சேர்ந்து முதலாளித்துவத்தை தளர்ச்சியடைய வும் வீழ்ச்சியடையவும் செய்கின்றன. தொழிலாளிகளின் இனப்புரட்சி முதலாளித்துவத்திற்கு இறுதி மணியடிக் கின்றது.

இறுதியாக, ஐந்தாவது நிலையான சமதர்ம சமுதாய அமைப்பு உருவாகும். உற்பத்திச் சாதனங்கள் அனை வருக்கும் சொந்தமாகிவிடும் இந்த அமைப்பு முறையில் இனங்கள் இருக்காது. எல்லோரும் ஓரினமாக இருக் கின்ற நிலையின் வளர்ச்சியாக, எல்லோரும் தங்களது

ஆற்றலுக்கு ஏற்றவாறு உழைத்து, தங்களது தேவைக்கு மட்டும் பெற்றுக் கொள்கின்ற பொதுவுடமை அமைப்பு உருவாகுமென்று மார்க்ஸ் நம்பினர்.

மார்க்சின் பொருள்சார் வரலாற்று விளக்கத்தில் எல்லாவற்றிற்கும் அடிப்படையாகப் பொருளாதார சக்தி மட்டும்தான் இருக்கின்றதென்பதை அறிஞர்கள் அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை. பொருளாதாரச் சக்தி வரலாற்றை உருவாக்கும் பல சக்திகளில் ஒன்ருக இருக்கின்றதே தவிர, அது மட்டும் தனித்துச் செயல்படுவதில்லை. இந்திய வரலாற்றை நோக்கினல் இந்த உண்மை விளங்கும். அரசியல் பேராசைகளும், தந்நல நோக்குகளும், மொழி, சமய, இன உணர்வுகளும், அன்பு, அறம் போன்ற நுண்ணிய ஆற்றல்களும், கலை, கவிதை உணர்வுகளும் மனித சமுதாயத்தை உருவாக்குவதில் பெரும்பங்கு பெற்றிருக்கின்றன. தமிழர்களின் சமுதாய வளர்ச்சியிலும் அமைப்பிலும் பங்கு பெற்ற வான்புகழ் கொண்ட திருக்குறள் போன்ற அறநூற்களையும், விண்ணை முட்டும் கோபுரங்களை உருவாக்கிய சமய உணர்வுகளையும், சமயங்களைச் சார்ந்து உருவான இறவாக் கலைகளையும், அன்பை உயிர் மூச்சாகக் கொண்டு சுழலும் குடும்ப அமைப்பையும், இவை போன்ற பிறவற்றையும் மறக்கவோ, மறுக்கவோ இயலாது. இதனுல்தான் மார்க்சின் வரலாற்றுக் கண்ணேட்டம் ஒரு சார்புடையதென்றும், முழுமையற்றதென்றும் திறனுய்வாளர்கள் கருதுகின்றனர்.

மார்க்ஸியத் தத்துவக் கோட்பாட்டின் வன்மையான தூண்களில் ஒன்ருக இருப்பது இனப் போராட்டக் (Class Struggle) கோட்பாடாகும். பொதுவுடைமை அறிக்கையின் முதல் அத்தியாயத்தின் முதல் வாக்கியம், "இதுவரை அமைந்திருக்கின்ற எல்லா சமுதாயத்தின் வரலாறும் இனப்போராட்டங்களின் வரலாறே", என்று கூறுகின்றது. மார்க்ஸ் ஒவ்வொரு வகையான சமுதாய அமைப்பிலும் போரிடுகின்ற இரண்டு இனங்கள் இருந்திருப்பதாகக் கருதுகின்ருர். ஓரினம் உற்பத்திச் சாதனங்களைத் தங்களுடையதாக்கிக் கொண்டு, சுரண்டி வாழ்ந்து, ஆதிக்கம் செலுத்துகின்றதாகவும், மற்ருெரு

இனம் சுரண்டப்படுகின்ற இனமாகவும், அல்லற்படுகின்ற, வாடுகின்ற இனமாகவும் இருந்திருக்கின்றன. இந்த இரண்டு வகுப்புக்களின் நோக்கங்களும், ஈடுபாடுகளும் முரண்படுவதால் இவை இணைந்து வாழ முடிவதில்லை. அடிமைச் சமுதாயத்தில் பிரபுக்களுக்கும் அடிமைகளுக்கும் இடையில் போராட்டம் நடைபெற்றது. நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் பெரு நிலக்கிழார்களுக்கும் அடிமைகளுக்கும் குத்தகைக்காரர்களாக நிலத்தில் பாடுபட்ட விவசாயிகளுக்கும் போராட்டம் இருந்தது. முதலாளித்துவ அமைப்பில் முதலாளிகளுக்கும் பாட்டாளிகளுக்கும் போர் நடக்கின்றது.

இனப் போராட்டத்திற்கு அடிப்படைக் காரணம் சுரண்டலாகும். சுரண்டலை (Exploitation) இயல்பாகக் கொண்டு அடிமை, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ சமுதாயங்கள் அமைந்திருப்பதாக மார்க்ஸ் நம்புகின்றார். எடுத்துக்காட்டாக, முதலாளித்துவ சமுதாயத்தில் உற்பத்திக் கருவிகளை எல்லாம் முதலாளிகள் தங்களது ஆதிக்கத்தில் வைத்திருக்கின்றனர். நிலத்திற்கு வாரமும் (Rent), மூலதனத்திற்கு வட்டியும் (Interest), அமைப்பாற்றலுக்கு இலாபமும் (Profit), உழைப்பிற்கு கூலியும் (Wages) கிடைப்பதாக மார்க்ஸிற்கு முந்திய பொருளியலறிஞர்கள் கூறினர். ஆனால் மார்க்சோ இலாபமே எல்லாவற்றிலும் முதன்மையாகிவிடுவதை வலியுறுத்தினார். முதலாளிகள் நிலத்தையும், முதலையும், அமைப்பையும் தங்களது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளும் நிலையில் பாட்டாளிகள் உயிர்வாழ வேண்டிய அளவிற்கு மிகக் குறைந்த அளவில் கூலியைக் கொடுத்து விட்டு எஞ்சுவதை எல்லாம் இலாபமாக எடுத்துக் கொள்கின்றனர். தொழிலாளிகள் முதலாளிகளைச் சார்ந்து வாழ வேண்டியதிருப்பதால் வாயில்லாப் பூச்சிக்களாக அல்லும் பகலும் பாடுபட்டு ஓடாய்த் தேய்கின்றனர். தொழிலாளர்கள் உண்மையை உணர்ந்து, இணைந்து போர்க்கொடி உயர்த்திப் போராடுகின்ற பொழுது புரட்சி வெடிக்குமென்று மார்க்ஸ் எண்ணுகின்றார். புரட்சி என்ற பேறுகால வேதனையைச் சமுதாயம் ஏற்றுக் கொள்கின்ற பொழுது சமதர்மம் என்ற புதிய சமுதாய அமைப்புத் தோன்றுமென்று கூறுகின்றார்.

மார்க்சின் இனப்போராட்டக் கருத்து, பொருளியல் ஆய்வு நோக்கில் சரியானது போலத் தோன்றுகின்றது. ஆனால் இதனை ஒரு தீர்க்கமான முடிவாக ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் உலக வரலாற்றின் போக்கு அமைந்திருக்கின்றது. எடுத்துக்காட்டாக நமது தாயகத்தின் வரலாற்றை சுவாமி விவேகானந்தர் போன்றவர்கள் வேறுவகையில் ஆய்ந்து கூறுவதனை விளக்கிக் கூறலாம்.

நமது நாட்டு வரலாற்றில் நான்கு இனங்கள் அல்லது வகுப்புகள் (Classes) சமுதாய வகுப்புக்களாக இருந்து வந்திருக்கின்றன. இவற்றை பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என்று பெயரிட்டனர். இந்த நான்குபிரிவுகளைவெறும்சமயவாதிகளின் பகுப்பாகக் கொள்ளாமல், சமுதாய, பொருளாதார, சமய, அரசியல் வளர்ச்சிப் போக்கில் தோன்றி வளர்ந்த பிரிவுகளாகக் கருதுகின்றவர்களும் இருக்கின்றனர். அறிவாற்றல் மிக்கவர்கள் பிராமணர்களாகவும், உடல்வலிமையோடு ஆளுகின்ற திறமை பெற்றவர்கள் சத்திரியர்களாகவும், பொருள் நோக்கோடு உற்பத்தி, அளிப்பு போன்றவற்றைக் கவனித்து ஆதாயம் பெற்றவர்கள் வைசியர்களாகவும், உடலுழைப்பை மட்டும் நம்பி, அறிவு வளர்ச்சியின்றி உழைத்தவர்கள் சூத்திரர்களாகவும் பிரிந்ததாகக் கருத இடமுண்டு.

நமது நாட்டில் வேதகாலத்தில், தெய்வ நம்பிக்கை மிகுந்திருந்த காலத்தில் பிராமணர்களின் ஆதிக்கம் இருந்தது. இதிகாசங்களும், புராணக்கதைகளும் இந்தநிலையை விளக்குகின்றது. அடுத்த நிலையாக "வீரர்களின் காலம்" அமைந்தது. மன்னர்களின் (சத்திரியர்களின்) ஆதிக்கத்தில் நாடு இருந்ததைக் கூறலாம். காலப்போக்கில் இப்பொழுது பொருளாதிக்கம் கொண்டவர்களிடம் (வைசியர்களிடம்) அரசும், பிற அமைப்புக்களும் இருக்கின்றன. எதிர்காலத்தில் உழைக்கின்றவர்களின் (சூத்திரர்களின்) ஆதிக்கம் வருமென்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.

நமது நாட்டில் முதலாளித்துவ அமைப்பு முறை இருக்கின்றது. ஆனால் மார்க்ஸ் கருதியதைப் போல இங்கு முதலாளிகள் - தொழிலாளிகள் என்னும் இரண்டு

இனங்கள் மட்டுமில்லை. இப்பொழுது நடுத்தர இனம் (Middle Class) என்றொரு இனம் உருவாகியிருப்பதைப் பொருளியலறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். மிக உயர்ந்த ஊதியம் பெறுகின்ற அலுவலர்கள், மருத்துவர்கள், தொழில் நுணுக்க அறிவு பெற்ற பொறியியலாளர்கள் போன்றவர்கள் தனி இனமாக மாறுவதைக் காண்கின்றோம். மக்களாட்சி அமைப்பில் அரசியல் ஒரு வலுவான கருவியாக, அரசியல்வாதிகள் என்றொரு புது இனம் தோன்றியுள்ளதைக் காண்கின்றோம். இத்தகைய மாற்றங்களை எல்லாம் மார்க்ஸ் எதிர்பார்த்திருக்க இயலாது. சொத்து அல்லது உற்பத்திக் காரணி மட்டுமே வருவாய் தருகின்ற நிலையாக இருந்த சூழ்நிலை மாறிவிட்டது. அறிவாற்றல், அரசியல், அதிகாரம்; உயர்ந்த பதவி, சூதாட்டக் களம் போன்ற சில வாணிப, அரசியல், பொருளாதார, சமய அமைப்புக்கள் ஆகியவையும் இன்று வருவாய் தருகின்ற வழிமுறைகளாகிவிட்டன. இதனால் போராடுகின்ற இரண்டு இனங்களையல்ல-பல இனங்களைக் கொண்டதாக நமது சமுதாய அமைப்பு இருப்பதனைக் காண்கின்றோம்.

கார்ல் மார்க்ஸ் தனது தத்துவத்தை விளக்கும் வகையில் சில ஆதாரப் பொருளியல் கோட்பாடுகளை உருவாக்கியிருக்கின்றார். அவற்றின் உயிர்நாடியாக விளங்குவது எச்ச மதிப்புக் கோட்பாடாகும் (Theory of Surplus Value).

மார்க்ஸின் எச்ச மதிப்புக் கோட்பாட்டை விளங்கிக் கொள்ள அதோடு தொடர்புடைய வேறு சில கருத்துக்களையும் சுருக்கமாக அறிந்து கொள்வது தேவையாகும். மார்க்ஸ் தொன்மைப் பொருளியலறிஞர்களின் (Classical Economists) கருத்துக்களை ஒட்டி மதிப்புக் கோட்பாட்டை (Theory of Value) உருவாக்குகின்றார். இதற்கு அவருக்கு ரிக்கார்டோ (Ricardo) வழிகாட்டியாக அமைகின்றார். மார்க்சின் மதிப்புக் கோட்பாடு மதிப்புப் பற்றிய உழைப்பின் கோட்பாட்டைச் (Labour Theory of Value) சார்ந்திருக்கின்றது.

மார்க்ஸ் ஒரு பொருளுக்கு பயன்பாட்டு மதிப்பும் (Value in use), மாற்று மதிப்பும் (Value in Exchange)

இருக்கின்றதென்பதை ஏற்றுக் கொள்கின்ருர். பயன் பாடற்ற எந்தப் பொருளும் மதிப்பற்றுப் போவதால், பயன்பாடற்றதை உற்பத்தி செய்வதில் ஈடுபடும் உழைப்பு கணக்கிடப்படாமல் போகின்றது. பொருளின் மதிப்பு அந்தப் பொருளில் அடங்கியிருக்கும் உழைப்பின் மதிப்பாகவே இருக்குமென்று மார்க்ஸ் கருதுகின்ருர். இந்த உழைப்பைச் ''சமூக நலனுக்குத் தேவையான உழைப்பு'' (Socially necessary labour) என்று கூறுகின்ருர். எந்தப் பொருட்களுக்கெல்லாம் மாற்று மதிப்பு இருக்கின்றதோ, அவை எல்லாம் உழைப்பின் விளைவென்று தீர்மானமாக எண்ணுகின்ருர். ஒரு பொருளின் மதிப்பு அதில் அடங்கியுள்ள உழைப்பைச் சார்ந்திருப்பதால், அது உழைப்பிற்கு உரியதென்ற முடிவிற்கு வருகின்ருர். இந்த முடிவின் மூலம் சுரண்டுதல் எப்படி நடைபெறுகின்றதென்பதை விளக்க எச்ச மதிப்புக் கோட்பாடு துணைசெய்கின்றது.

மார்க்ஸ் பொருள் உற்பத்தியை இரண்டு வகைகளாகப் பிரிக்கின்ருர். ஒன்று எளிய முறை பொருள் உற்பத்தி. இந்த முறையில் உற்பத்தியாளர் முதலில் ஒரு பொருளை உற்பத்தி செய்கின்ருர். அதனைப் பணத்திற்கு விற்கின்ருர். பின் அந்தப் பணத்தைக் கொண்டு தனக்குத் தேவையான பொருட்களை வாங்குகின்ருர். இங்கு பொருள்-பணம்-பொருள் (Commodity-Money-Commodity = C—M—C) என்ற ஒரு வட்டம்—பொருள் உற்பத்தி மாற்றுமுறை—அமைகின்றது. இம்முறையில் சுரண்டலுக்கு வழியில்லை.

இரண்டாவது, முதலாளித்துவ முறை. முதலாவது முறையில் பொருள்—அதாவது பொருளை உற்பத்தி செய்யும் உழைப்பு முதலிடம் பெறுகின்றது. ஆனல், முதலாளித்துவ முறையில் பணம் முதலிடம் பெறுகின்றது. உழைப்பாற்றலும் மற்றைய பொருட்களைப் போன்று அங்காடியில் வாங்கி விற்கப்படுகின்ற ஒரு பொருளாக மாறுகின்றது. முதலாளியின் நோக்கம் இலாபம் பெறுவதாக இருப்பதால், உழைப்பையும் குறைந்த விலைக்கு வாங்கி உற்பத்தியில் ஈடுபடுத்தி இலாபம் அடைகின்றனர். ஆதலால் முதலாளித்துவ உற்பத்திமுறை வட்டம் பணம் - பொருள் - இலாபம் சேர்ந்த பணம்

(Money - Commodity - Money' - M-C-M') என்று அமைகின்றது. இங்கு பணத்தைக்கொண்டே உழைப்பு முதல் எல்லாவற்றையும் வாங்கி பொருளை உற்பத்தி செய்கின்றனர். பின்னர் அந்தப் பொருளை விற்றுப் பணம் பெறுகின்றனர். முதலில் ஈடுபடுத்திய பணத்தைவிடக் கிடைக்கின்ற பணம் மிகுதியாக இருக்கின்றது. இந்த இரண்டுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை (M'-M) இலாபம் என்கின்றனர். இதனையே எச்ச மதிப்பென்றும், சுரண்டலுக்கு இது வழிவகுக்கின்றதென்றும் மார்க்ஸ் விளக்குகின்றார்.

மார்க்ஸ் தனது எச்ச மதிப்புக் கோட்பாட்டை விளக்க ரிக்கார்டோவின் வாழ்க்கைக் கூலிக் கருத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றார். மார்க்சுக்கு முன்னால் ஒரு சில பொருளியல் வல்லுநர்கள் தொழிலாளர்களுக்கு வாழ்வதற்கு எவ்வளவு பணம் தேவையோ அவ்வளவைக் கூலியாகக் கொடுத்தால் போதுமென்று கருதினர். அதற்கு மேல் கூலி கொடுத்தால் உழைப்பாளர்கள் விரைவாகத் தங்களது இனத்தைப் பெருக்குவார்கள் என்றும்; தேவைக்கு மேல் தொழிலாளர்களின் எண்ணிக்கை கூடினால் கொடுக்கின்ற கூலி குறைந்து வாழ்க்கைக் கூலியளவிற்கு வந்துவிடும் என்று எண்ணினர். வாழ்க்கைக் கூலிக்குக் குறைத்துக் கொடுத்தால் தொழிலாளர்கள் வாழ்ந்து இயல்பாக இனத்தைப் பெருக்க முடியாத நிலையில் இருப்பார்களென்றும், வேண்டிய அளவிற்குக் குறைவாகத் தொழிலாளர்கள் இருப்பதால் கூலியைக் கூட்டி வாழ்க்கைக் கூலியளவிற்குக் கொடுப்பார்களென்றும் கருதினர். இதனால் இயல்பாக வாழ்க்கைக் கூலியே தரப்படுமென்ற சில தொன்மைப் பொருளியலறிஞர்களின் கருத்தை எடுத்துக்கொண்டு எச்ச மதிப்பை மார்க்ஸ் விளக்குகின்றார்.

ஒரு தொழிலாளி தனது உழைப்பின் மூலம் தனக்கு வேண்டிய அளவிற்கு மட்டும் உற்பத்தி செய்வதில்லை. அதனைவிட அதிகமாகவே உற்பத்தி செய்கின்ற ஆற்றல் பெற்றிருக்கின்றார். எடுத்துக்காட்டாக, ஒரு தொழிலாளி ஒரு நாளையில் ஐந்துமணி நேரம் வேலைசெய்து ஐந்து ரூபாய் மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்து, ஐந்து

ரூபாய் கூலியாகப் பெற்ருலே வாழப் போதுமென்று வைத்துக் கொள்வோம். முதலாளித்துவ அமைப்பில் தொழிலாளியை எட்டு மணிநேரம் வேலை செய்யச் சொல்கின்ருர்களென்ருல் அந்தத் தொழிலாளி எட்டு ரூபாய் மதிப்புள்ள பொருளை உற்பத்தி செய்வார். ஆனல் கூலியாக ஐந்து ரூபாய் பெறுவார். மீதி இருப்பது எச்ச மதிப்பாகும். இதனை முதலாளிகள் இலாபமென்ற பெயரில் பெறுகின்றனர். இதனையே மார்க்ஸ் சுரண்டல் என்கின்ருர்.

முதலாளிகள் எச்ச மதிப்பின் அளவைக் கூட்டுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். இதற்காக அவர்களது அறிவாற்றலை எல்லாம் பயன்படுத்தி எத்தனையோ முறைகளைப் பின்பற்றுவார்கள். தொழிலாளர்களை எவ்வளவுக்கெவ்வளவு மிகுதியாக உழைக்கச் செய்கின்ருர்களோ அவ்வளவுக்கு அவர்களுக்குக் கிடைக்கின்ற எச்ச மதிப்பின் அளவு கூடும். அறிவியலின் துணையால் குறைந்த காலத்தில் தொழிலாளர்கள் தங்களுக்கு வேண்டியதை உற்பத்தி செய்யும் வகையில் உற்பத்தி முறையில் மாற்றம் செய்தாலும் எச்சமதிப்பு (இலாபம்) கூடும். குழந்தைகளையும் பெண்களையும் பயன்படுத்தி, அவர்களுக்குக் குறைவாகக் கூலி கொடுப்பதன் மூலமும், எச்ச மதிப்பைக் கூட்டலாம். மொத்தத்தில் தொழிலாளர்களைக் 'கசக்கிப் பிழிந்து' முதலாளிகள் மிகுதியாகக் 'கொள்ளை இலாபம்' (எச்ச மதிப்பைப்) பெறுவார்கள் என்று மார்க்ஸ் நம்புகின்ருர்.

எச்ச மதிப்புக் கோட்பாட்டை மேலும் விளக்க மூலதனத்தை மாருத முதல் (Constant Capital) என்றும், மாறுகின்ற முதல் (Variable Capital) என்றும் மார்க்ஸ் பிரிக்கின்ருர். மாருத முதலில் எந்திரங்கள், மூலப்பொருட்கள் போன்றவையும், மாறுகின்ற முதலில் தொழிலாளர்களுக்குத் தர ஒதுக்கும் கூலி நிதியும் அடங்குமென்கின்ருர். மாறுகின்ற முதலை ஒட்டியே எச்ச மதிப்பு விகிதம் அமையுமென்ற முடிவுக்கு வருகின்ருர். தொழில் வளர்ச்சியில் மாருத முதலின் அளவு கூடக்கூட இலாப விகிதம் குறையுமென்றும் (Declining Rate of Profit), மொத்த இலாபத்தைக் கூட்ட முதலைத் திரட்டுவது (Capital Accumu-

lation) தேவையென்றும் கருதுகின்றார். முதலைத் திரட்டு கின்ற முயற்சியில் முதலாளிகளுக்கிடையில் போட்டி பெருக, 'சின்ன மீன்களைப் பெரிய மீன்கள் விழுங்குவதைப் போல' சிறிய நிறுவனங்களை பெரிய நிறுவனங்கள் வெற்றி கொள்ளும். காலப் போக்கில் பெரிய நிறு வனங்கள் இலாப நோக்கில் தங்களுக்குள்ளிருக்கும் போட்டியைத் தவிர்த்துக் கொண்டு இணைந்து முற்றுரிமையை ஏற்படுத்தும். உலக அங்காடிகளைக் கைப் பற்றிக் கோடிக்கணக்காக முதலீடு செய்த நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்தும்.

முதலாளித்துவ வளர்ச்சி அதன் கொடுமுடியை எப்படி எட்டிப் பிடிக்குமென்பதை விளக்கிய கார்ல்மார்க்ஸ் அதனுடைய அழிவு விதைகள் அதன் கருப்பையில் எப்படி வளருமென்பதையும் விளக்குகின்றார். முதலாளிகள் ஆதாயமே குறிக்கோளாக, மிகுதியாக முதலைப் பயன் படுத்தித் தொழில்களை எந்திரமயமாக மாற்ற மாற்ற தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புக் குறையும். ஆனால் அதேநேரத்தில் மக்கள்தொகை கூடுவதால் வேலையற்றோர் அணி (Industrial Reserve Army) திரளும். இவர்கள் வறுமையில் வாடுவார்கள். வாழ்க்கையே துன்பக் கேணி யாக மாறுகின்ற பொழுது, இவர்கள் உள்ளத்தில் உரு வாகும் வெறுப்பு புரட்சியாக மாறுமென்றும் இதனைத் தவிர்க்க முடியாதென்றும் மார்க்ஸ் நம்புகின்றார். முதலாளித்துவ உற்பத்தி முறையில் ஏற்படுகின்ற வாணிபச் சுழற்சியில் பண வீக்கம் போன்றவை அந்த அமைப்பின் அச்சாணியையே முறித்துவிடுமென்ற முடிவுக்கு அவர் வருகின்றார்.

மார்க்ஸ் தனது ஒவ்வொரு கோட்பாட்டையும் மிகவும் சிக்கலான, ஆழ்ந்த பல கருத்துக்களைக்கொண்டும், அவற்றிற்கு ஆதரவாக எண்ணற்ற மேற்கோள்களைக் காட்டியும் நிறுவுவதை எல்லாம் எளிதான முறையில் ஒரு சிறிய கட்டுரையில் அடக்கிவிட முடியாது. அவருடைய தத்துவத்தை விளங்கிக்கொள்ள துணை செய்கின்ற சில அடிப்படையான கருத்துக்களை மட்டுமே இங்கு தொகுத்துப் பார்க்கின்றோம்.

மார்க்சைப் போன்று முதலாளித்துவத்தை, 'ஆதியும் அந்தமுமாகத்' தொடக்கம் முதல் நுணுக்கமாகப் பகுத்தாய்ந்து வரம்புகட்டி, அதன் இறுதி இப்படித்தான் அமையுமென்று உறுதியாகக் கூறியவர்கள் வேறுயாருமில்லை என்று கூறலாம். ஆனால் அவர் அறுதியிட்டுக் கூறிய பல பொருளியல் கருத்துக்களைப் பின்னால் வந்த பொருளியலறிஞர்கள் வன்மையாக மறுத்திருக்கின்றனர். திறனாய்வாளர்கள் அவை எப்படி நடைமுறையிலிருந்து மாறுபட்டிருக்கின்றதென்று சுட்டிக்காட்டியிருக்கின்றனர். சான்றாகச் சிலவற்றைச் சுட்டிக் காட்டலாம்.

மார்க்சியப் பொருளாதாரத்தின் அடிப்படையாக எச்ச மதிப்புக் கோட்பாடு இருக்கின்றது. எச்ச மதிப்புக் கோட்பாட்டின் உயிர்நாடி மதிப்பைப் பற்றிய உழைப்புக் கோட்பாடென்பதைக் கண்டோம். தொழிலாளர்கள் உயிர் வாழ்வதற்குத் தேவையான அளவுதான் கூலி கொடுப்பார்களென்ற கருத்தை மார்க்ஸ் காலத்திற்கு முன்பே மறுத்த பொருளியலறிஞர்கள் இருந்தனர். கூலியை உயர்த்தினால் தொழிலாளர்களின் ஆக்கத்திறன் கூடுமென்ற கருத்து வலியுறுத்தப் பெற்றது. நடைமுறையில், சட்டங்களின் துணையாலும், தொழிற்சங்கம் போன்ற அமைப்பு முறைகளினாலும் தொழிலாளர்கள் தங்களது வாழ்க்கைத் தேவைக்கு அதிகமாக ஊதியம் பெறுகின்ற வகையில் சில நாடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதைச் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

கார்ல் மார்க்ஸ் பொருளின் மதிப்பெல்லாம் உழைப்பையே சாருமென்று கூறி மற்றைய உற்பத்திக் காரணிகளான நிலம், முதல், அமைப்பு ஆகியவற்றைப் புறக்கணித்து விட்டதைச் சில திறனாய்வாளர்கள் வலியுறுத்திக் கூறுகின்றனர். மற்றைய உற்பத்திக் காரணிகளின் துணையின்றி உழைப்பு மட்டும் எதனையும் உற்பத்தி செய்ய முடியாத அளவிற்கு உற்பத்திமுறை மாற்றம் அடைந்திருப்பதைச் சிலர் குறிப்பிட்டுக் கூறுகின்றனர்.

மார்க்ஸ் ஓர் இலட்சியவாதியாகத் தனது தத்துவத்திற்கு ஒரு நிறையுருவம் கொடுத்திருக்கின்றார். அவர்

கனவு கண்ட பொதுவுடைமைச் சமுதாயம் எல்லோரும் எல்லாமும் பெற்று வாழ்கின்ற இலட்சிய சமுதாயமாகும். அரசு கருகிவிடுகின்ற நிலையில் மனிதர்கள் முழுமையான சுதந்திரம்பெற்றுத் தேவர்களைப்போல வாழ்வார்களென்று நம்புகின்ற நிலையையும் மார்க்ஸிடம் காணமுடிகின்றது. அதனை அடையப் புரட்சியையும், பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தையும் வழிமுறைகளாகக் கூறுகின்ருர்.

நீண்ட காலமாக மார்க்சை ஒரு பொருளியலறிஞராக ஏற்றுக் கொள்ளத் தயங்கிய மரபுவழிப் பொருளாதார ஆசிரியர்கள் அவரை வெறும் அரசியல்வாதியாகவே கருதினர். தொழிலாளர் இயக்கத் தலைவர்கள்தான் மார்க்ஸியத்திற்கு விளக்கம் கூறிக் கொண்டிருந்தனர். மார்க்ஸியத்தைக் கண்டு அஞ்சுகின்றவர்கள் இருப்பதைப் போன்றே, மார்க்ஸியத்தை ஒரு சமயம்போல நம்பிப் பின்பற்றுகின்றவர்களும் இருக்கின்ருர்கள். இப்பொழுது மார்க்சை ஒரு பொருளியலறிஞராக ஏற்றுக் கொண்டு, அவரது கோட்பாடுகளைக் கற்றுக் கொடுக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது.

மார்க்ஸியத்திற்குப் பலவகையான விளக்கம் கொடுக்கப்படுகின்றது. மார்க்ஸியத்தைத் தத்துவ அடிப்படையில் ஏற்று, அதன்வழியில் புரட்சியை நடத்திய சோவியத் ரஷ்யாவின் புரட்சித் தலைவர் மார்க்ஸின் கோட்பாடுகளுக்கு விளக்கம் கூறியிருக்கின்ருர். முழுக்க முதலாளித்துவ அமைப்பை எட்டிப்பிடிக்காத ரஷ்ய நாட்டிற்கு மார்க்ஸியத்தில் சில மாற்றங்களைப் புகுத்திப் பின்பற்றுவது தேவையாயிற்று. லெனின் கொடுத்த விளக்கங்களும், சேர்த்த கருத்துக்களும் மார்க்ஸியத்தை வளப்படுத்தினவென்று கூறலாம். அவரின் வழிவந்த ஸ்டாலின் தனது சூழ்நிலைக்கேற்பப் பொதுவுடைமையைச் செயல்படுத்த முயன்ருர்.

இப்பொழுது பொதுவுடைமைத் தத்துவத்தை ஏற்றுக் கொண்டு பின்பற்றுகின்றவர்கள் இரண்டு பிரிவுகளாக இருக்கின்றனர். ஒரு பிரிவுக்கு இரஷ்யா தலைமை தாங்குகின்றது. மற்ருெரு பிரிவு மார்க்சுக்கு விளக்கம் தருகின்ற மாசேதுங்கின் கருத்துக்களை ஏற்று சீனுவின் தலைமையை ஒப்புக்கொண்டு செயல்படுகின்றது.

மார்க்ஸின் கருத்துக்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் உலகச் சூழ்நிலையில் புரட்சிகரமானவை களாக இருந்ததென்பதில் ஐயமில்லை. வறியர்களின் வாழ்வில் வளம்சேர்க்க வேண்டுமென்ற அவரின் உயர்ந்த நோக்கம் இன்றும் போற்றுதற்குரியதாக இருப்பதனைக் காண்கின்றோம். ஆனால், இன்றைய சூழ்நிலையில் மார்க்ஸின் கருத்துக்களில் எவ்வளவு ஏற்றுக்கொண்டு பின்பற்றத்தக்கவை என்பதில்தான் கருத்து வேறுபாடு வருகின்றது. இந்தக் கருத்து வேறுபாடே சிந்தனை மோதலாக உருவெடுக்கின்றபொழுது, புதிய தத்துவம் பிறப்பதை உலகம் காண்கின்றது.



# 5. காந்தியமும் மார்க்சியமும் — ஓர் ஒப்பீட்டுக் கண்ணோட்டம்

"வையம் வேண்டும் தெய்வம் வேண்டும்
தெய்வம் வேண்டும் வையம் வேண்டும்;

* * *

வையம் பொருளே தெய்வம் அருளே
பொருளுந் தேவை அருளுந் தேவை;
இரண்டும் வாழ்வை இயக்கும் ஈரல்!

* * *

மார்க்கிஸ் முனிவன மார்க்கம் கண்டனன்
அந்த மார்க்கம் யாக்கை போன்றது
ஆவி நல்க மேவினன் காந்தி!"[1]

திரு. வி. க.

மனித குலம் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. முன்னேற்ற முயற்சியில் சில சிக்கல்கள் தீர்கின்றன; சில புதிய சிக்கல்கள் தோன்றுகின்றன. இன்றுள்ள வாழ்க்கைச் சிக்கல்களையும், குறைகளையும் தனி மனித முயற்சியால் தீர்த்துவிட முடியாதென்பதை உணர்கின்றோம். கூட்டு முயற்சி தேவைப்படுகின்றது. இந்த முயற்சி சரியான குறிக்கோளையும் தக்க வழிமுறையையும்

1. "பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும்", பு. 40-43.

கொண்டிருக்க வேண்டும். இதனுல் வழிகாட்ட ஒரு தத்துவத்தை நாடுகின்றேம்.

முதலாளித்துவத்தின் குறைபாடுகளையும் சீர்கேடுகளையும் உலகம் உணர்ந்திருக்கின்றது. முதலாளித்துவத்தை நெறிப்படுத்தும் முயற்சி ஒரு பக்கம் நடைபெறுகின்றது. முதலாளித்துவத்தை மாற்றி புதிய அமைப்பை உருவாக்க முயன்றவர்களான காந்தியடிகளையும், கார்ல் மார்க்சையும் நம்பிக்கையோடு, வழிகாட்டுபவர்களாகக் கருதுகின்றவர்கள் இருக்கின்ருர்கள். இரண்டு சமுதாயச் சிந்தனையாளர்களின் கருத்துக்களையும் ஒப்பிட்டு நோக்குதல் நமக்கு ஒரு தெளிவை ஏற்படுத்தும்.

## I சில ஒற்றுமைகள்

''பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு தற்கால உலகம் மார்க்ஸ், காந்தி என்ற இரண்டு புரட்சிவாதிகளை உருவாக்கியிருக்கின்றது'',[2] என்று கிருபாளனி குறிப்பிடுகின்ருர். உலகம் எத்தனையோ புரட்சிவாதிகளைக் கண்டிருக்கின்றது. பெரும்பாலும் புரட்சிவாதிகள் தங்களது காலச் சூழலில் சில மறச்செயல்களை எதிர்த்துப் போரிட்டிருக்கின்றனர். மரபுகளையும், மறச்செயல்களையும் மாற்றும் முயற்சியில் தங்களை அழித்துக்கொண்டவர்களும் உண்டு. ஆனுல் மனித வாழ்க்கையின் போக்கையும், சிந்தனையையும், மார்க்சையும் காந்தியடிகளையும் போல மாற்றவேண்டுமென்ற நோக்கத்தோடு பாதித்தவர்கள் வேறு யாரும் இல்லையென்று கூறலாம்.

மார்க்சும், மகாத்மாவும் உலக வரலாற்றை மாற்றி இருக்கின்ருர்கள். இரண்டு பேரும் முதலாளித்துவத்தை இருவேறு நிலைகளில் கண்டார்கள். தொழில் புரட்சியின் தொடக்க காலத்தில் - முதலாளித்துவம் இளமைப் பொலிவோடும் வலுவோடும் வளர்ந்து கொண்டிருந்த வேளையில் - முதலாளித்துவத்தின் வளர்ச்சிப் போக்கும், அழிவும் இப்படித்தான் அமையுமென்று கடந்தகால வரலாற்றுப் பின்புலத்தில் கணித்துக் கூறினர் கார்ல் மார்க்ஸ். காந்தியடிகள் முதலாளித்

2. J. B. Kripalani, "Gandhi: His Life and Thought", p. 412.

துவத்தை அதன் முதிர்ந்த நிலையில் கண்டார். முதலாளித்துவம் அரசியலில் பேராதிக்கம் செலுத்தி, மனிதகுலத்தின் ஒரு பகுதியை அடிமைப்படுத்தியிருந்த காலகட்டத்தில் அதன் இயல்புகளை அறிந்தார்.

முதலாளித்துவம் நாடுகளின் செல்வச் செழிப்புக்கும், தனிமனிதர்களின் இடையறுப் பொருள்தேடும் முயற்சிக்கும் வழிவகுத்து, எண்ணற்ற வசதிப் பொருட்களையும், நாகரிகப் பொருட்களையும் மலையெனச் செய்து குவிக்கும் எந்திரங்களை உள்ளடக்கிய பெருந்தொழில்களை வளரச் செய்து, மனித இனம் வியக்கத்தக்க முன்னேற்றம் அடைந்துவிட்டதென்று காட்டிப் பெருமைப்பட்டது. ஆனால் அதற்குள், அதன் உள்ளார்ந்த இயல்புகளின் விளைவாகச் சில சீர்கேடுகள் முளைத்து வளர்ந்தன. தன்னலம், சுரண்டல், மனித அன்பற்ற போட்டி, ஆதிக்கம், போராட்டம், போர், அடிமைத்தனம், வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், உழைப்போரின் பாதுகாப்பற்ற நிலை, புதிய சமுதாயக் குற்றங்கள், நோய்கள், இனவெறுப்பு, பணமோகம், மனித நலனைக் கெடுக்கும் பொருட்கள் உற்பத்தி, உழைக்காமல் பொருள் சேர்க்கும் சூதாட்ட—வாணிப அமைப்பு, இயற்கை வளங்களை வீணடித்தல்; இலஞ்சம், செயற்கை முறைகள், எல்லாவற்றிலும் கலப்படம் போன்ற எண்ணற்ற சீர்கேடுகளை முதலாளித்துவம் உருவாக்கியிருக்கின்றது. முதலாளித்துவத்தால் கிடைத்த நன்மைகளைவிடத் தீமைகள் மிகுதி என்பதைக் கார்ல் மார்க்சும், காந்தியடிகளும் தெளிவாக உணர்ந்தனர்.

முதலாளித்துவத்தின் சுரண்டலின் விளைவாக விரைந்து வளர்ந்த வறுமை இருவரின் கவனத்தையும் ஈர்த்தது. இரண்டு பேரும் இல்லாதவர்களின்-வறியவர்களின் - பாதுகாவலர்களாக மாறினர். வறுமையைப் போக்க வேண்டுமென்ற விழைவிலும், மனிதன் மீது கொண்ட அன்பிலும் மகாத்மாவும் மார்க்சும் ஒருமித்த கருத்துக் கொண்டவர்களாக இருக்கின்றனர். சுரண்டலை எந்த நிலையிலும் இருவரும் எதிர்க்கின்றனர். இருவரின் புது நெறிகளும் வேறுபட்ட போதிலும், முதலாளித்துவ

முறைகேடுகளைக் கண்டு நெஞ்சம் குமுறிய நிலையில் இருவரும் ஒத்த உணர்வுடையவர்களாக விளங்குவதைக் காண்கின்றோம்.

முதலாளித்துவத்தையும் அதன் பாதிப்புக் கொண்ட இன்றைய சமுதாய, அரசியல் அமைப்புக்களையும் மாற்றியாக வேண்டுமென்ற முடிவுக்கு இரண்டுபேரும் வந்தனர். இந்த முடிவிற்கு வருவதற்கான தூண்டுதல்களும், ஆய்வு-அணுகு முறைகளும் வேறுபட்ட போதிலும் வந்த முடிவு ஒன்றென்பது குறிப்பிடத்தக்கதாகும். பயனற்ற ஒன்றைக் கட்டிக்காப்பதைவிட, முயன்று மாற்ற வேண்டுமென்ற எண்ணம் காந்தியடிகளுக்கும் மார்க்சுக்கும் உறுதியாக இருந்ததை அவர்களின் வாழ்க்கையும், எழுத்தும் காட்டுகின்றன.

மகாத்மாவும் மார்க்சும் அமைக்க விரும்பிய இலட்சிய சமுதாய அமைப்பும் பலவற்றில் ஒன்றுபட்டிருக்கின்றன. ஒரு சுரண்டலற்ற, எல்லோரும் ஓரினமாக, சமநிலையில் வாழ்கின்ற ஒரு சமுதாயத்தைக்காண இரண்டுபேரும் கனவு கண்டனர். அத்தகைய சமுதாயத்தை அமைக்கக் கூறிய வழிமுறைகளில் அடிப்படை வேறுபாடுகள் இருந்த போதிலும், அமைக்க விழைந்தது குறைகளற்ற சமுதாயமாகும். அரசு வாடி விழுந்த நிலையில், மக்கள் துன்பமின்றி நிறை இன்பம் காண்கின்ற ஓர் ஒப்பற்ற சமுதாயமே அவர்கள் கனவுகண்ட இலட்சிய சமுதாயமாகும்.

சுரண்டலற்ற, ஏற்றத்தாழ்வற்ற, சாதி சமய வேறுபாடுகளற்ற, மனிதர்கள் சமமாக, ஓரினமாக இணைந்து வாழ்கின்ற சமுதாயத்தை அவர்கள் தங்கள் போக்கில் விவரித்து, அதற்குப் பெயரும் இட்டனர். கார்ல் மார்க்ஸ் தான் கனவு கண்ட சமுதாயத்தை ''பொதுவுடைமை'' என்று விளக்கிக் கூறுகின்றார். காந்தியடிகள் தனது இதயத்தில் எழில்கோலமாகத் தீட்டி மகிழ்ந்த சமுதாயத்தை ''சர்வோதயம்'', ''இராமராஜ்யம்'', ''கிராமராஜ்யம்'' என்ற பெயர்களால் சொல்லோவியம் தீட்டுகின்றார்.

மகாத்மாவிடமும் மார்க்சிடமும் இருக்கின்ற ஒற்றுமைகள் மேற்போக்கானவை. வேற்றுமைகள் அடிப்படையானவை. ''உண்மையில் இந்த இரண்டு இலட்சியங்களும் இணைந்து செல்ல இயலாதவை. இவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடுகள் அடிப்படையானவை'',[3] என்று வினோபாபாவே கூறுகின்றார். சர்வோதயத்திற்கும் மார்க்ஸியத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் நுணுக்கமானவை. ஒற்றுமைகளை மறந்து விடாமல், முரண்பாடுகளாக இருக்கின்ற கருத்துக்களை எண்ணிப்பார்த்து ஒரு முடிவுக்கு வரவேண்டியது இன்றைய காலத்தேவையாகும்.

## II வேறுபாடுகளுக்கு அடிப்படை

மகாத்மாவுக்கும் மார்க்சுக்கும் இடையில் காணப் பெறுகின்ற தத்துவ வேறுபாடுகளுக்கு அடிப்படைக் காரணம் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையும், வாழ்கையை யும் உலகையும்பற்றிய அவர்களது கண்ணோட்டமும்ஆகும்.

காந்தியடிகள் சமயத்தைச் சார்ந்த அறநெறிகளின் படித் தனது வாழ்க்கையை அமைத்துக்கொண்டவர். ஆதலால் இறைவனை நம்புகின்றார். இறைவனென்னும் அளவற்ற ஆற்றலின் எண்ணப்படியே இந்த உலகம் இயங்குகின்றதென்று எண்ணுகின்றார். ''நான் இறைவனின் முழுமையான ஒருமைப்பாட்டை நம்புகின் றேன். நமக்குப் பல உடல்கள் இருந்தால் என்ன? ஆனால் நமக்கெல்லாம் ஒரே ஆன்மாதான் (Soul) இருக்கின்றது. கதிரவனின் ஒளிக்கதிர்கள் சிதறிவிழுகின்றபொழுது பலவாக இருக்கின்றன. ஆனால் அவற்றிற்கெல்லாம் மூலம் ஒன்றுதான்'',[4] என்றும், ''நான் மனித இனத் திற்குச் செய்கின்ற தொண்டின் வழியாகக் கடவுளைக் காண முயல்கின்றேன். ஏனென்றால் கடவுள் வானகத் திலோ, கீழே பாதாளத்திலோ இல்லை; ஆனால் ஒவ்வொரு வரிடமும் இருக்கின்றார் என்பதை நான் உணர்ந்திருக் கின்றேன்'',[5] என்றும் கூறுகின்றார்.

3. K. G. Mashruwala, "Gandhi and Marx", Introduction by Vinoba, p. 16-17.
4. Young India, 25-9-1924.
5. Young India, 4-8-1927.

காந்தியடிகளின் இறை நம்பிக்கைதான் அவரை ஆன்மாவை - ஆற்றலை-(Spirit) எல்லாவற்றிற்கும் அடிப்படையானதாக, அழியாத நிலையான ஒன்றாக, எல்லாவற்றையும் இயக்குவதாக ஏற்றுக் கொள்ளச் செய்தது. ஆன்மாவே (ஆற்றலே) வாழ்க்கையில் மலர்ச்சி பெறுவதை உணர்ந்தார். ஆன்மாவை அறத்தின் கூறாக உணர்ந்ததால் அறமற்ற எதனையும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. சத், சித், ஆனந்தமாக இருக்கின்ற இறைவனை சத்தியம் என்ற சொல்லால் குறித்து, சத்தியத்தை அகிம்சையைக்கொண்டே காண இயலுமென்று நம்பி, சத்தியத்தை அளவுகோலாக்கி, எல்லாவற்றிற்கும் அடிப்படையாகவும், உரைகல்லாகவும் அதனையே கொண்டார்.

கார்ல் மார்க்சோ காந்தியடிகளிடமிருந்து முற்றிலும் மாறுபட்ட மனநிலையையும், வாழ்க்கை முறையையும் கொண்டிருந்தார். அவர் ஒரு சிந்தனையாளர்; பகுத்தாயும் பயிற்சி பெற்றவர். அவரது தர்க்க அறிவுக்குள் அடங்காத எதனையும் அவர் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அறிவின் மூலமாகவே எதனையும் அணுகியதால், இதய நம்பிக்கைகளுக்குக் காரண-காரிய அளவுகோலுக்குள் அடங்காதவற்றை அவர் ஒதுக்கித் தள்ளினார். இறைவன் - ஆன்மா - ஆற்றல் என்பவை எல்லாம் சமயத்தின் கற்பனைகளென்று கருதினார். சமுதாயத்தில் சுரண்டுகின்றவர்களின் கைப்பாவையாகச் சமயம் இதுவரைச் செயல்பட்டிருப்பதாக எண்ணினார். சுரண்டப்படுகின்றவர்கள் தாங்கள் சுரண்டப்படுகின்றோமென்ற உணர்வே இல்லாமல் வாழ சமயங்கள் உருவாக்கிய 'விதி' போன்ற மனமயக்கக் கருத்துக்கள்தான் காரணமென்று உறுதியாக நம்பினார். ஆதலால் மதத்தை, மதியை மயக்கும் அபினோடு ஒப்பிட்டார். சமயத்தை உதறிவிட்டு, அறிவுநிலையில் வாழ்க்கைக்கும் உலகிற்கும் விளக்கம் கொடுக்கும் வகையில் தத்துவத்தை உருவாக்கினார்.

கார்ல் மார்க்ஸ் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக 'பொருள்' (Matter) இருப்பதாகக் கருதுகின்றார். பொருட்களை ஒரு குறிப்பிட்ட வகையில் இணைத்து, அமைக்கின்றபொழுது ஆற்றல் பிறக்கின்றது. பொருளின்றி கருத்தோ, எண்ணமோ, இயக்கமோ இல்லையென்பதே மார்க்சின்

முடிவு. ஆதலால், பொருளைச் சார்ந்தே மனித வாழ்க்கை அமையுமென்று நம்பினார். இதனால்தான் பொருளாதார அமைப்பை அடித்தளமாகவும், சமுதாய, அரசியல் அமைப்புக்களை அடித்தளத்தின் மேலமைந்த கூரைகளாகவும் எண்ணிப்பார்த்தார். பொருளாதார அமைப்பில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மற்றவற்றிலும் மாறுதல்களை ஏற்படுத்துமென்ற முடிவுக்கு வந்தார். இதனால்தான் பொருளோடு தொடர்பற்றவற்றை, ஆற்றல் போன்ற சமயஞ்சார் கருத்துக்களை அவரால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

மகாத்மாவின் தத்துவத்திற்கு ஆன்மா அல்லது ஆற்றல் (ஜீவன்) அடிப்படையாகவும், மார்க்ஸின் தத்துவத்தில் பொருள் (ஜடப்பொருள்) அடிப்படையாகவும் இருக்கின்ற வேறுபாட்டை ஒட்டியே இரண்டு தத்துவங்களுக்கிடையிலும் இருக்கின்ற மற்றைய வேறுபாடுகள் தலைதூக்குகின்றன.

மார்க்ஸியம் சமயத்தின் செல்வாக்குக் குறைந்து, தொழில் புரட்சியின் மூலம் செல்வத்தைக் குவித்து, அதனையே வழிபாட்டுக் கடவுளாகக் கொண்ட காலச் சூழலில் எழுந்தது. பொருள் உற்பத்தியும், அதன் உற்பத்தி உறவுகளும் அரசியலையும், சமுதாயத்தையும் நிர்ணயிப்பதைப் போன்ற ஒரு தீர்மானமான கருத்தை உருவாக்கித் தந்தது.

காந்தியடிகள் மார்க்ஸியத்தைத் தெரிந்திருக்கின்றார். 1942 முதல் 1944 வரை ''வெள்ளையனே வெளியேறு'' இயக்கத்தை நடத்தி, தனது இறுதிச் சிறைவாழ்க்கையை பூனாவில் ஆகாகான் அரண்மனையில் கழித்தபோது, அவர் சில மார்க்சிய நண்பர்களோடு பழகினார். அவர்கள் அண்ணலை கார்ல் மார்க்ஸின் ''மூலதனம்'' நூலைப் படித்துப் பார்க்கும்படி கூறினார்கள். அதன்படி படித்துப் பார்த்தார். எவ்வளவு படித்தாரென்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை. ஆனால் அந்த நூலைப்பற்றி, ''அவர் படித்த அளவிற்குப் படிக்க எனக்கு ஓய்வு கிடைத்திருக்குமானால், இதனைவிட நன்றாக இந்நூலை என்னால் எழுத முடியுமென்று

கருதுகின்றேன்'',[6] என்று அவர் கூறியதாகக் குறிப்பிடுகின்றனர். காந்தியடிகள் பொருள்தான் அடிப்படை என்ற வாதத்தைச் சிறிதும் ஏற்றுக்கொள்ளவில்லை. ''காந்தியடிகள் ஆன்மாவை நம்பாதவராக இருந்திருந்தால், பெரும்பாலும் அவர் இந்தியாவின் லெனினாக மாறியிருப்பார்'',[7] என்று ஓர் ஆய்வாளர் குறிப்பிடுகின்றார்.

மார்க்ஸ் பொருள்சார்ந்த அறத்தையும், காந்தியடிகள் அறம் சார்ந்த பொருளையும் நம்புகின்றனர். மற்றைய எல்லா வேறுபாடுகளும் இந்த ஒன்றைச் சுற்றியே எழுகின்றன. இரண்டு தத்துவங்களும் இணைய முடியாத நேர்கோடுகளாக இருப்பதற்கு இதுவே முதன்மையான காரணமாகும்.

## III வரலாற்றைப் பற்றிய கண்ணோட்டம்

உலக வரலாற்றை மனித குலத்திற்கு வழிகாட்டுகின்ற ஒரு பாடமாகப் பயில்கின்றோம். நேற்றைய வரலாற்றின் படிப்பினைகள் இன்றைய வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றன. வருங்கால வாழ்க்கை எப்படி அமையுமென்பதை ஓரளவு ஊகித்துணர கடந்த கால வரலாறு துணைசெய்யுமென்று நம்புகின்றோம்.

வரலாற்றை மார்க்ஸ் தனது ''பொருள் முதல்வாதக்'' கண்ணோட்டத்தில் பார்க்கின்றார். இதனால் வரலாறே இனங்களின் போராட்டமாக அவருக்குத் தோன்றுகின்றது. வரலாற்றின் போக்கை எப்படிப் பொருளாதார ஆற்றல்கள் நிர்ணயித்திருக்கின்றனவென்பதை விளக்கி, அதே போக்கில்தான் எதிர்காலமும் அமையுமென்பதை நிலைநாட்ட முயல்கின்றார்.

மார்க்ஸ் பொருளை அடிப்படையாகக் கொள்வதாலேயே, பொருள்பற்றையும், போர்க்குணத்தையும் (வன்முறையையும்) மனித இயல்பாகக் கருதுகின்றார். இருப்பவர் இல்லாதவர் என்ற வேறுபாட்டிற்குச்

6. Haridas T. Muzumdar, "Mahatma Gandhi - A Prophetic Voice", p. 83.

7. Khetramohan Patnaik, "Gandhi and Marx", p. 2.

சுரண்டல் கருவியாவதும், சுரண்டலை ஒழிக்க வன்முறைப் புரட்சியால்தான் முடியுமென்பதும் மார்க்ஸ் ஆய்ந்து வந்த முடிவுகளாகும்.

விநோபாபாவே, ''பொதுவுடைமை பற்றை(ஆசக்தி) குறிக்கோளாகக் கொண்டிருப்பதால், அதனை ஒரு தத்துவ ஆய்வுக்குரியதாக நான் கருதியதில்லை'',[8] என்று கூறுவதற்கு மார்க்சின் பொருள் முதல் வரலாற்றுக் கண்ணோட்டம்தான் காரணம்.

காந்தியடிகள் வரலாற்றை ஆன்மீகத்தின் மலர்ச்சி நிலைகளைக் காட்டுகின்ற ஒன்ருகவே கருதுகின்ருர். ஆன்மீகத்தின் மலர்ச்சி உள்ளொளியைப் - அகத் தூய்மையைப் - பெருக்குவதில் அமைந்திருக்கின்றது. உள்ளொளியைப் பெருக்கப் பொருள் பற்றற்ற வாழ்க்கை தேவை. பொருள்பற்றற்ற வாழ்க்கை அகிம்சையை - அன்பை - அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

காந்தியடிகள் வரலாற்றைப் பற்றிய தனது கண்ணோட்டத்தை 1909-ஆம் ஆண்டில் ''இந்திய சுயராஜ்யம்'' நூலிலேயே, ''சரித்திரம் என்ருல் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. குஜராத்தியில் சரித்திரம் என்பதற்கு 'இதிஹாஸ' (அவ்வாறு நிகழ்ந்தது) என்பதே நேரான சொல். சரித்திரம் என்பதற்கு அதுதான் பொருளென்ருல், போதுமான ஆதாரங்களை நாம் கொடுக்கலாம். மன்னர்களும் சக்கரவர்த்திகளும் செய்திருப்பதுதான் சரித்திரம் என்பதாயின் அப்படிப்பட்ட சரித்திரத்தில் ஆன்மபலம் அல்லது சாத்விக எதிர்ப்புக்கு ஆதாரமே இராது.......... மன்னர்கள் எப்படி நடந்தார்கள்; ஒருவருக்கொருவர் எவ்விதம் விரோதிகளானுர்கள்; ஒருவரையொருவர் எவ்வாறு மாய்த்துக் கொண்டார்கள்; இந்த வரலாறுகளே சரித்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றன. உலகத்தில் நடந்தவையெல்லாம் இவையே என்ருல் வெகு காலத்திற்கு முன்பே உலகம் முடிந்துபோயிருக்கும். உலகின் கதை போரிலேயே தொடங்கியிருப்பின், இன்று ஒரு மனிதனைக் கூட உயிரோடு பார்க்க முடியாது........

8. "Gandhi and Marx", p. 17.

உலகத்தில் எத்தனையோ மனிதர்கள் இன்னும் உயிரோடு இருக்கின்றார்கள் என்ற உண்மை, ஆயுத பலத்தை அடிப்படையாகக் கொண்டு அவ்வாறு அமையவில்லை; சத்தியம் அல்லது அன்பின் அடிப்படையில் உலகம் இருக்கிறது என்பதையே காட்டுகிறது .......இயற்கையின் போக்கில் ஏற்படும் இடையூறுகளைக் குறிப்பிடுவதே சரித்திரம். ஆன்மசக்தி இயற்கையானதால் அது சரித்திரத்தில் குறிப்பிடப்படவில்லை'',[9] என்று விரிவாகவும் விளக்கமாகவும் கூறுகின்றார்.

உலக வரலாற்றை நிர்ணயிக்கும் காரணங்களாகப் பொருளாதார சக்திகள் இருப்பதைப் போலவே இலட்சியக் கருத்துக்களும் இருந்திருக்கின்றன. இதனை உலக வரலாறு காட்டுகின்றது.

டாக்டர் இராதாகிருஷ்ணன், ''மிகவும் குறுகிய கருத்தில்தான், ஒரு சமுதாயத்தின் பொருளாதார முறையே எல்லா சட்ட, அரசியல், அறிவுச் சூழலுக்கும் உண்மையான அடிப்படை என்று கூற முடியும். இவையெல்லாம் அது இல்லாமல் தனித்து இருக்க முடியாது. மண்ணில்லாமல் எந்த மரமும் இருக்கமுடியாது. ஆனால், மரங்கள் மண்ணில்லாமல் வளரமுடியாதென்றாலும், மண்ணால் மட்டும் வளர்வதில்லை. இதைப்போன்றது தான் இலட்சிய மேல்அமைப்புக்களுக்குப் பொருளாதார முறை தேவைப்படுவதும். ஆனால் அதனைக்கொண்டு மட்டும் விளக்கிவிட முடியாது''[10], என்றுகூறுவது சிந்தனைக்குரியது. உலக வரலாற்றை உருவாக்குவதில் அறிவியலறிஞர்களும், சமுதாயச் சிந்தனைச் சிற்பிகளும், அரசியல் தலைவர்களும், ஆன்மீக வழிகாட்டிகளும் பெரும்பங்கு பெற்றிருக்கின்றனர்.

கடந்தகால வரலாறு சென்ற பாதையிலேயே எதிர்கால வரலாறும் செல்லுமென்ற கருத்தைச் சர்வோதயத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மனிதன் தனது அறிவாற்றலைப் பயன்படுத்திக் கடந்த காலத் தவறுகளைத் திரும்பவும் செய்யாமல் இருக்கலாம். முதலிரண்டு உலகப்

9. ''இந்திய சுயராஜ்யம்'', ப. 126-128.
10. Dr. S. Radakrishnan, "Religion and Society", p. 37.

போர்களின் அழிவுகளைக் கண்ட உலகம் மூன்றாவது உலகப் போரைத் தவிர்க்க எல்லாவகைகளிலும் முயல்வதைக் காண்கின்றோம்.

உலகவரலாற்றை அறத்திற்கும் மறத்திற்கும் ஏற்படும் போராட்டமாகக் கருதி, இறுதியில் அறம் வெல்லும் என்று நம்புவதே வரலாறுபற்றிய சர்வோதயக் கணிப்பாகும்.

## IV இனப் போராட்டம் (Class Struggle)

கார்ல் மார்க்ஸ் மக்கள் சமுதாயத்தின் கடந்த கால வரலாற்றை இனங்களின் (வர்க்கங்களின்) போராட்டமாகவே கருதுகின்றார். மார்க்ஸின் கண்ணோட்டத்தில் பொருள் அடிப்படையாக இருப்பதால், பொருள்பற்றும் பொருளைப்பெறப் போராட்டமும் தவிர்க்க இயலாததாகி விடுகின்றது.

சமுதாயத்தில் மக்களுக்கிடையில் இன்று எத்தனையோ உறவுகள் இருக்கின்றன. இன்றும் நமது சமுதாயத்தில் சாதி, சமய உறவுகள் ஆற்றல்மிக்கவைகளாக இருக்கின்றன. ஆனால் கார்ல் மார்க்ஸ் உற்பத்தியைச் சார்ந்து உருவாகும் உறவுகள் வலிமை கொண்டவையென்று கருதுகின்றார்.

உற்பத்தி உறவுகளுக்கு மையமாக உற்பத்திக் கருவிகள் உள்ளன. இந்த உற்பத்திக் கருவிகளைச் சொந்தமாகக் கொண்டவர்கள் 'உடையவர்களாக' (Haves) இருக்கின்றனர். மற்றவர்கள் உற்பத்தியில் ஈடுபட்டுக் கொடுக்கின்ற கூலியைப்பெறுகின்ற 'இல்லாதவர்களாக' (Have-Nots) இருக்கின்றனர். இருப்பவர்கள் மேலும் தங்களது செல்வத்தைப் பெருக்குவதை நோக்கமாகக்கொண்டு செயல்படுகின்றனர். இதனால் ஏழைகளைக் கசக்கிப் பிழிவதால், ஒன்றுமற்ற 'வெற்றர்கள்' தொடர்ந்து போராடித் தங்களுக்குரிய நீதியைப் பெறவேண்டியதிருக்கின்றதென்பது மார்க்ஸின் கருத்தாகும்.

பொருளாதாரச் செல்வாக்குள்ள இனம் ஆளுகின்ற இனமாகவும் சமயத்தையும் சமுதாயத்தையும் ஆட்டிப் படைக்கின்ற இனமாகவும் இருந்திருப்பதாக மார்க்ஸ் கருதுகின்றார். இன்றைய முதலாளித்துவ அமைப்பு முறையில் தொழிலாளர்கள் தாங்கள் சுரண்டப்படுவதை உணர்ந்து, இணைந்து போராடுகின்றபொழுது புரட்சி வெடிக்குமென்று நம்புகின்றார். புரட்சியின் விளைவாகப் ''பாட்டாளிகளின் சர்வாதிகாரம்'' (Dictatorship of the Proletariat) ஏற்படுமென்றும், ஆனால் இந்தச் சர்வாதிகாரம் இனங்களற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குமென்றும் கருதுகின்றார்.

மார்க்சின் இனப்போராட்டக் கொள்கைக்கு அடிப்படையாக அமைந்தது மனித இயல்பைப் பற்றிய அவரது தீர்மானமான கருத்தாகும். முதலாளிகளைத் தன்னலம் உடையவர்களாகவே கண்டார். அவர்களுக்கும் உள்ளம் (ஆன்மா) இருக்கின்றதென்றும், அந்த உள்ளத்தில் மாற்றத்தை விளைவிக்கமுடியுமென்றும் கருதவில்லை. மனித மனத்தைச் (சிந்தனையைச்) சூழ்நிலை உருவாக்குகின்றதென்று எண்ணியதால், பொருள்சார் புறச்சூழலை மாற்றாமல் மனிதனை மாற்ற முடியாதென்பதே மார்க்ஸின் கருத்தாகும். ஆதலால் மார்க்ஸின் சிந்தனை எல்லாம் புறச்சூழலை மாற்றுவதற்கான போராட்டங்களைப் பற்றியதாகவே இருந்தது. போரும் புரட்சியுமே சமுதாயச் சூழ்நிலையை மாற்றுமென்ற முடிவுக்கு வந்தார்.

காந்தியடிகள் மனித இயல்பைப் பற்றி மார்க்ஸிடமிருந்து முற்றிலும் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருந்தார். மனிதனைத் தெய்வத்தின் இயல்பாகவே மகாத்மா கருதுகின்றார். உலகிலுள்ள எல்லா ஆன்மாக்களும் ஒரே மூலத்திலிருந்து தோன்றியவை என்று எண்ணியதால், ஆன்மாக்களுக்குள் ஏற்படுகின்ற போராட்டத்தை இயல்பானதாக அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மனிதனிடம் தெய்வ இயல்பும் விலங்கியல்பும் இருக்கின்றன. தக்க பயிற்சியின் மூலமாக விளங்கியல்பை களையைப் போலப் போக்கிவிட்டு, தெய்வ இயல்பைச் சுடர்விட்டு ஒளிவிடச் செய்யலாமென்பதே அண்ணலின்

எண்ணமாகும். இதனால் இனப் போராட்டத்தை முயன்றால் தவிர்க்கலாமென்ற முடிவுக்கே வருகின்றார்.

காந்தியடிகள் இந்தியாவில் தோன்றி வளர்ந்திருந்த 'வர்ணாசிரம' அமைப்பு முறையை மக்கள் தொழில்களால் பிளவுபடாமல் இணைந்து வாழ இயலுமென்பதற்கு எடுத்துக்காட்டாகக் கூறுகின்றார். அண்ணலின் வர்ணாசிரமக் கருத்தை தவறாக விளக்கிக் கூறி, அவர் பிறப்பு வேற்றுமையையும், சாதிப்பகுப்பு முறையையும் ஏற்றுக் கொள்கின்றாரென்று வாதிடுகின்றவர்கள் இருக்கின்றனர். ஆனால் காந்தியடிகள் மக்களின் இயல்பை ஒட்டித் தொழில் பகுப்பு முறை அமைத்திருந்த, பிறப்பால் வேற்றுமையோ செய்தொழிலால் உயர்வு தாழ்வோ இல்லாதிருந்த ஒவ்வொருவரும் தனதுகடமையைச் (சுதர்மத்தைச்)செய்த சமுதாய அமைப்பு முறையையே ''வர்ணாசிரமம்'' என்ற பெயரால் குறிப்பிடுகின்றார். 'வர்ணாசிரம்' பழைய சொல், ஆனால் காந்தியடிகள் அந்தச் சொல்லுக்குப் புத்தாக்க உள்ளடக்கத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கின்றார்.

'வர்ணம், ஆசிரமம் என்ற இரண்டு சொற்களும் சேர்ந்தே வர்ணாசிரமம் என்று ஆகிறது. தருமம் என்ற சொல் இரண்டுக்கும் பொதுவானது.........உயர்ந்தவர்-தாழ்ந்தவர் என்ற கொள்கையே வர்ணத்திற்கு முற்றிலும் முரண்பாடானது. எல்லா வர்ணங்களும் சமமானவை. ஏனெனில், ஒவ்வொரு சமூகமும் ஒன்றுக்கொன்று துணையாக இருக்கிறது. ஆனால், படிப்படையாக உயர்ந்தவர்-தாழ்ந்தவர் என்பதை இன்று வர்ணங்கள் காட்டுவதாக இருக்கின்றன. இந்த நிலை வர்ணங்களின் ஆதி நோக்கத்தையே பயங்கரமான முறையில் பாழ்படுத்துவதாகும்.......அத்தகைய ஓர் அமைப்பின் கீழ், சொத்துக்களின் சொந்தக்காரர்கள் தங்களுடைய சொத்துக்களை சமூகத்தின் தருமசொத்துக்களாகக் கருதி வருவார்கள்'',[11] என்று காந்தியடிகள் விளக்கம் கூறியிருக்கின்றார்.

காந்தியடிகள் சமுதாயத்திலுள்ள பிரிவுகளின் நோக்கங்கள் முரண்பட்டே தீருமென்ற கருத்தை ஏற்கவில்லை. ஏனென்றால் சமுதாயத்திலுள்ள பிரிவுகள்

11. Harijan, 28-9-1934.

எல்லாம் உடம்பிலுள்ள உறுப்புகள் போல இருக்கவேண்டு மென்பதே அவருடைய எண்ணமாகும். அறவுணர்வற்ற நிலையில் ஓரினம் மற்றைய இனங்களைச் சுரண்டி வாழலாம். ஆனால் அந்த இனமும் தனது தவற்றை உணர்கின்ற பொழுது மற்றைய பிரிவுகளோடு இணைந்து வாழும்.

''இந்தியாவின் அடிப்படை அறிவாற்றலுக்கு இனப் போராட்டமென்பது மிகவும் தூரமானதாகும். அதனால் சமநீதியைச் சார்ந்த அடிப்படை உரிமைகளின் மீது பொதுவுடைமையை உருவாக்க முடியும்,'' என்றும், ''வகுப்புப் போராட்டம் என்ற கருத்து என்னைக்கவர வில்லை. இந்தியாவில் அகிம்சையைப் புரிந்து கொண்டால், வகுப்புப் போராட்டம் கட்டாயமாக நடக்காதென்பது மட்டுமல்ல தவிர்க்கக் கூடியதாகவும் இருக்கும். வகுப்புப் போராட்டம் நடந்தே தீருமென்பவர்கள் எல்லாம் அகிம்சையின் சிறப்பியல்புகளை அறிந்துகொள்ளாதவர் களே'',[12] என்றும் மகாத்மா கூறியிருப்பது கவனிக்கத் தக்கது.

முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமிடையில் எழுகின்ற கருத்து வேறுபாடுகளைப் பேசித் தீர்த்துக் கொள்ள இயலுமென்று எண்ணினார். பேச்சின் மூலமாக முடிவுக்கு வர இயலாத சூழ்நிலைகளில் சத்தியாக்கிரகம் போன்ற போராட்ட முறைகளைப் பின்பற்றலாமென்று அண்ணல் கூறுகின்றார். மார்க்ஸியப் போராட்டங்களி லிருந்து முற்றிலும் மாறுபட்ட அகிம்சைப் போராட்டங்களை அவரே நடத்திக் காட்டியிருக்கின்றார். ''முதலும்... உழைப்பும் ஒன்றிற்கொன்று இணையாகவும், துணையா கவும் இருக்க வேண்டும். அவை ஒற்றுமையாகவும், இசைந்தும் வாழ்கின்ற பெரிய குடும்பமாக இருக்கும். முதலாளிகள் தொழிலாளர்களின் பொருள்சார் நலத்தை மட்டுமல்ல அறஞ்சார் நலத்தையும் கட்டிக்காக்க வேண்டும். அவர்கள் தொழிலார்களின் நலக் காவலர் களாக இருக்க வேண்டும்''.[13] என்று குறிப்பிட்டிருப்பதி லிருந்து வகுப்புப் போராட்டம் பற்றிய மகாத்மாவின் கருத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

12. "Amr't Bazar Patrika" 3-8-1934

13. Young India, 20-8-1925

## V தனிமனிதனும் சமுதாயமும்

கார்ல் மார்க்சுக்கும் காந்தியடிகளுக்குமிடையில் காண்கின்ற மற்ருெரு கருத்து வேறுபாடு தனிமனிதனையும் சமுதாயத்தையும் பற்றியதாகும்.

கார்ல் மார்க்ஸிடம் மனிதாபிமானம் இருந்தது. அல்லற்படுகின்ற மக்களுக்காக இரங்குகின்ற மனம் படைத்திருந்ததால்தான் அவரால் பொதுவுடைமைத் தத்துவத்தை உருவாக்க முடிந்தது. ஆனுல் சமுதாயத்திலுள்ள அனைவரையும் ஒன்ருக அவரால் எண்ணிப்பார்க்க இயலவில்லை. சமுதாய மக்களை இரண்டு வகுப்புக்களாகப் பிரித்துப் பார்த்ததால், சுரண்டுகின்றவர்களை - சமுதாய நலனுக்குப் பாதகஞ்செய்பவர்களை - ஒடுக்கவேண்டுமென்றும், தேவையென்ருல் அழிக்க வேண்டுமென்றும் கருதுகின்ருர். இதனுல்தான், ''வெறுப்பு, வன்முறை என்கின்ற இரைச்சலில் மார்க்ஸின் மனிதாபிமானம் மறக்கப்பட்டது போலத் தோன்றுகின்றது'',[14] என்று கிருபாளனி கூறுகின்ருர்.

மார்க்சின் கருத்துப்படி சமுதாய நலனேடு தனி மனிதர்களின் தந்நல நடவடிக்கைகள் மோதுகின்ற பொழுது, சமுதாய நலனுக்குத்தான் முதலிடம் தர வேண்டும். தேவையானுல், சில தனிமனிதர்களை அழித்துவிட்டு, சமுதாய முன்னேற்றத்திற்கு வழி வகுக்கலாமென்பதே அவருடைய எண்ணமாகும். தனி மனிதர்களின் அழிவை, வெறும் மனிதர்களின் (உடல்களின்) அழிவாகத்தான் கணிக்கின்ற போக்கு மார்க்சிடம் காணப்படுகின்றது. ஒவ்வொரு மனிதனுக்கும் ஆன்மா இருக்கின்றதென்றும், அவனை மாற்ற இயலு மென்றும் ஆன்மீகத்தினர் நம்புவதைப் பொதுவுடைமையினர் ஏற்றுக்கொள்வதில்லை. இதனுல்தான் போராட்டத்தில் - புரட்சியில் - சில பாட்டாளிகளோ, செல்வர்களோ மாள்வதை இயல்பானதாகக் கருதுகின்றனர்.

காந்தியடிகள் தனிமனிதனையும் சமுதாயத்தையும் இரண்டு கண்களைப் போல இன்றியமையாதனவாகக்

14. J B. Kripalani, "Gandhi : His Life and thought", p. 414

கருதுகின்றார். "தனிமனித நலம் சமுதாய நலனில் இருக்கின்றது," என்ற கருத்தை அவர் ரஷ்கினின் "கடையனுக்கும் கடைத்தேற்றம்" என்ற நூலிலிருந்து அறிந்து கொண்டது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். "எல்லா மனிதர்களும் இறைவனின் பிள்ளைகள்" என்ற ஆன்மீக நம்பிக்கை மற்றுமொருகாரணமாக இருக்கலாம்.

தனிமனித நலனும், சமுதாய நலனும் முரண்படாத வகையில் சமுதாயத்தின் கட்டுக்கோப்பை உருவாக்கிக் கொள்ள முடியுமென்பது அண்ணலின் நம்பிக்கையாக இருந்தது.

தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் மோதல் ஏற்படுமென்பதைக் காந்தியடிகள் கண்டார். ஆனால் மோதல் ஏற்படுகின்ற போதெல்லாம் குறை தனிமனிதர்கள் பக்கமே இருக்குமென்றும், சமுதாயம் (பெரும்பான்மையினர்) சொல்வதோ, செய்வதோதான் எப்பொழுதும் சரியாக இருக்குமென்றும் கூறுகின்ற கோட்பாட்டைக் காந்தியடிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆதலால் தனிமனிதனை இழக்காமல் சமுதாயத்தையும், சமுதாயத்தைப் பாதிக்காத தனிமனித வளர்ச்சியையும் மகாத்மா விரும்பினார்.

"மனிதனின், வாழ்கின்ற எல்லாவற்றின், அடிப்படை ஒருமைப்பாட்டை நான் நம்புகின்றேன். ஆகையால், ஒரு மனிதர் வெற்றி பெற்றால் அந்த அளவிற்கு உலகம் முழுவதும் வெற்றி காண்கின்றதென்றும், ஒரு மனிதன் வீழ்ச்சியடைந்தால் அந்த அளவிற்கு உலகமே வீழ்ச்சியடைகின்றதென்றும் நம்புகின்றேன்",[15] என்று மகாத்மா கருதுகின்றார். இதன் அடிப்படை மிகவும் உயர்ந்ததாகும்.

காந்தியடிகள் எத்தனையோ சமுதாய, அரசியல், பொருளாதார, சமயக் கொடுமைகளை எதிர்த்துப் போராடி இருக்கின்றார். அவர் கொடுமைகளையும், தீமைகளையும் எதிர்த்தாரே தவிர அதனைச் செய்த தனி

15. Young India - 4-12-1924

மனிதர்களை வெறுக்கவில்லை. அவர்களையும் மாற்றிவிட முடியுமென்று நம்பி முயன்றார். அவர்களிடமும் அன்பு காட்டினார்.

'எவ்வுயிரும் தம்முயிர் போல்' எண்ணுகின்ற எண்ணமும், 'பகைவனுக்கருள்கின்ற' உள்ளமும் கொண்டவராகக் காந்தியடிகள் விளங்கியதற்குக் காரணம் அவர் மனித குலத்தின்மீது வளர்த்துக் கொண்ட அன்புதான். அந்த அன்பு படிப்படியாக வளர்ந்து, மனிதர்களை மட்டுமின்றி எல்லா உயிர்களையும் அணைத்துக் கொள்கின்ற எல்லையற்றதாக மாறியது. மகாத்மாவின் "பசுப்பாதுகாப்பு இயக்கம்" இதற்கொரு சான்று.

தனிமனிதர்களுக்கும் சமுதாயத்திற்குமுள்ள தொடர்பு தனிமரங்களுக்கும், அவை சேர்ந்த தோப்பிற்கும் உள்ள தொடர்பாகும். மரங்கள் இல்லாவிட்டால் தோப்பு இல்லை. மற்றவற்றோடு சேர்ந்து இருப்பதால் தான் தனிமரத்திற்குச் சிறப்புக் கிடைக்கின்றது. "தனி மரம் தோப்பாகாது" என்பது முதுமொழி.

"காந்தியடிகளுக்கு தொடக்கம் தனிமனிதன்தான் அவனை அறவழிமுறைகளைப்பின்பற்றி முன்னேற்ற முயல்கின்றார்",[16] என்று ஓர் ஆய்வாளர் கூறுகின்றார். தனி மனிதனின் இயல்பு நல்லதென்று காந்தியம் கருதுகின்றது. வீட்டில் குப்பை சேர்வதைப்போலத் தனி மனிதனிடம் சில கெட்ட இயல்புகள் படியலாம். அவற்றைத் தக்க அறிவுரையின் மூலமாகவும் பயிற்சியின் மூலமாகவும் நீக்க முடியுமென்பதே மகாத்மாவின் கருத்தாகும்.

உலக வரலாற்றை உருவாக்கியதில் தனிமனிதர்களுக்குரிய பங்கை மறந்துவிடமுடியாது. சமுதாயம் தனி மனிதனை உருவாக்குகின்றது. இதனால் சமுதாயத்திற்குத் தனிமனிதன் கடன்படுகின்றான். கடமையைச் சரிவரச் செய்கின்ற மனிதன் சமுதாய வளர்ச்சிக்குத் துணை செய்கின்றான். இதனால் சமுதாயம் தனிமனிதனுக்குக் கடன்

16. Madan G. Gandhi, "Gandhi and Marx" - p. 94

படுகின்றது. தனிமனிதன் சமுதாயத்தையும் சமுதாயம் தனிமனிதனையும் சார்ந்திருப்பதே உண்மை நிலையாகும்.

## VI நாகரிகமும் பண்பாடும்

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியை அதன் நாகரிகமும் பண்பாடும் காட்டுகின்றன. இதனால்தான் சமுதாயச் சிந்தனையாளர்கள் எல்லாம் தாங்கள் விரும்புகின்ற நாகரிகமும் பண்பாடும் எப்படி இருக்க வேண்டுமென்பதை வரையறுத்துக் கூறியிருக்கின்றனர்.

கார்ல் மார்க்ஸ் ஒருவகையில் முதலாளித்துவ அமைப்புமுறை உருவாக்கியிருக்கின்ற பொருள்சார் நாகரிகத்தை ஏற்றுக்கொள்கின்றாரென்று கூறலாம். உற்பத்தியை எந்த அளவுக்கு வேண்டுமானாலும் பெருக்கலாம். எதை வேண்டுமானாலும் உற்பத்தி செய்யலாம். முதலாளித்துவத்தில் பொருள்வளம் சிலருக்குத்தான் கிடைக்கும். மார்க்ஸ்காணும் பொதுவுடைமைச் சமுதாயத்தில் பொருள்வளம் அனைவருக்கும் சமமாகக் கிடைக்கும். இதுதான் வேறுபாடு. உற்பத்தி முறைகளிலோ, உற்பத்தி செய்கின்ற பொருட்களின் இயல்பிலோ வேறுபாடு இருக்குமென்று கூறமுடியாது.

மது போன்ற மனிதநலனைக் கெடுப்பவற்றையும் உற்பத்தி செய்வதை மார்க்ஸ் ஒதுக்க வேண்டுமென்று கூறவில்லை. மது போன்றவற்றை நாகரிகத்தின் பெயரால் பயன்படுத்துவதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. மனிதன் எவ்வளக்கெவ்வளவு பொருட்களைப் பயன்படுத்துகின்றானோ, அந்த அளவிற்கு அவனது நாகரிகமும் பண்பாடும் உயர்ந்திருக்குமென்று கருதுவதைப் போல மார்க்சின் கருத்துக்கள் உள்ளன.

காந்தியடிகள் அளவுக்கதிமாகப் பொருட்களைப் பயன்படுத்துவது மனிதனின் ஆன்மீக வளர்ச்சிக்கு கேடு செய்யுமென்ற கருத்தைக் கொண்டிருக்கின்றார். எளிமையான பற்றற்ற (Aparigraha) வாழ்க்கையே ஆன்மீக முன்னேற்றத்திற்கு ஏற்றதென்று எண்ணுகின்றார்.

பொருள் சார்ந்த புற நாகரிகம் மனிதப் பண்பைக் கெடுத்துவிடுகின்றது. மேலை நாட்டவரின் நாகரிகத்தைக் கண்மூடித்தனமாக இந்தியா பின்பற்றியதால்தான் அது வீழ்ச்சியடைந்ததென்று காந்தியடிகள் கருதுகின்றார். இன்றைய 'ஆரவாரமான' 'போலியான' 'புற்றுநோய் போலாகிவிட்ட' நாகரிகத்தைப் பற்றி, ''இதில் வாழ்கின்றவர்கள் உடலின்பம் ஒன்றையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கருதுகின்றார்கள் ...... ஒழுக்கத்தைப் பற்றியோ அல்லது சமயத்தைக் குறித்தோ நாகரிகம் அக்கறை கொள்ளுவது இல்லை.........குடும்பங்களில் ராணிகளாக இருக்கவேண்டிய பெண்கள் தெருக்களில் அலைகின்றார்கள்; அல்லது தொழிற்சாலைகளில் அடிமைகள் ஆகிவிடுகின்றனர்'',[17] என்று கூறுகின்றார்.

காந்தியடிகள் 'நயத்தக்க நாகரிக'மாக எதனைக் கருதுகின்றாரென்பதையும் தெளிவாக விளக்கியிருக்கின்றார். ''மனிதனுக்கு கடமையின் வழியைக் காட்டும் ஒழுக்க முறையே நாகரிகம். கடமையைச் செய்வதும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதும் ஒன்றுக்கொன்று பொருத்தமானவை. ஒழுக்கத்தைக் கைக்கொள்வதென்பது நம் மனத்தையும் நமது விருப்பங்களையும் அடக்கி ஆள்வதாகும்'',[18] என்று அண்ணல் கூறுகின்றார்.

மனிதன் நாகரிகத்தின் பெயரால் விருப்பங்களைப் பெருக்கிக்கொண்டே செல்வதால்தான் இன்றையப் பொருளாதாரத்தை இயக்குகின்ற சக்தியாக தன்னலம் இருக்கின்றது. இதுவே 'எப்படியாவது' உடைமையையும், வருவாயையும் பெருக்க வேண்டுமென்ற தீவிரத் தூண்டுகோலாகின்றது. மற்றவர்களின் நலனைப்பற்றிக் கவலைப்படாமல் செயல்படுவதால், சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வும் அதன் விளைவாகத் துன்பங்களும் துயரங்களும் பெருகுகின்றன.

அளவின்றி பொருட்களை நுகர்கின்றவனின் மனம் ''அமைதியற்ற பறவை''யாகின்றது. அமைதியற்ற தனிமனிதர்களைக் கொண்ட சமுதாயம் அமைதியாக வாழ முடியாது.

17. இந்திய சுயராஜ்யம், ப. 59-61.

18. இந்திய சுயராஜ்யம், ப. 99.

மனிதனை விலங்கு நிலைக்கு மாற்றுவதாகச் சமுதாய, பொருளாதார அமைப்பு இருக்கக் கூடாது. அவனிடமிருக்கின்ற உயர்ந்த பண்புகளை வளர்ப்பதாகச் சூழ்நிலை அமைய வேண்டும். நகரச் சூழ்நிலை மனிதப் பண்பைக் கெடுக்கின்றது. மனிதர்கள் கூடி நெருக்கமாக வாழ்ந்தாலும், இதயங்களுக்கிடையில் இடைவெளி மிகுதியாக இருக்கின்றது. இதனால்தான் மகாத்மா கிராம சமுதாயச் சூழலில்தான் உண்மையான நாகரிகம் வளருமென்று கருதுகின்றார். மனிதத் தொடர்புகள் அன்பின் அடிப்படையில் அமைகின்றபொழுது, ஒருவன் தானும் வளர்ந்து, மற்றவர்களின் வளர்ச்சிக்கும் துணைசெய்வான்.

கார்ல்மார்க்ஸ் பற்றாக்குறை இல்லாத வளமான சூழ்நிலை அமைந்துவிட்டால் அனைவரும் நல்லவர்களாகச் செயல்படுவார்களென்று கருதுகின்றார். காந்தியடிகள் அனைவருக்கும் பொருள்வளம் கிடைத்தபோதிலும், மனித மனம் பண்படாவிட்டால் போராட்டங்கள் தொடருமென்று எண்ணுகின்றார். இதனால் சர்வோதயத் தத்துவத்தில் நாகரிகம் பற்றிய தனிக்கண்ணோட்டம் சிறப்பிடம் பெறுகின்றது.

## VII மாற்ற வழிமுறைகள்

இருக்கின்ற சமுதாயத்தை மாற்றிப் புதியதொரு ஒப்பற்ற சமுதாயத்தை உருவாக்க நினைத்த காந்தியடிகளும் கார்ல்மார்க்சும், எப்படி இந்த மாற்றத்தை ஏற்படுத்துவது என்பதில் மிகுந்த வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர். இதற்கு முதன்மையான காரணம் இருவரின் நம்பிக்கை வேறுபாடுகளாகும். ஆன்மாவை அடிப்படையாக அண்ணல் நம்புவதும், பொருளையும், பொருள்வழித் தொடர்புகளையும் ஆற்றல்மிக்கவைகளாக மார்க்ஸ் நம்புவதும் அணுகுமுறையில் வேறுபாட்டைத் தோற்றுவிக்கின்றன. வாழ்ந்த காலச் சூழலும், வாழ்க்கைக் கண்ணோட்டமும் அவர்களது சிந்தனையில் ஆதிக்கம் செலுத்தியிருப்பதை அவர்கள் கூறிய வழிமுறைகள் காட்டுகின்றன.

ரிச்சர்டு பி. கிரக், ''காந்தியும் மார்க்சும் ஏழைகளின் துன்பத்தையும், அவர்களுக்கு இழைக்கப்படுகின்ற

அநீதியையும்கண்டு மிகவும் மனம்நெக்குருகிப்போனார்கள். மார்க்ஸ் அதிகாரத்திலிருப்பவர்களின் மீது ஆத்திரமும், கோபமும், வெறுப்பும் கொண்டார். காந்தி எல்லா மனிதர்களிடமும் அன்போடும், அருளோடும் நடந்து கொண்டார். மார்க்ஸ் ஒரு கோபக்காரர்; காந்தி அன்பு கொண்டவர். மார்க்ஸ் தவறுகளை நேர்செய்ய வன்முறையை வழியாகக் கூறுகின்றார். காந்தி அகிம்சை முறையில் எதிர்ப்பதையும், அன்போடு இணங்கச் செய்வதையும் பின்பற்றினார்; மற்றவர்களையும் பின்பற்றும்படி கூறினார். மார்க்ஸ் தனது வாழ் நாளில் சாதித்ததைவிட காந்தி மிகுதியாகச் சாதித்ததாக நான் எண்ணுகின்றேன். மார்க்சின் சிந்தனையின் பயனைவிட காந்தியின் கருத்துக்களும், செயல்முறையும் எதிர்காலத்திற்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்குமென்று நான் கருதுகின்றேன்'',[19] என்று கூறுகின்றார்.

இன்றைய முதலாளித்துவத்தின் சுரண்டலுக்கு போராட்டத்தின் மூலமாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய தேவையை காந்தியடிகளும் மார்க்சும் உணர்ந்த போதிலும் எப்படிப் போராடுவது என்பதில் கருத்து வேறுபாடு கொள்கின்றனர்.

கார்ல் மார்க்ஸ் வகுப்புப் போராட்டத்தைத் தவிர்க்க முடியாததெனக் கருதுவதால் வன்முறைப் புரட்சியின் மூலமாகத்தான் அநீதிகள் நிறைந்த முதலாளித்துவ அமைப்பை மாற்றி நீதியுள்ள அமைப்பை உருவாக்க முடியுமென்று கூறுகின்றார். இங்கிலாந்து போன்ற முன்னேறிய நாட்டில் பாராளுமன்ற சீர்திருத்தங்களின் மூலம் மாற்றம் ஏற்படலாமென்று கருதிய போதிலும், சுரண்டப்படுகின்ற தொழிலாளர் இனம் கருவிகளைத் தாங்கிப் போராடத் தயாராக வேண்டுமென்று வலியுறுத்துகின்றார். இன்றும் பொதுவுடைமையினர் வன்முறைப் போராட்டத்திற்கு ஆதரவு தருவதைக் காண்கின்றோம்.

மகாத்மா அகிம்சைப் போராட்டங்களான ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம் போன்றவற்றின் மூலமாகச் சுரண்டலையும், அநீதிகளையும் மாற்ற முடியுமென்று நம்பு

19. Richard B, Gregg, "Which Way Lies Hope?" - p. 102

கின்றார். ஆன்மீக நம்பிக்கையின் காரணமாக மனமாற்றத்தைச் சிறந்த வழிமுறையாகக் கருதுகின்றார். சுரண்டப்படுகின்றவர்கள் அறியாமையினாலும், அச்சத்தினாலும் சுரண்டலுக்கு ஒத்துழைப்புத் தருவதாலேயே சுரண்டல் தொடர்ந்து நடைபெறுகின்றதென்பது அண்ணலின் கருத்தாகும். ஆதலால் உழைப்பவர்களின் மனத்தில் அச்சத்தைப் போக்கி, தங்களது கால்களிலேயே நின்று கொண்டு அறப்போராட்டம் நடத்துகின்றவர்களாக மாற்றிவிட்டால் சமுதாயம் மாறிவிடுமென்று நம்புகின்றார்.

மக்களுக்குள் நெருங்கிய தொடர்புள்ள, வேளாண்மை, கதர், கிராமத் தொழில்களைக் கொண்ட சிறிய, பரவல் முறைப் பொருளாதார அமைப்பில் மக்களுக்குள் வகுப்பு வேறுபாடுகளோ, போராட்டங்களோ புரட்சியோ ஏற்படாதென்பது அண்ணலின் கருத்தாகும்.

குருதிகொட்டுகின்ற வன்முறைப் புரட்சியை சிறந்த சமுதாய மாற்ற முறையாக இன்றைய அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. வன்முறை மனிதனை விலங்கு நிலைக்குத் தாழ்த்திவிடுகின்றதென்பதைச் சுட்டிக் காட்டுகின்றனர். வன்முறையின் மூலமாக அமைகின்ற சமுதாய மன்றத்தைத் தொடர்ந்து வன்முறையின் மூலமாகவே கட்டிக் காக்கவேண்டியிருப்பதால், புரட்சியின் நோக்கங்களே செயல்படாமல் போவதை வரலாறு காட்டுகின்றது. "வெறுப்பைத் தூண்டவும், விரும்புகின்ற ஒரு வகை அமைப்பை ஏற்படுத்தவும், அல்லது அரசியல் நோக்கங்களை அடையவும்மனிதன் உருவாக்கியசொல்தான் வகுப்புப் போர் (Class War). மார்க்சும் ஏஞ்செல்சும் இந்தக் கோட்பாட்டை உருவாக்குவதில் எவ்வளவோ உண்மையாக இருந்த போதிலும், நடைமுறையில் இது மனித குலத்தை சர்வாதிகாரத்தை நோக்கியும், அடிமைத்தனத்தை நோக்கியும் தள்ளுகின்றது",[20] தீக்ஷித் என்பவர் கூறுகின்றார்.

காந்தியடிகள் தர்மகர்த்தா முறையைச் (Trusteeship) செல்வர்கள் மனம்மாறி ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கருதுகின்றார். தனியார் கையிலிருக்கின்ற

20. G. N. Dikshit, "Gandhi's Challenge to Communism" p. 133

செல்வத்தையும், அதனைச் சார்ந்து கிடைக்கின்ற செல்வத்தையும், அதனைச் சார்ந்து கிடைக்கின்ற செல்வாக்கையும், அதிகாரங்களையும் அரசின் கைக்கு மாற்றுவதால் தனியார் முதலாளித்துவத்திற்குப் பதிலாக அரசின் முதலாளித்துவம் தோன்றுகின்ற இடர்பாடு இருக்கின்றன. மனமாற்றமில்லாமல் ஆளை மாற்றுவதால் மட்டும் சமுதாய மாற்றம் ஏற்பட்டுவிடுவதில்லை. இதனால் தான் மனமாற்றத்திற்கு காந்தியடிகள் முதலிடம் தந்து இருக்கின்றார்.

மனமாற்றம் தானே ஏற்படுமென்று காத்துக்கொண்டு இருக்கும்படி அண்ணல் கூறவில்லை. நிர்மாண ஊழியர்கள் அதற்கான செயல்திட்டங்களோடு பணியாற்ற வேண்டும். மனமாற்றத்தை ஏற்படுத்த அறப் போராட்டங்களை மேற்கொள்ளலாம். மக்கள் சக்தியைத் தோற்றுவிக்கலாம். தேவையானால் சட்டத்தின் மூலமும் மாற்றங்களைக் கொண்டுவரலாமென்பதை மகாத்மா ஏற்றுக் கொள்கின்றார்.

அண்ணலின் தர்மகர்த்தாக் கொள்கை (அறங்காவலர் தத்துவம்) நமது நாட்டின் மரபையும், பண்பாட்டையும், ஆன்மீக நெறியையும் ஒட்டி உருவாக்கப்பெற்ற தத்துவம். சிலர் காந்தியடிகள் இருக்கின்ற அமைப்பு முறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த விரும்பாததாலேயே தர்மகர்த்தா முறையைக் கூறினாரென்று தவறாகக் கருதுகின்றனர். ''காந்தியடிகளின் தர்மகர்த்தா முறை முதலாளித்துவத்தை தொடர்ந்து வாழச் செய்கின்ற முயற்சி அல்ல. மாறாக, சமதர்மத்தை அடையவும், அதற்காக முயல்வதன் தரத்தை உயர்த்தவும் அது ஒரு முயற்சியாகும்'',[21] என்று ஓர் ஆய்வாளர் கூறுகின்றார்.

காலப்போக்கில் மனிதனின் அறிவாற்றல், ஆன்மீக வளர்ச்சிக் கேற்ப வழிமுறைகளையும் மாற்றிக் கொள்ள வேண்டியதிருக்கின்றது. இதனால்தான் அன்பு வழியான தர்மகர்த்தா முறை வன்முறையைவிடச் சிறந்த முறையாகக் கருதப் பெறுகின்றது. ''தர்மகர்த்தாக் கருத்து வகுப்புப் போராட்டத்திற்கு ஒரு விடையாக அமைந்திருக்

21. Kamala Gadre, "The Coming Struggle for Trusteeship" p. 3

கின்றது. இனங்களுக்கிடையில் ஓர் இணைப்புச் சக்தியாக இது திகழ்கின்றது. இது அரசின் ஆற்றலையல்ல, மக்களின் ஆற்றலையே வலியுறுத்துகின்றது. வகுப்பு முரண்பாடுகளை சமுதாயத்தின் ஒப்புதலின் மூலம் தீர்த்துக்கொள்ள இது வழிவகுக்கின்றது'',[22] என்கின்றார் பந்தான சர்க்கார் என்பவர்.

பொதுவுடைமைத் தத்துவத்தின்படி, ஒரு சில மனிதர்கள் அந்தத் தத்துவத்தை ஏற்றுக்கொண்டாலும் சமுதாயம் மாறுதவரை அவர்கள் தங்களது வாழ்க்கை முறையில் மாற்றத்தைக் கொண்டுவர இயலாது. ஆதலால் அவர்கள் சமுதாய மாற்றத்திற்கு முயன்று கொண்டு சூழ்நிலை மாறுகின்றவரைக் காத்திருக்க வேண்டும்.

காந்தியடிகளின் தத்துவத்தின்படி எந்தத் தனி மனிதனும் சமுதாயம் ஒட்டு மொத்தமாக மாறுகின்ற வரை காத்துக் கொண்டிருப்பது தேவையில்லை. ''காந்தியடிகளின் செயல் திட்டத்தைப் பின்பற்றுகின்றவர் பேரளவு மொத்தப் புரட்சிக்காகக் காத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அவர் தனக்குள்ளேயே ஒரு புரட்சியைத் தொடங்கி, தனது கைகளாலேயே அதனைச் செயல்படுத்தலாம்'',[23] என்று கிரக் கூறுவது இங்கு வலியுறுத்தப் படவேண்டிய கருத்தாகும்.

அண்ணலின் சமுதாய மாற்றத்திட்டத்தின் அடிப்படையாக அவரது ஆதாரக்கல்வி அமைகின்றது. தனி மனிதர்களை உருவாக்க பதினொரு விரதங்களையும், சமுதாயத்தை உருவாக்க நிர்மாணத் திட்டங்களையும் அவர் வழங்கியதிலிருந்து, அண்ணலின் ஆக்க பூர்வ அணுகு முறையை அறிந்து கொள்ளலாம். எப்படி ஒரு பக்கம் ஆக்கப்பணிகளை மேற்கொண்டவாறே, மறுபக்கம் போராட்டங்களை நடத்துவதென்பதைக் காந்தியடிகளே செய்து காட்டினார். வினோபாபாவே உருவாக்கிச் செயல் படுத்திக் கொண்டுவரும் பூமிதான, கிராமதான, சாந்தி சேனைத் திட்டங்கள் அண்ணலின் சமுதாய மாற்றத்

22. Bandana Sarkar, "Towards Trusteeship" (Introduction) p.XXXI

23. Richard B. Gregg, "Which Way Lies Hope?", p. 206.

திட்டங்களின் தொடர்ச்சியாகும். இவை எல்லாம் மார்க்ஸின் முறைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டவைகளாகும்.

## VIII புதிய சமுதாயத்தின் நோக்கம்

கார்ல் மார்க்ஸ் இரண்டு போரிடுகின்ற இனங்களைக் கொண்ட முதலாளித்துவ அமைப்பு முறையை அழித்துவிட்டு உழைப்பாளிகளை மட்டும் கொண்ட ஒரு சமுதாயத்தை அமைக்க விரும்பினார். மார்க்ஸ் உழைப்பாளிகளாகத் தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற பாட்டாளிகளைத்தான் முதன்மையாக எண்ணினார். அவருடைய வரலாற்றுக் கண்ணோட்டப்படி முதலாளித்துவம் முழு வளர்ச்சி பெற்ற நிலையில் முதலாளிகள் தொழிலாளிகள் என்ற இரண்டு இனங்கள்தான் இருப்பார்கள். அவர்களில் முதலாளிகள் இல்லாத சமத்துவ சமுதாயமாகப் பொதுவுடைமைச் சமுதாயம் இருக்குமென்பதே மார்க்ஸின் கருத்து.

நமது நாட்டில் தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்றவர்களைவிட வேளாண்மைத் துறையிலும், சிறு தொழில்களிலும் பணியாற்றுகின்றவர்கள் மிகுதியாக இருக்கின்றனர். இதுதான் பின்தங்கிய நாடுகளின் நிலை. இவர்களைப் பற்றிய ஒரு தீர்க்கமான கண்ணோட்டம் மார்க்ஸிடம் உருவாகவில்லை.

''சமுதாயத்தின் கீழ்நிலையிலுள்ளவர்களை உயர்த்துவதுதான் மனித இனத்தை உயர்த்துவதென்று அவர் குறிப்பிட்டார். அவருக்கு, சமத்துவம் என்றால் எல்லா வகுப்புக்களின் (Classes) சமத்துவமென்று பொருள்படவில்லை. பிரிவுகளை இல்லாமலாக்குவதுதான் சமத்துவமென்று கருதினார்'',[24] என்று மார்க்சைப் பற்றி ஓர் ஆய்வாளர் கூறுகின்றார். ஓரினத்தை மட்டும் கொண்டதாக இருக்கின்ற சமுதாயத்தில் ''ஒவ்வொருவரும் தங்களது ஆற்றலுக்கேற்றவாறு உழைத்து தேவைக்கேற்றவாறு கூலிபெறுவார்கள்'', என்று மார்க்ஸ் நம்புகின்றார்.

---

24. Indu B. Tikekar, Integral Revolution, p. 81.

கொள்கையளவில் பொதுவுடைமைத் தத்துவத்தை ஏற்றுக்கொண்ட நாடுகளிலும் நடைமுறையில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பதனைக் காண்கின்றேம். ஏற்றத் தாழ்வின் இடைவெளி குறைந்திருக்கின்றது. ஆனல் பணியின் இயல்பாலும், ஆற்றலின் அடிப்படையிலும், அரசியல் செல்வாக்கின் காரணங்களினுலும் மக்களுக்குள் ஏற்றத்தாழ்வு இருப்பதனை அவர்களே ஏற்றுக்கொள் கின்றனர்.

மகாத்மா கண்ட புதிய சமுதாய அமைப்பில் இப் பொழுது இருக்கின்றவர்கள் யாரும் அழிக்கப்பட மாட்டார்கள். சமுதாயத்திலுள்ள எல்லோரின் நன்மை யும் கட்டிக் காக்கப்பெறுகின்ற "சர்வோதய அமைப்பையே முதலாளித்துவத்திற்கு மாற்ருகக் கூறிஞர்.

"காந்தியப் பொருளாதாரக் கருத்துக்களின் மைய மாக உழவனும் வேளாண்மைக் கூலியும் இருக்கின்றனர். அவர் கதர் கிராமக் கைத்தொழில்களைச் சார்ந்த வேளாண்மை நாகரிகத்தின் காப்பாளராக இருந்தார்"[26], என்று விசுவநாத் பிரசாத் வர்மா கூறுவது குறிப்பிடத் தக்கதாகும். காந்தியடிகள் தான் அமைக்க விரும்பிய சர்வோதய சமுதாயத்தில் 'உடல் உழைப்பு' பொது விதியாக இருக்குமென்று கருதிஞர். எல்லோரும் உழைத்து வாழ்கின்ற வகையில், இன்றைய சமுதாய மக்களின் மனத்திலும், சமுதாய அமைப்பிலும் புரட்சிகர மான மாறுதல்களைக் கொண்டுவர அண்ணல் விரும்பிஞர்.

எந்த ஒரு தனிமனிதனையும் இழந்து காந்தியடிகள் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குவதை அவர் நம்பிய தத்துவத்தின் அடிப்படையில் அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இதனை டாக்டர் குமரப்பா, "காந்தியப் பொருளாதாரம் அற, ஆன்மீக ஆற்றல்களைச் சார்ந்து அமைகின்றது. ஒவ்வொரு தனிமனிதனும் உயர் வானவன். ஒவ்வொருவரும் தெய்வீகத்தன்மையைத் தன்னகத்தே கொண்டவராகவே கருதப்பெறுகின்றனர்.

25. Viswanath Prasad Varma, "The Political Philosophy of Mahatma Gandhi and Sarvodaya".

மனிதனிடமுள்ள அழியாத ஒன்று ஒவ்வொரு தனி மனிதனிடமும் இருக்கின்றது'',[26] என்று விளக்குகின்றார்.

அண்ணல் கோடிட்டுக் காட்டிய சர்வோதய அமைப்பு முறையைப் பலரும் தாங்கள் உணர்ந்து கொண்ட முறையில் விளக்கியிருக்கின்றனர். டாக்டர் வி.கே.ஆர். வி. ராவ் மிகவும் சிறப்பான முறையில் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார் :-

'' காந்திய மாற்று முறை சர்வோதயமாகும். அதாவது எல்லோரின் நலனுக்காகவும் அமைந்த வகுப்புக் களற்ற சமுதாயம். அங்கு வகுப்புப் பிரிவுகள் அழிந்து ஒழியும். ஆனால் அந்தப் பிரிவுகளை உருவாக்கிய தனி மனிதர்கள் அழியமாட்டார்கள். அந்த அமைப்பு முறையில் வளமான பொருளாதாரத்தை உருவாக்க அறிவியலும் தொழில் நுணுக்கமும் பயன்படுத்தப்படும். ஆனால் தனிமனித முன்னேடி முயற்சியோ, வளர்ச்சி உரிமையோ அழிக்கப்படாது. மேலும், மேலும் பொருட் களைப் பெற இடைவிடாது முயல்கின்ற பொருள் நோக்கு மனப்பான்மை இருக்காது. எல்லோருக்கும் சரியான குறைந்த அளவு வருவாய் கிடைக்கின்ற வகையில் பகிர்வு முறை இருக்கும். கணித முறையில் அனைவரையும் சமப் படுத்துவது நோக்கமல்ல. தனியார் சொத்தையும், திறமையையும் குறிப்பிட்ட அளவுக்குமேல் தனிப் பட்டோர் ஆதாயத்திற்காகப் பயன்படுத்தாமல் பொது நன்மைக்காகப் பயன்படுத்துவார்கள். அங்கு அனைவரும் உழைப்பார்கள். மதிப்பிலோ கிடைக்கும் வாய்ப்பிலோ தனிமனிதர்களுக்கிடையில் வேறுபாடு இருக்காது. அரசியல் அமைப்பிலோ இணங்கச் செய்வதன் மூலமாகவே மாற்றம் ஏற்படும். கருத்துவேறுபாடுகளைப் பேசித் தீர்த்துக் கொள்வார்கள். எண்ண மோதல்களை அன்பாலும், மற்றவர்கள் மீது கொண்ட ஈடுபாட்டாலும் தீர்த்துக்கொள்வார்கள்''.[27]

மார்க்ஸின் சமுதாய அமைப்பு முறை சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு ஏற்றதாக இருக்கும். பெரும்பாலான

26. I. C. Kumarappa, "Gandhian Economic Thought", p. 85.
27. Dr. V. K. R. V. Rao, "The Gandhian Alternative to western Socialism" p. 47.

வர்களின் நல்வாழ்விற்குத் தடையாக இருப்பவர்களைக் 'களைகட்டுதல்' போன்று அரசு நீக்கிவிடும். ஆனால் காந்திய அமைப்பில் தனிமனிதனும் சமுதாயமும் இணைந்து முன்னேறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கும்.

வெறுப்புக்கு மாற்றாக அன்பையும், போட்டியின் இடத்தில் ஒத்துழைப்பையும், தன்னலத்திற்குப் பதிலாகத் தியாகத்தையும், புற ஆரவாரத்தை ஒதுக்கி அக நாகரிகத்தையும் சர்வோதய சமுதாயம் உருவாக்க முயல்கின்றது. ஆதாரக் கல்வி இதற்கேற்ற கருவியாகும். சுரண்டலற்ற சர்வோதய சமுதாயம் உலகிற்கு வழிகாட்டக் கூடியதாகும்.

## IX சமுதாய அமைப்பு

கார்ல் மார்க்ஸ் பொருளாதாரச் சுரண்டலைத் தவிர்த்து விட்டால் மிகுதியான சிக்கல்களில்லாத சமநிலைச் சமுதாயம் அமைந்துவிடுமென்று கருதுகின்றார். அந்தச் சமுதாயம் பெரிய தொழில்களைக் கொண்ட நகர சமுதாயமாக இருந்தாலும் அதனால் கேடில்லை என்பதே மார்க்ஸ் கொண்ட கருத்தாகும்.

''பொருள்சார்ந்த, இலட்சியமான, நேரடியான, மறைமுகமான, நிலையான, மாறுகின்ற பலவகையான சக்திகள் சமுதாயத்தில் செயல்படுகின்றன. இவையெல்லாம் ஒன்று சேர்ந்துதான் சமுதாய வாழ்க்கையையும், வளர்ச்சியையும் தீர்மானிக்கின்றன. ஆனால் இந்த சக்திகள் சமமான முக்கியத்துவம் கொண்டவையல்ல. இறுதியான, மிகவும் பண்பட்ட ஆன்மீக சக்திகள் உட்பட எல்லாவற்றையும் தீர்மானிக்கின்ற ஒரு சக்தி சமுதாயத்தில் இருக்கின்றது. அந்த சக்திதான் பொருட்களை உற்பத்தி செய்யும் சக்தி. அதுதான் சமுதாய எந்திரத்தின் விசைக்கருவி'',[28] என்று சமுதாய அமைப்பைப்பற்றி பொதுவுடைமையினர் ஒரு தீர்மானமான கண்ணோட்டம் கொண்டிருக்கின்றனர். இதனால் உற்பத்தியையும், உற்பத்தி சக்தியையும்,

28. A. Spirkin, O. Yakhot, "The Basic Principles of Dialectical and Historical Materialism", p. 111.

உற்பத்தித் தொடர்புகளையும் வரையறைகளுக்கு உட்படுத்திக் கட்டுப்படுத்திவிட்டால் சமுதாய வாழ்க்கை சிறந்ததாக இருக்குமென்று நம்புகின்றனர். ஓர் ஆற்றல் மிக்க மையக் கட்டுப்பாட்டின் (Central Control) மூலம் எல்லாவற்றையும் நெறிப் படுத்திவிடமுடியுமென்பது மார்க்சியவாதிகளின் முடியாகும்.

காந்தியடிகள் தான் அமைக்க விரும்பிய சர்வோதய சமுதாயத்தில் மிகவும் நெருக்கமான மனித உறவுகள் இருக்க வேண்டுமென்று கருதுகின்றார். இதயத்தில் ஊற்றெடுக்கின்ற அன்பு என்னும் ஆற்றல்மிக்க சக்தி (Force) அனைவரையும் ஒருங்கிணைக்கின்றதாக இருக்கவேண்டும். இதற்குச் சமுதாயம் சிறிய அலகுகளைக் கொண்டதாக இருக்கவேண்டும். இந்தியாவைப் பொறுத்தவரை அந்த அலகு கிராமமாகும். உலக சமுதாயமே பரவல் முறையில் சிறிய தன்னிறைவு கொண்ட கிராம சமுதாயங்களைக் கொண்டதாக இருக்கலாம்.

மகாத்மா உற்பத்தியின் முக்கியத்துவத்தைப் புறக்கணிக்கவில்லை. உற்பத்திக்கு அடிப்படையான வேளாண்மை, கதர், கிராமக் கைத்தொழில்கள் ஆகியவற்றை மேற்கொள்கின்ற மக்கள் சமுதாயக் கடமை உணர்வோடு செயல்படுகின்ற பொழுது, உற்பத்தி எல்லா மனிதத் தொடர்புகளையும் தீர்மானிக்கின்ற சக்தியாக இருக்காது. மாறாக சமுதாயத் தொடர்புகளில் வெளிப்படுகின்ற கூட்டுறவின் விளைவாக உற்பத்தி நடைபெறும்.

காந்தியடிகள் வேளாண்மை, கைத்தொழில்களைச் சார்ந்த கிராம சமுதாய நாகரிகம் உயர்வானதாக ஒப்பற்றதாக இருக்குமென்று நம்புகின்றார். கண்மூடித்தனமாக மேலை நாட்டினரைப் பின்பற்றி அமைக்கின்ற நகர நாகரிகத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ''மேற்கத்திய நாகரிகம் நகர்மயமானது.........இதுவரை நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள ஏற்ற வகையில் அமைந்த பழமையான கிராமிய மரபுகளைக் கொண்ட, எண்ணற்ற மக்கள் தொகையைப் பெற்ற ஒரு பெரிய நாடு மேற்கத்திய முறையைப் பின்பற்ற வேண்டிய தேவையில்லை;

வேண்டவும் வேண்டாம். ஒருவகையான சூழ்நிலையில் அமைந்த ஒரு நாட்டிற்கு நல்லதாக இருக்கும் ஒன்று வேறு வகைச் சூழ்நிலைகளைக் கொண்ட மற்றொரு நாட்டிற்கும் நல்லததாகஇருக்கவேண்டுமென்பதில்லை'',[29] என்று காந்தியடிகள் கூறியிருப்பது குறிப்பிடத்தக்க தாகும்.

கார்ல் மார்க்ஸ் ஒரு பொருளியல் நிபுணர் என்ற முறையில் பொருளாதார சக்தியின் மூலத்தை மையமாகக் கொண்டு சமுதாயத்தை நோக்கினர். சமுதாயத்திலுள்ள மனிதத் தொடர்புகளை ஒரு கோணத்திலிருந்து மட்டும் கண்டதற்கு அவரது இலண்டன் வாழ்க்கை ஒரு காரண மாக இருந்திருக்கலாம். ஆனல் காந்தியடிகளோ சமுதாயத்தின் தொடர்புகளைப் பல நிலைகளிலிருந்து கண்டார். தென்னப்பிரிக்காவில் இந்தியர்கள் பட்ட துன்பத்தை அவரும் அனுபவித்தார். தீண்டாமை போன்ற சமுதாயச் சீர்கேட்டின் மூலத்தை அவரால் உணர முடிந்தது. சாதி சமய வேறுபாடுகளினல் சண்டை யிடுகின்ற மக்களை உற்பத்தித் தொடர்புகள் மட்டும் நிர்ணயிக்கவில்லை என்பதை உணர்ந்தார். அனைவரும் இறைவனின் மக்கள் என்ற உணர்வை வளர்த்து, எல்லோரும் உடன் பிறந்தவர்களாக வாழ அன்பை வளர்க்கின்ற முறையில் சமுதாயத்தின் கட்டுக்கோப்பு அமையவேண்டுமென்பதே அவரது எண்ணமாகும்.

பழங்கால இந்தியக் கிராம சமுதாய வாழ்க்கை சிறந்ததாக அமைந்திருந்தது. தனிமனித வளர்ச்சியை யும், சமுதாய நலனையும் பாதிக்காத வகையில் அன்றைய வாழ்க்கை இருந்ததற்குக் காரணம் அது சிறிய சமுதாய மாக இருந்ததுதான். ஒரு சிற்றூரில் ஒருவர் அனைவரை யும் தெரிந்திருக்கலாம். அந்த நிலையில் மற்றவர்களின் நலனைக் கெடுக்கின்ற 'கலப்படம்' போன்ற இழிசெயலைச் செய்ய மனம் வராது. அப்படி யாராவது செய்தாலும் கண்டு பிடித்து விடலாம். பெருந்தொழில்களைக் கொண்ட 'மனிதக் காடாக' மாறுகின்ற பெரிய நகரங்களில் மனிதர் களும் எந்திரங்களாக — இதயமற்றவர்களாக — மாறி துணிச்சலாக சமுதாயச் சீர்கேடுகளைச் செய்வதனைக் காண்கின்ரேம்.

29. Young India, July 25, 1929.

நாம் அமைக்கின்ற புதிய சமுதாயம் இன்றைய சமுதாயத்தின் சீர்கேடுகளைக் கொண்டதாக இருக்கக் கூடாது. மேற்கத்திய தொழில்மயமான சமுதாயங்களில் சமுதாயக் கட்டுக் கோப்புத் தகர்ந்து, குடும்பப் பிணைப்பு சிதறுவதன் காரணமாக மனமுறிவுக்குப் பலர் இரையாவதையும், அதன் விளைவாக 'ஹிப்பிகள்' போன்றவர்கள் பெருகுவதையும் இன்று நாம் தெளிவாகக் காண்கின்றோம். இன்றைய உலகிலுள்ள பல்வேறு சமுதாயங்களின் அக, புற நிலைகளை ஆராய்கின்றவர்கள் காந்தியடிகள் சமுதாயத்தைப் பற்றிக் கொண்டிருந்த கருத்தின் சிறப்பை உணர்வார்கள்.

## X தொழில் வளர்ச்சி

கார்ல் மார்க்சின் காலத்தில் தொழிற் புரட்சி நடைபெற்று தொழில்களின் அமைப்பு முறையில் அதற்கு முன்பு உலகம் கண்டிராத அளவிற்கு மாற்றம் ஏற்பட்டது. மார்க்ஸ் பெருந்தொழில் வளர்ச்சியை இயல்பான ஒன்றாகக் கருதுகின்றார். மார்க்ஸ் கண்டித்ததெல்லாம் முதலாளித்துவம் தொழில் நுட்பத்தைக் கருவியாகக் கொண்டு தொழிலாளர்களைச் சுரண்டியதைத்தான். எப்படிப்பட்ட தொழில் நுட்பத்தை, எந்த வகையில், எந்த அளவிற்கு வளர்க்கலாமென்ற நுணுகிய ஆய்விற்கு ஒரு வேளை அந்தக் காலச்சூழல் வாய்ப்பளிக்காமலிருந்திருக்கலாம். பெருந்தொழில் வளர்ச்சியால் ஏற்பட்ட போட்டிப் பொருளாதாரம், தொழிலாளி முதலாளி போராட்டம், இலாப நோக்கில் ஆடம்பரப் பொருட்களை உற்பத்தி செய்து குவித்தல், அங்காடிகளைப் பிடிப்பதில் தோன்றிய போட்டிகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், எழுந்த முற்றுரிமைகள், வாணிபச் சுழற்சிகள், சுரண்டல்கள்—ஆகிய அனைத்திற்கும் முதலாளித்துவ அமைப்பு முறைதான் காரணமென்று எண்ணியதால், அமைப்பு முறை மாறிவிட்டால் தொழில்மயமான போக்கிலிருந்த குறைகள் நீங்கிடுமென்பது மார்க்சியச் சிந்தனையாக வளர்ந்திருக்கின்றது.

''மார்க்ஸ் கூறியது போல, முதலாளித்துவத்தின் கீழ் பொறியானது தொழிலாளர் உற்பத்தித்திறனை அதிகரிக்க

வும், உபரி மதிப்பை உண்டாக்கவும் கூடியதொரு வழியாக இருக்கிறது. இவ்வித இரட்டையான, மிக ஆழ்ந்த முரண்பாடுடைய தொழில் நுட்பவியலின் பங்கு முதலாளித்துவம் அழிக்கப்பெறும்போது மறைகிறது. முதலாளித்துவத் தளைகளில் இருந்து தொழில் நுட்ப வியலைச் சோஷலிசம் விடுவிக்கிறது. இதன் பயனாக அது வளருவதற்குரிய வரம்பற்ற வாய்ப்பை வகுத்துத் தரு கிறது. மனிதனை அடிமை கொள்ளும் பேய்ச்சக்தியாக இராமல் அவனது விடுதலைக்கும், முன்னேற்றத்துக்கும் உரிய மகத்தான சக்தியாகத் தொழில்நுட்பவியல் முதன் முறையாக மாறுகிறது. உபரி மதிப்பை உண்டாக்கும் வழியாக இருப்பதிலிருந்து, பொறியானது மக்களின் நலத்தை மேம்படுத்தும் வழியாக மாறுகிறது'',[30] என்று பொதுவுடைமையினர் விளக்கம் கூறுகின்றனர். இதனால் தான், ''பொதுவுடைமையினர் தொழில்மயமாக்குதலின் கோபுரத்தை வழிபடுகின்றனர்'',[31] என்று ஒரு ஆய்வாளர் கூறுகின்றார்.

காந்தியடிகள் பெரிய எந்திரங்களின் துணையோடு இயங்குகின்ற 'இராட்சத' தொழில்களைக் கொண்ட அமைப்பு முறையினுள் இயல்பாக அடங்கியிருக்கின்ற குறைகளையும், தீங்குகளையும் உணர்ந்து உலகிற்குச் சுட்டிக் காட்டுகின்றார். சிலர் சாடுவதைப் போல காந்தி யடிகள் எந்திரங்களையே ஒட்டு மொத்தமாக வெறுக்க வில்லை. நமது உடலும். இராட்டையும் கூட எந்திரங்கள் தான் என்பதைக் கூறியே, எந்த வகையான எந்திரங் களைத் தவிர்க்க வேண்டுமென்பதைச் சுட்டிக் காட்டு கின்றார்.

குவிதல் முறையில் அமையும் பெருந்தொழில்கள் நகர நாகரிக வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றன, இயற்கை யோடு போரிடுகின்ற வகையில், உலகையே செயற்கைப் பொருட்களால் நிரப்புகின்றன. ஆடம்பர வாழ்க்கையில் திளைக்கின்ற மனிதனின் மனத்தில் மோகத்தை வளர்த்து அவனது உடலையும் உள்ளத்தையும் நோய்க்குள்ளாக்கு

30. எல். லியான்டியாவ், ''மார்க்ஸீய அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைகள்'', (தமிழாக்கம் : தா. பாண்டியன்) ப. 171.

31. G. N. Dikshit, "Gandhiji's Challenge to Communism", p. 170.

கின்றன. இவற்றை எல்லாம் எண்ணிப்பார்த்தே அண்ணல் எந்திரங்களைப் பற்றிய தனது கருத்துக்களைக் கூறுகின்றார்.

காந்தியடிகள் எந்திரமயமாக்குதலைப் பற்றிக் கொண்டிருந்த கருத்தை விளக்கும் வகையில், ''உண்மையில், எல்லா மக்களுக்கும் குறைந்த அளவு பொருள் தேவையை அளிக்கின்ற பொருளாதார முறையை ஆதரிக்கின்றார். ஆனால், வளர்ந்து வருகின்ற மனித விருப்பங்களை தவிர்க்க இயலாத முறையில் எந்திரமயமாக்கல், தொழில் மயமாக்கல், நகர்மயமாக்கல், ஆகியவற்றின் மூலம்தான் அளிக்கமுடியுமென்ற கோட்பாட்டைத்தான் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை'',[32] என்று டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் கூறுகின்றார்.

எந்திரங்களைப்பற்றிய காந்தியடிகளின் கண்ணோட்டம் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் வளர்ச்சி பெற்றிருப்பதைக் காண்கின்றோம். சிங்கர் தையல் எந்திரத்தைப் போன்று மனித உழைப்பிற்குத் துணை செய்கின்ற கருவியை அவர் வரவேற்கின்றார். ஆனால் மனிதனின் எந்த உறுப்பையும் முடமாக்கும் முறையிலோ, மனிதனையே அடிமையாக்கும் வகையிலோ அமைகின்ற எந்திரங்களை அவர் வன்மையாகக் கண்டிக்கின்றார்.

''தொழில்மயமாக்குவதென்பது அழிவை வரவேற்பதாகும். இன்றுள்ள துன்பம் ஐயமின்றி தாங்க முடியாததுதான். இல்லாமை போகவேண்டும். ஆனால் தொழில்மயமாக்குவது அதற்குத் தீர்வல்ல,''[33] என்றும், ''தொழில்மயமாக்குதல் மனித இனத்திற்கு ஒரு சாபக்கேடாக இருக்கின்றதென அஞ்சுகின்றேன். ஒரு நாட்டை மற்றொரு நாடு சுரண்டுவது எல்லாக் காலங்களிலும் நடக்க முடியாது. தொழில்மயமாக்குவதென்பது உங்களுடைய சுரண்டும் ஆற்றலையும், வெளிச்சந்தை கிடைப்பதையும், போட்டியற்ற நிலையையும் சார்ந்து அமைகின்றது'',[34] என்று கூறுவதும் எந்திரத்திலுள்ள—

32. V. K. R. V. Rao, "The Gandhian Alternative to Western Socialism", p. 9

33. Young India, October 7, 1926.

34. Young India, November 12; 1931

தொழில்மயமாக்குவதிலுள்ள—கேட்டைச் சுட்டிக் காட்டுகின்றன.

காந்தியடிகள் எண்ணற்ற மக்கள் தொகையைக் கொண்ட நமது கிராம இந்தியாவிற்குப் பரவல் முறையில் அமைகின்ற கதர், கிராமக் கைத்தொழில்களே ஏற்றதென்று கருதுகின்ருர். இடைக்காலத்தில் பெருந்தொழில்களின் மூலமாகவே நகரங்கள் கிராமங்களைச் சுரண்டத் தொடங்கின. மேற்கத்தியக் கல்விமுறையும், நாகரிகத்தைப்பற்றிய தவருன கண்ணேட்டமும், போக்குவரத்து வசதிகளின் பெருக்கமும் கிராமங்களிலிருந்து செல்வத்தை நகரங்களுக்கு அள்ளி வருகின்ற வழிமுறைகளாயின.

கிராம சமுதாயம் தன்னிறைவு பெற்றதாகவும், தன் காலில் நிற்பதாகவும், அகிம்சை முறையில் அமைவதாகவும், எல்லோருக்கும் முழுவளர்ச்சிக்கு வாய்ப்பளிப்பதாகவும், சுரண்டலற்றதாகவும், சமுதாயத்தின் கடைநிலையிலிருப்பவர்களுக்கும் வாழ்வளிப்பதாகவும் இருக்க வேண்டுமாஞல், கதர் கிராமக் கைத்தொழில்கள் அங்கு பூத்துக் குலுங்க வேண்டும். மிகுதியான முதலின்றி, உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருட்களை நுகர் பொருட்களாக மாற்றக்கூடிய தொழில்களையே காந்தியடிகள் வலியுறுத்துகின்ருர். இத்தகைய தொழில்களில் முதலாளி-தொழிலாளி போராட்டத்திற்கு வழியில்லை. உற்பத்தியாளரே நுகர்வோராகவும் இருப்பார். போட்டியற்ற கூட்டுறவு சமுதாயத்தை உருவாக்க ஏற்றதாகச் சிறு தொழில்கள் இருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

## XI பொருளாதாரத்தை நெறிப்படுத்துதல்

முதலாளித்துவ சமுதாயத்தை மாற்றிப் புதிய சமுதாயத்தை உருவாக்குகின்ற நிலையிலும், புதிய சமுதாய அமைப்பிலும் பொருளாதாரத்தை நெறிப்படுத்துவது தேவையாகின்றது. கார்ல் மார்க்சின் கருத்துப்படி பொதுவுடைமை (Communism) என்ற இலட்சிய சமுதாயத்திற்கு முன்னேடியாக சமதர்ம (Socialism) சமுதாயம் அமையும். பாட்டாளிகளின் சர்வாதிகார

(Dictatorship of the Proletariat) அரசு மிகவும் ஆற்றல் மிக்கதாகவும் பொருளாதாரத்தின் எல்லா நிலைகளிலும் எல்லாத் துறைகளையும் கட்டுப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். அரசின் கட்டுப்பாடு மிகுகின்ற பொழுது வன்முறை தவிர்க்க முடியாததாகும். ஆனால் தந்நல முதலாளித்துவ அமைப்பில் ஆதாய நோக்கில் செயல் பட்டமனிதர்களை நெறிப்படுத்த வன்முறையைப் பயன் படுத்துவதைப் பொதுவுடைமை ஏற்றுக் கொள்கின்றது.

பொதுவுடைமை, அரசின் மைய நிலைத்திட்டமிட்ட பொருளாதாரத்தை ஏற்றுக் கொள்கின்றது. ''உற்பத்தி ஆதாயத்துக்காக இல்லாமல் பயன்படுத்துவதற்காக அமைகின்ற சமதர்ம சமுதாயத்தில் உற்பத்திக்குத் திட்ட மிடுவது இயலும். உண்மையில், தொழிலை சமுதாய உடைமையாக மாற்றுவதற்கு முன்பே இது இயலும். முக்கிய தொழில்களை சமுதாய உடைமையாக்குவதற்கும், மற்றையவற்றை ஓரளவு நெறிப்படுத்துவதற்கும் முன்பே உற்பத்தித் திட்டத்தை உருவாக்க இயலும். அந்தத் திட்டம் ஆண்டுதோறும் வளரும்'',[35] என்று கூறப்பெறு கின்றது.

முதன்மையான உற்பத்திச் சாதனங்களை எல்லாம் அரசுடைமையாக்குவதிலும், நாட்டின் பொருளா தாரத்தை முழுவதும் ஒரு மையத்திட்டத்தின் கீழ் கொண்டுவருவதிலும் சில அடிப்படைக் குறைகள் இருப் பதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அதிகாரம் எந்த நிலையிலும் ஒரு சிலரிடம் அளவுக்கு அதிகமாகக் குவி கின்ற பொழுது அதனால் சில கேடுகள் ஏற்படுகின்றன. ஆக்டன் (Lord Acton) என்பவர், ''அதிகாரம் சீரழியும் இயல்புடையது. முழுமையான அதிகாரம் மொத்தமாகச் சீரழிகின்றது'', என்று கூறியிருப்பதை வரலாற்று நிகழ்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன.

காந்தியடிகள் பொருளாதாரத் துறைகளை நெறிப் படுத்துகின்ற பணியைச் சிறிய கிராம சமுதாயங்கள் மேற் கொள்ள வேண்டுமென்று கருதுகின்றார். சமுதாய கட்டுப் பாடு (Social Control) சரியான முறையில், அறநெறி

35. Emile Burns, "What is Marxism?" p. 58.

களுக்குட்பட்டு அமையுமானால் சீர்கேடுகள் பெருக வழி இருக்காது. கூட்டுறவு அமைப்பு முறைகள் அவற்றின் கோட்பாட்டின்படி சமுதாய நலனை முன்னிறுத்திச் செயல் படுமானால் பொருளாதார அதிகாரக் குவிப்புக்கு வழி இருக்காது.

காந்தியமும் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்கின்றது. ஆனால் அந்தத்திட்டம் கிராமத் திட்டத்திலிருந்து (கீழ் மட்டத்திலிருந்து) மைய நிலையை நோக்கி (மேல்நோக்கி) வளர்ந்து வருவதாக இருக்க வேண்டும். காந்தியத்திட்டம் பற்றி டாக்டர் ஜே. சி. குமரப்பா, ''இது ஒவ்வொரு மையத்திற்கும் (வட்டாரத்திற்கும்) திட்டவட்டமான விரிவான திட்டத்தைத் தீட்டித்தராது. இது நாம் எது சரியான வழியென்றும், பணி எப்படித் தொடங்கி வளர வேண்டுமென்றும் கருதுகின்றோமோ அதனை மட்டும் கூறும். நமது பொது வழிகாட்டுதலின்படி ஒவ்வொரு வட்டாரமும் கால இடைவெளிகளில் தங்களுக்கு வேண்டிய விரிவான திட்டத்தைத் தீட்டிக் கொள்ள வேண்டும்'',[36] என்று விளக்கம் தருகின்றார்.

ஒரு வட்டாரத்தைத் தனி அலகாகக் கொண்டு பரவல் முறையில் தன்னிறைவை அடைய முயல்கின்ற காந்தியப் பொருளாதாரம் எல்லாவற்றையும் முழுக்கத் தனி மனிதர்களின் கைகளில் கட்டுப்பாடற்ற முறையிலோ, முழு முற்றுரிமையான முறையில் அரசின் கைகளிலோ விட்டுவிடுவதை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த இரண்டு முறைகளிலும் சமுதாயத்தின் பொது நலனும், அதில் அடங்கியிருக்கின்ற தனிமனித நலனும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிக்கப்படுகின்றது. சமுதாயம் கூட்டுறவு முறையில் செயல்படுகின்ற பொழுது குறைகளைக் கண்டுபிடிக்கவும் முயன்று உடனடியாக நீக்கவும் முயல்கின்றது. இயற்கையின் கொடைகளையும், மனிதனின் ஆக்க சக்திகளையும் இணைத்து, மனிதனின் இன்றைய, எதிர்கால நல்வாழ்வை மனத்தில் கொண்டு செயல்பட வேண்டுமென்பதே காந்தியத் திட்டத்தின் நோக்கமாகும்.

36. J. C. Kumarappa, 'An Over all Plan for Rural Development,' p. 41.

## XII உற்பத்தியும் நுகர்வும்

பொதுவுடைமை அமைப்பில் மக்கள் விரும்புகின்ற எதையும், சுரண்டல் இல்லாத வகையில் எவ்வளவு வேண்டுமானாலும் உற்பத்தி செய்யலாம். அதற்கு எந்த உற்பத்தி முறைகளை வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். அதே போன்று மக்கள் தங்களது தேவைக்கு ஏற்ற வகையில் எவ்வளவு பொருட்களை வேண்டுமானாலும் நுகரலாம்.

கார்ல் மார்க்சின் தத்துவத்தின்படி பொருளாதார அமைப்பு முறையிலுள்ள குறைபாடுகள்தான் சமுதாயத்தைப் பாதிக்கின்றன. ஆன்மா இருப்பதை அவர் ஏற்றுக்கொள்ளாததால் நாம் நுகர்கின்ற பொருட்களுக்கும் நமது வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை அவர் எண்ணிப் பார்க்கவில்லை.

காந்தியடிகள் எத்தகைய பொருட்களை எந்த அளவிற்கு உற்பத்தி செய்ய வேண்டுமென்பதிலும், எவ்வளவு நுகரலாம் என்பதிலும் கட்டுப்பாடு வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றார். எடுத்துக்காட்டாக புகையிலை, மது போன்ற மதியைக் கெடுக்கும் போதைப் பொருட்களை உற்பத்தி செய்வதையோ நுகர்வதையோ காந்தியடிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. மனித நலனுக்குத் தீங்கு செய்யும் எதையும் அவர் தனது திட்டத்திற்குள் சேர்த்துக் கொள்ளவில்லை.

நாட்டு மக்களுக்கெல்லாம் இன்றியமையாத தேவைப் பொருட்கள் கிடைக்காத நிலையில் ஒரு சிலருக்காக ஆடம்பர, நாகரிகப் பொருட்களை உற்பத்தி செய்வதை அண்ணல் விரும்பவில்லை. அவரது ''உயர்ந்த சிந்தனையும், எளிமையான வாழ்க்கையும் வேண்டும்'', என்ற கருத்து அவரது வாழ்க்கைத் தத்துவத்தின் அடிப்படையில் பிறந்ததாகும்.

''இன்றைய நாகரிகத்தின் குறிப்பிடத் தக்க இயல்பு மனித விருப்பங்களை அளவின்றிப் பெருக்கிக் கொண்டு போவதாகும்...........எதிர்கால நிலைபற்றியும், இறைத் தன்மை பற்றியும் ஒரு வாழும் நம்பிக்கை இல்லாததால்

தான் தற்கால அல்லது மேற்கத்திய மன நிறைவற்ற நிலை தோன்றுகின்றது'',[37] என்று காந்தியடிகள் கூறுகின்றார். மேலும் மேலும் புலன் நுகர்வில் கட்டுப்பாடின்றி ஈடுபடுகின்றவனின் மனம்நோய்வாய்ப்பட்டதாகின்றது.''போதுமென்ற மனமே பொன் செய் மருந்து'', என்ற பழமொழி இந்த நடைமுறை உண்மையை உணர்த்துகின்றது.

புதிய சமுதாய அமைப்பில் ஆன்மாவின் வளர்ச்சியைக் கெடுக்காத, சமுதாயத்தில் அனைவருக்கும் கிடைக்கின்ற பொருட்களைப் பெற்றுப் பயன்படுத்தும் வாழ்க்கை முறை வேண்டும். அப்பொழுதுதான் போட்டியும் பொருமையும் இல்லாத கூட்டுறவு வாழ்க்கை முறை அமையும்.

## XIII சமயமும் அறமும்

உலகெங்கும் சமயம் சமுதாய வாழ்வில் செல்வாக்குப் பெற்றிருக்கின்றது. சமுதாய வாழ்வின் கட்டுக்கோப்பிற்கும் வளர்ச்சிக்கும் சமயத்திற்குமுள்ள நெருக்கமான தொடர்பு பற்றி அறிஞர்கள் ஆராய்கின்றனர்.

கார்ல் மார்க்ஸ் இன்று நடைமுறையிலுள்ள சமயங்கள் மக்களின் சிந்திக்கின்ற ஆற்றலை - மதியைக் கெடுக்கின்ற அபின்போல இருக்கின்றதென்று கருதுகின்றார். ''மார்க்சியம் எல்லா தற்காலச் சமயங்களையும், ஆலயங்களையும், சமய நிறுவனங்களையும் பூர்ஷுவாக்களின் பிற்போக்கின் கருவியாகவும், சுரண்டலைக் காக்கும் கருவியாகவும், தொழிலாளர்களை அழுத்தும் ஒன்ருகவும் கருதுகின்றது. மார்க்சிற்கு, அற, ஒழுக்கக் கோட்பாடுகளைக் கொண்ட சமயம் மாற்றத்திற்குத் தடையாக இருப்பதாகத் தோன்றுகின்றது. மேலும், சமயம் ஆளும் வகுப்பினரால் மாற்றத்தைத் தடுக்கவும், தங்களது நிலையைக் காத்துக்கொள்ளவும் பயன்படுத்தப்படுவதாகக் கருதுகின்றனர்'',[38] என்று ஓர் ஆய்வாளர் கூறுகின்றார். இதனால்தான் பொதுவுடைமையினர் தங்களது புதிய சமுதாய அமைப்பில் சமயத்திற்கு இடமில்லை என்று கருதுகின்றனர்.

37. Young India, June 2, 1927.
38. Madan G. Gandhi, 'Gandhi and Marx', p. 89.

கடந்தகாலத்தில் சமயத்தைப் பயன்படுத்தி சிலர் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வை உருவாக்கினர். சான்ருக நமது நாட்டில் தோன்றிய சாதிமுறையைக் கூறலாம். பிறப்பால் ஏற்றத்தாழ்வைக் கற்பித்தல், 'விதி' போன்ற கருத்துக்களை வளர்த்தல் ஆகியவற்றைச் சமயம் செய்திருப்பதைப் பொதுவுடைமையினர் சுட்டிக் காட்டுகின்றனர். சமயத்தை அழிப்பது அவர்களுடைய நோக்கமாக இருக்கின்றது.

காந்தியடிகள் சமயத்தைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொண்டு, சமயத்தின் பெயரால் சில கால கட்டங்களில் சிலர் செய்த கொடுமைகளை மறுக்கவில்லை. ஆனல் அவற்றிற்கும் உண்மையான சமயத்திற்கும் தொடர்பில்லை என்பதே அண்ணலின் கருத்தாகும். அடிப்படையான கொள்கைகளில்-சாரத்தில்-எல்லாச் சமயங்களும் ஒன்றுபோல இருப்பதனை உணர்ந்து 'சமய சமத்துவம்' பேசிய காந்தியடிகள் தனிமனித வாழ்விற்கும் சமயம் தேவையானதென்று கருதுகின்ருர். வாழ்க்கையிலிருந்து சமயத்தைப் பிரித்துப்பார்ப்பதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

